உ

சிவமயம்.

# தொண்டைநாட்டு தேவாரம்



இது

காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காமாட்சி அம்மை சமேத ஏகாம்பரநாதரின்
விக்ரம ஆண்டு (1941) பங்குனி மாத பிரமோத்சவத்தில்
ஸ்ரீ மெய்கண்டார் கழக உபன்யாசத்தில் திருப்பா
திரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான
சிவாச்சாரி சுவாமிகள் தலைமை வகித்து
மிக சிறப்பாக நடைபெறச் செய்த
தின் ஞாபகார்த்தமாக வெளி
யிடப்பட்டது.

கணபதி வாஸக சாலை
நெ. 6, புத்தேரி தெரு
பெரிய காஞ்சிபுரம்

புரோக்ரஸிவ் பிரின்டர்ஸ், மதராஸ்
1941

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தொண்டைநாட்டு தேவாரம்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

**திருவேகம்பம்.** பண் .- மேகராகக் குறிஞ்சி (1 தி.)

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின் விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே. 1

வரந்திகழு மவுணர் மாநகர்மூன் றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேயஇடம்
குருந்த மல்லிகை கோங்கு மாதவி நல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேரஇடர்கெடுமே. 2

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சி தன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பஞ் சேர இடர்கெடுமே. 3

தோலு நூலுந் துதைந்த வரைமார்பிற் சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற் கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூழேகம்ப மேத்த இடர் கெடுமே. 4

தோடணிம் மலர்க் கொன்றை சேர்சடைத் தூமதியம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்க ளவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி மகிழ்ந்துட னாடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே. 5

சாகம்பொன் வரையாகத் தானவர் மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத் துறைஈசன் சேவடி யேத்த இடர் கெடுமே. 6

* * * 7

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளர வம்மணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா அரக்கன்றன் நீண்முடி பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ்சேர இடர் கெடுமே. 8

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழலாய பெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண னணங்கினொ டமருமிடம்
கரவில்வண் கையினர்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே. 9

குண்டுபட் டமணா யவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை யொன்றினாலவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண இடர் கெடுமே. 10

ஏரினார் பொழில் சூழ்ந்த கச்சியேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும் வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்.

## 2. பண் - இந்தளம் (2 தி.)

திருச்சிற்றம்பலம்.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடா ணாகிய பெம்மானை
இறையானை யேர்கொள்கச் சித்திரு ஏகம்பத்
துறைவானை யல்லதுள் காதென துள்ளமே. 1

நொச்சியே வன்னிகொன்றைமதி கூவிளம்
உச்சியே புனைதல்வேடம்விடை யூர்தியான்
கச்சியே கம்பமே யகறைக் கண்டனை
நச்சியே தொழுமின்நும் மேல்வினை நையுமே. 2

பாராரு முழவமொந் தைகுழல்யாழொலி
சீராலே பாடலா டல்சிதை வில்லதோர்
ஏரார்பூங் கச்சியே கம்பனை யெம்மானைச்
சேராதா ரின்பமா யந்நெறி சேராரே. 3

குன்றேய்க்கு நெடுவெண்மா டக்கொடி கூடிப்போய்
மின்றேய்க்கு முகில்கடோ யும்வியன் கச்சியுள்
மன்றேய்க்கு மல்குசீ ரான்மலி யேகம்பம்
சென்றேய்க்குஞ் சிந்தையார் மேல்வினை சேராவே. 4

சடையானைத் தலைகையேந் திப்பலி தருவார்தம்
கடையேபோய் மூன்றுங்கொண் டான்கலிக் கச்சியுள்
புடையேபொன் மலருங்கம் பைக்கரையேகம்பம்
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. 5

மழுவாளோ டெழில்கொள்சூ லப்படை வல்லார்தம்
கெழுவாளோ ரிமையாருச் சியுமையாள் கங்கை
வழுவாமே மல்குசீ ரால்வள ரேகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னுவே. 6

விண்ணுளார் மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார் கழலின்வெல்வார்கரி காலனை
நண்ணுவா ரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலா ராடுகின் றவலங் காரம்மே. 7

தூயானைத் தூயவாயம்மறை யோதிய
வாயானை வாளரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு வேகம்பம்
மேயானை மேவுவா ரென்றலை மேலாரே. 8

நாகம்பூ ணேறதேறனறுங் கொன்றை தார்
பாகம்பெண் பலியுமேற்பர்மறை பாடுவர்
ஏகம்ப மேவியாடுமிறை யிருவர்க்கும்
மாகம்ப மறியும்வண் ணத்தவ னல்லனே. 9

போதியார் பிண்டியா ரென்றிவர் பொய்ந்நூலை
வாதியா வம்மினம் மாவெனுங் கச்சியுள்
ஆதியார் மேவியாடுந்திரு வேகம்பம்
நீதியாற் றொழுமின்உம் மேல்வினைநில்லாவே. 10

அந்தண்பூங் கச்சியே கம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையால்
சந்தமே பாடவல் லதமிழ் ஞானசம்
பந்தன்சொற் பாடியா டக்கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## 3. திருவிருக்குக்குறள் பண் - கொல்லி (3 தி.)

திருச்சிற்றம்பலம்.

கருவார் கச்சித், திருவேகம்பத்
தொருவாவென்ன, மருவாவினையே. 1

மதியார்கச்சி, நதியேகம்பம்
விதியாலேத்தப், பதியாவாரே. 2

கலியார் கச்சி, மலியேகம்பம்
பலியாற்போற்ற, நலியாவினையே. 3

வரமார்கச்சிப், புரமேகம்பம்
பரவாவேத்த, விரவாவினையே. 4

படமார்கச்சி, இடமேகம்பத்
துடையாயென்ன, அடையாவினையே. 5

நலமார்கச்சி, நிலவேகம்பம்
குலவாவேத்தக், கலவாவினையே. 6

கரியின்னுரியன், திருவேகம்பன்
பெரியபுரமூன், றெரிசெய்தானே. 7

இலங்கையரசைத், துலங்கவூன்றும்
நலங்கொள்கம்பன், இலங்குசரணே. 8

மறையோனரியும், அறியாவனலன்
நெறியேகம்பம், குறியாற்றொழுமே. 9

பறியாத்தேரர், நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம், குறுகுவோமே. 10

கொச்சைவேந்தன், கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை, நச்சும்புகழே. 11

திருச்சிற்றம்பலம்.

# திருவேகம்பம்.

4 திருவியமகம் பண்-பழம்பஞ்சுரம் (3 தி.)

*திருச்சிற்றம்பலம்.*

பாயுமால்விடை மேலொரு பாகனே பாவைதன்னுரு மேலொரு பாகனே, தூயவானவர் வேதத் துவனியே சோதிமாலெரி வேதத் துவனியே, ஆயுநன்பொரு ளுண்பொரு ளாதியே யாலநீழ லரும்பொரு ளாதியே, காயவின்மதன் பட்டது கம்பமே கண்ணுதற்பரமற் கிடங் கம்பமே. 1

சடையணிந்ததும் வெண்டலை மாலையே தம்முடம்பிலும் வெண்டலை மாலையே, படையிலங்கையிற் சூலம தென்பதே பரந்திலங்கையிற் சூலம தென்பதே, புடைபரப்பன பூதக ணங்களே போற்றிசைப்பன பூதகணங்களே, கடைகள்தோறு மிரப்பது பிச்சையே கம்பமேவி யிருப்பது மிச்சையே. 2

வெள்ளெருக்கொடு தும்பை மிலைச்சியே வேறுமுன்செலத் தும்பை மிலைச்சியே, அள்ளிநீறது பூசுவ தாகமே யாணமாசுண மூசுவ தாகமே, புள்ளியாடை யுடுப்ப துகத்துமே போனவூழி யுடுப்ப துகத்துமே, கள்ளுலாமலர்க் கம்ப மிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 3

முற்றலாமை யணிந்த முதல்வரே மூரியாமை யணிந்த முதல்வரே, பற்றிவாளர வாட்டும் பரிசரே பாலு நெய்யுகந்தாட்டும் பரிசரே, வற்றலோடு கலம்பலி தேர்வதே-வானினோடு கலம்பலி தேர்வதே, கற்றிலா-மனங் கம்ப மிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 4

வேடனாகி விசையற் கருளியே வேலைநஞ்ச மிசையற் கருளியே, ஆடுபாம்பரை யார்த்த துடையதே யஞ்சுபூதமு மார்த்த துடையதே, கோடுவான்மதிக் கண்ணி யழகிதே குற்றமின் மதிக் கண்ணி யழகிதே, காடுவாழ்பதியாவது மும்மதே கம்பமாபதி யாவது மும்மதே. 5

இரும்புகைக்கொடி தங்கழல் கையதே யிமயமாமகள் தங்கழல் கையதே, அரும்புமொய்த்த மலர்ப்பொறை தாங்கியே ஆழியான்றன் மலர்ப்பொறை தாங்கியே, பெரும்பகல்நட மாடுதல் செய்துமே பேதைமார்மனம் வாடுதல் செய்துமே, கரும்புமொய்த்தெழு கம்பமிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 6

முதிரமங்கை தவஞ்செய்த காலமே மூன்பு மங்கை தவஞ் செய்த காலமே, வெதிர்களோடகில் சந்தமு ருட்டியே வேழமோடகில் சந்த முருட்டியே, அதிரவாறு வரத்தழு வத்தொடே யானையாடு வரத்தழு வத்தொடே, கதிர்கொள் பூண்முலைக் கம்ப மிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 7

பண்டாக்க னெடுத்த பலத்தையே பாய்ந்தரக்க னெடுத்த பலத்தையே, கொண்டரக்கிய துங்கால் விரலையே கோளரக்கிய துங்கால் விரலையே, உண்டுழன்றது முண்டத் தலையிலே யுடுபதிக்கிட முண்டத் தலையிலே, கண்டநஞ்ச மடக்கினை கம்பமே கடவுணீயிடங் கொண்டது கம்பமே. 8

தூணியான சுடர்விடு சோதியே சுத்தமான சுடர்விடு சோதியே, பேணியோடு பிரமப் பறவையே பித்தனை பிரமப் பறவையே, சேணினோடு கீழூழி திரிந்துமே சித்தமோடு கீழூழி திரிந்துமே, காணநின்றன ருற்றது கம்பமே கடவுணீயிட முற்றது கம்பமே. 9

ஒருடம் பினை யீருரு வாகவே யுன்பொருட்டிற மீருருவாகவே' ஆறுமெய்தற் கரிது பெரிதுமே யாற்றவெய்தற் கரிது பெரிதுமே, தேரும்மறி யாது திகைப்பரேசித்தமும்மறி யாது திகைப்பரே, கார்நிறத்தமணர்க்கொரு கம்பமே கடவுணீயிடங் கொண்டது கம்பமே.

கந்தமார் பொழில் சூழ்தரு கம்பமே காதல் செய்பவர் தீர்த்திடு கம்பமே, புந்திசெய்து விரும்பிப் புகலியே பூசுரன்றன் விரும்பிப் புகலியே, அந்தமில்பொரு ளாயின கொண்டுமே யண்ணலின் பொரு ளாயின கொண்டுமே, பந்தனின்னியல் பாடிய பத்துமே பாடவல்லவ ராயின பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார்.

### 5. பண்-காந்தாரம் (4 தி.)

திருச்சிற்றம்பலம்.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 1

தேனோக்குங் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 2

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே. 3

அண்டமா யாதியா யருமறையோ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத்தே வைத்தேனே. 4

ஆறேறு சடையானை யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 5

தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைக ளுகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளியா காசமாம்
ஈசனை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 6

நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 7

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சத்திப் பொருளுருவாம் புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்றும்
எரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 8

ஆகம்பத் தரவணையா னயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை யென்மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை யரித்தானை யருச்சுனற்குப் பாசபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சினமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## 6. திருநேரிசை (4 தி.)

திருச்சிற்றம்பலம்.

நம்பனை நகரமூன்றும் எரியுண வெருவநோக்கும்
அம்பனை யமுதையாற்றை யணிபொழிற் கச்சியுள்ளே
கம்பனைக் கதிர்வெண்டிங்கட் செஞ்சடைக் கடவுள் தன்னைச்
செம்பொனைப் பவளத்தைச் சிந்தியா எழுகின்றேனே. 1

ஒருமுழ முள்ளகுட்ட மொன்பது துளையுடைத்தாய்
அரைமுழ மதனகல மதனில்வாழ் முதலையைந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகில் தவழுமாடக் கச்சியே கம்பனீரே. 2

மலையினார் மகளோர்பாக மைந்தனார் மழுவொன்றேந்திச்
சிலையினால் மதில்கள்மூன்றுந் தீயெழச் செற்ற செல்வர்
இலையினார் சூலமேந்தி ஏகம்ப மேவினாரைத்
தலையினால் வணங்கவல்லார் தலைவர்க்குந் தலைவர்தாமே. 3

பூத்தபொற் கொன்றைமாலை புரிசடைக் கணிந்தசெல்வர்
தீர்த்தமாங் கங்கையாளைத் திருமுடி திகழவைத்து
ஏத்துவா ரேத்தநின்ற ஏகம்பம் மேவினாரை
வாழ்த்துமா றறியமாட்டேன் மால்கொடு மயங்கினேனே. 4

மையினார் மலர்நெடுங்கண் மங்கையோர் பங்கராகிக்
கையிலோர் கபாலமேந்திக் கடைதொறும் பலிகொள்வார்தாம்
எய்வதோ ரேனமோட்டி யேகம்பம் மேவினாரைக்
கையினாற் றொழவல்லார்க்குக் கடுவினை களையலாமே. 5

தருவினை மருவுங்கங்கை தங்கிய சடையனெங்கள்
அருவினை யகலநல்கும் அண்ணலை யமரர்போற்றுந்
திருவினைத் திருவேகம்பஞ் செப்பிட உறையவல்ல
உருவினை யுருகியாங்கே யுள்ளத்தா லுகக்கின்றேனே. 6

கொண்டதோர் கோலமாகிக் கோலக்கா வுடையகூத்தன
உண்டதோர் நஞ்சமாகி யுலகெலாம் உய்யவுண்டான்
எண்டிசை யோருமேத்த நின்றவே கம்பன்றன்னைக்
கண்டுநா னடிமை செய்வான் கருதியே திரிகின்றேனே. 7

படமுடை யரவினோடு பனிமதி யதனைச்சூடிக்
கடமுடை யுரிவைமூடிக் கண்டவ ரஞ்சஅம்ம
இடமுடைக் கச்சிதன்னு ளேகம்ப மேவினான்றன்
நடமுடை யாடல்காண ஞாலந்தா னுய்ந்தவாறே. 8

பொன்றிகழ் கொன்றைமாலை பொருந்திய நெடுந்தண்மார்பர்
நன்றியிற் புகுந்தெனுள்ள மெல்லவே நவிலநின்று
குன்றியி லடுத்தமேனிக் குவளையங் கண்டரெம்மை
இன்றுயில் போதுகண்டா ரினியரே கம்பனாரே. 9

துருத்தியார் பழனத்துள்ளார் தொண்டர்கள் பலருமேத்த
அருத்திய லன்புசெய்வா ரவரவர்க்கருள்கள் செய்தே
எருத்தினை யிசையவேறி யேகம்ப மேவினார்க்கு
வருத்தினின் றடிமை செய்வார் வல்வினை மாயுமன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## 7. திருவிருத்தம் (4 தி.)

திருச்சிற்றம்பலம்.

ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி யமணரொடே
காதுவித்தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளியம் வளாரால்
மோதுவிப் பாயுகப்பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. 1

எத்தைக்கொண் டெத்தகை யேழை யமணொடிசைவித்தெனைக்
கொத்தைக்கு மூங்கர்வழி காட்டுவித் தென்னைக் கோகுசெய்தாய்
முத்திற் றிரளும் பளிங்கினிற் சோதியு மொய்பவளத்
தொத்தினை யேய்க்கும்படியாய் பொழிற்கச்சி யேகம்பனே. 2

மெய்யம்பு கோத்த விசயனொ டன்றொரு வேடுவனாய்ப்
பொய்யம்பெய் தாவ மருளிச் செய் தாய்புர மூன்றெரியக்
கையம்பெய் தாய்நுன் கழலடி போற்றாக் கயவர் நெஞ்சில்
குய்யம்பெய் தாய்கொடி மாமதில் சூழ்கச்சி யேகம்பனே. 3

குறிக்கொண் டிருந்துசெந் தாமரை ஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறையழிப்பான்
கறைக்கண்ட நீயொரு பூக்குறை வித்துக்கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடையாய்பெருங் காஞ்சியெம் பிஞ்ஞகனே.

உரைக்குங் கழிந்திங் குணர்வரி யானுள்கு வார்வினையைக்
கரைக்குமெனக்கை தொழுவதல் லாற்கதிரோர்களெல்லாம்
விரைக்கொண் மலரவன் மாலெண் வசுக்கள் ஏகாதசர்கள்
இறைக்கு மமிர்தக் கறியவொண் ணானெங்க ளேகம்பனே. 5

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமு நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே. 6

அரியய னிந்திரன் சந்திரா தித்தர் அமரரெல்லாம்
உரியநின் கொற்றைக் கடைத்தலை யாருணங் காக்கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடையேகம்ப என்னோ திருக்குறிப்பே. 7

பாம்பரைச் சேர்த்திப் படருஞ் சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத் தன்பர்கள் கூடிப்பன்னாள்
சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்சரணென்
றேம்பலிப் பார்கட் கிரங்குகண் டாய்கச்சி யேகம்பனே. 8

ஏன்றுகொண் டாயென்னை யெம்பெரு மானினி யல்லமென்னில்
சான்றுகண் டாயிவ் வுலகமெல் லாந்தனி யேனென்றென்னை
ஊன்றிநின் றாரைவர்க் கொற்றிவைத் தாய்பின்னை யொற்றியெல்லாம்
சோன்றுகொண் டாய் கச்சி யேகம்பமேய சுடர்வண்ணனே. 9

உந்திநின் றாருன்ற னோலக்கச் சூளைகள் வாய்தல்பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவ ரீட்டம் பணியறிவான்
வந்துநின் றாரயனுந்திரு மாலும் மதிற்கச்சியாய்
இந்தநின் றோமினி யெங்ஙன மோவந் திறைஞ்சுவதே. 10

திருச்சிற்றம்பலம்.

அன்பே (கடவுள்) சிவம்

## 8. திருக்குறுந்தொகை (5 தி.)

திருச்சிற்றம்பலம்.

பண்டு செய்த பழவினையின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகா னெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரியாய்துயர் தீரவே. 1

நச்சி நாளு நயந்தடி யார்தொழ
இச்சை யாலுமை நங்கை வழிபடக்
கொச்சை யார்குறு கார்செறி தீம்பொழிற்
கச்சி யேகம்பமேனை தொழுமினே. 2

ஊனி லாவி யியங்கி யுலகெலாம்
தானு லாவிய தன்மைய ராகிலும்
வானு லாவிய பாணி பிறங்கவெம்
கானிலாடுவர் கச்சியே கம்பரே. 3

இமையா முக்கண ரென்னெஞ்சத் துள்ளவர்
தமையா ரும்மறி வொண்ணாத் தகைமையர்
இமையோ ரேத்த இருந்தவ னேகம்பன்
தமையா ளும்மவ னைத்தொழு மின்களே. 4

மருந்தி னோடு நற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்த டங்கண்ணி னாளுமை கைதொழ
இருந்தவன்கச்சி யேகம்பத் தெந்தையே. 5

பொருளி னோடுநற் சுற்றமும் பற்றிலர்க்
கருளு நன்மைதந் தாய வரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடை யான்கச்சி யேகம்பம்
இருள்கெடச்சென்று கைதொழு தேத்துமே. 6

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்குவானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே. 7

பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே. 8

திருவி னாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்
ஒருவ னாயுணர் வாயுணர் வல்லதோர்
கருவுள் நாயகன் கச்சியே கம்பனே. 9

இடுகு நுண்ணிடை யேந்திள மென்முலை
வடிவின் மாதர் திறமனம் வையன்மின்
பொடிகொள் மேனியன் பூம்பொழிற் கச்சியுள்
அடிகளெம்மை யருந்துயர் தீர்ப்பரே. 10

இலங்கை வேந்த னிராவணன் சென்றுதன்
விலங்கலை யெடுக்கவ்விர லூன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ வென்றலும்
கலங்கொள் செலவளித் தானெங் கள்நாதனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## 9. திருக்குறுந்தொகை (5 தி.)

திருச்சிற்றம்பலம்.

பூமே லானும் பூமகள் கேள்வனும்
நாமே தேவரெனமை நடுக்குறத்
தீமேவும்முரு வா திரு வேகம்பா
ஆமோ அல்லற் படவடியோங்களே. 1

அருந்தி றல்அம ரர்அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோ
டிருந்த வன்னெழிலார்கச்சி யேகம்பம்
பொருந்தச் சென்று புடைபட் டெழுதுமே. 2

கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க் காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி யேகம்பம்
முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே. 3

பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்புறும் மமு தாயவ னேகம்பம் 4.
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே.

சிந்தை யுட்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி யாயன லாய்ப்புனல் வானமாய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ள நிறைந்தவெம் 5.
எந்தை யேகம்பம் எத்தித் தொழுமினே.

சாக்கி யத்தொடு மற்றுஞ் சமண்படும்
பாக்கி யம்மிலார் பாடுசெ லாதுறப்
பூக்கொள் சேவடி யான்கச்சி யேகம்பம் 6.
நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே.

மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
ஆர்ப்ப தன்முன் னணியம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழி லேகம்பம் 7.
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே.

ஆலு மாமயிற்சாயனல் லாரொடும்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணலே கம்பனார் 8.
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே.

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்பம் மேவிய 9.
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே.

அரக்கன் றன்வலி யுன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்றெடுத் தான்முடி தோள்நெரித்
திரக்க இன்னிசை கேட்டவ னேகம்பம் 10.
தருக்க தாகநாஞ் சார்ந்து தொழுதுமே.

திருச்சிற்றம்பலம்.

**அன்பே (சிவம்) கடவுள்**

## 10. திருத்தாண்டகம் (ப் தி.)

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண் குவலயன் காண் குவலயத்தின் நீரா ளுன்காண், காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கு மின்காண் கனபவளச் செம்மேனி கலந்தவெள்ளை, நீற்றவன்காண் நிலாவூருஞ் சென்னி யான்காண் நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்சடைமேல், ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 1

பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும் பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத், துரந்தவன்காண் தூமலரங் கண்ணியான்காண் தோற்ற நிலையிறுதிப் பொருளாய்வந்த, மருந்தவன்காண் வையகங்கள் பொறைதீர்ப்பான்காண் மலர்தூவி நினைந்தெழுவா ருள்ளம் நீங்கா, திருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 2

நீற்றவன்காண் நீராகித் தீயா ளுன்காண் நிறைமழுவுந் தமருகமும் எரியுங் கையில், தோற்றவன்காண் தோற்றக்கே டில்லாதான்காண் துணையிலிகாண் துணையென்று தொழுவாருள்ளம், போற்றவன்காண் புகழ் கள்தமைப் படைத்தான்தான்காண் பொறியரவும் விரிசடைமேற் புனலுங்கங்கை, ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 3

தாயவன்காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத் தத்துவன்காண் மலைமங்கை பங்காவென்பார், வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப்பான்காண் வானவர்க்குந் தானவர்க்கும் மண்ணுளோர்க்குஞ், சேயவன்காண் நினைவார்க்குச் சித்த மாரத் திருவடியே உள்கிநினைந் தெழுவா ருள்ளம், ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 4

அடுத்தானை யுரித்தான் காண் 5

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால் ஐயாறும் இடைமருதும் ஆள்வான்தான்காண், பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள் பற்றவன்காண் புற்றரவம் நாணி ளுன்காண், சுழித்தவன்காண் முடிக்கங்கை அடியே போற்றுந் தூயமா முனிவர்க் காய்ப் பார்மேல் நிற்க, இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 6

அமைத்தவன்காண் நடமாடிப் பாடல் பேணி அழல்வண்ணத் தில்லையு முடையுந் தொடப், புனைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி யேத்தும் பான்மையன்காண் பாவித்தினோர் தொழுவார் தம்பால், கசிந்த வன்காண் கரியினுரி போர்த்தான்றான்காண் கடல்விடம் உண்ட மரர்க் கமுதமீய, இசைந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 7

முடித்தவன்காண் வன்கூற்றைச் சீற்றத் தீயால் வலியார் தம்புரம் மூன்றும் வேவச் சாபம், பிடித்தவன்காண் பிஞ்ஞகனும் வேடத்தான் காண் பிணையல்வெறி கமழ் கொன்றை அரவு சென்னி, முடித்தவன் காண் மூவிலைவேல் வலனான்காண் முழங்கியுரு மொலித்தோன்றும் மழையாய் மின்னி, இடித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 8

வருந்தான்காண் மனமுருகி நினையா தார்க்கு வஞ்சகன்காண் **அஞ்செழுத்து** நினைவார்க்கென்றும், மருந்தவன்காண் வான்பிணிகள் தீரும் வண்ணம் வானகமு மண்ணக மும்மற்று மாகிப், பரந்தவன் காண் படர்சடையெட் டுடையான்தான்காண் பங்கயத்தோன்தன் சிரத்தை யேந்தி யூரூர், இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 9

வெம்மான உழுவையத ளுரிபோர்த் தான்காண் வேதத்தின் பொருளான்காண் என்றி யம்பி, விம்மாதின் றழுவார்கட் களிப் பான் தான்காண் விடையேறித் திரிவான்காண் நடஞ்செய் பூதத், தம்மான்காண் அகலிடங்கள் தாங்கினான்காண் அற்புதன்காண் சொற்பதமுங் கடந்து நின்ற, எம்மான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 10

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை, செறுத்தான்காண் தேவர்க்குந் தேவன் தான்காண் திசையனைத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில், பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து பொருகயிலை யெடுத்த வன்தன் முடிதோள் நாலஞ், சிறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 11

திருச்சிற்றம்பலம்.

## 11. திருத்தாண்டகம் (6 தி.)

திருச்சிற்றம்பலம்.

உரித்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க ஓங்காரத் தொருவன்காண் உணர்மெய்ஞ்ஞானம், விரித்தவன்காண் விரித்தநால் வேதத் தான்காண் வியனுலகிற் பல்லுயிரை விதியினாலே, தெரித்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றி யெங்குந் திரண்டவன்காண் திரிபுரத்தை வேவவில்லால், எரித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 1

நேசன்காண் நேசர்க்கு நேசந் தன்பால் இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக், கூசன்காண் கூசாதார் நெஞ்ச தஞ்சே குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை, வாசன்காண் மலைமங்கை பங்கன் றான்காண் வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தும், ஈசன் காண் எழிலாரும் பொழிலார் கச்சி, ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 2

பொறையவன்காண் பூமியேழ் தாங்கி யோங்கும் புண்ணியன் காண் நண்ணியபுண்டரீகப் போதில், மறையவன்காண் மறையவனைப் பயந்தோன் தான்காண் வார்சடைமா சுணமணிந்து வளரும் பிள்ளைப், பிறையவன்காண் பிறைதிகழு எயிற்றுப் பேழ்வாய்ப் பேயோடங் கிடுகாட்டில் எல்லியாடும், இறையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 3

பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந்தான்காண் பனிவரைகள் இரவியொடு பகலாய் நின்ற சீரவன்காண் திசையவன்காண் திசைக ளெட்டுஞ் செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தை செய்யும், பேரவன் காண் பேரா யிரங்க ளேத்தும் பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த, ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சிஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 4

பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண் பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும், மருந்தவன்காண் மந்திரங்க ளாயினான்காண் வானவர்கள் தாம்வணங்கும் மாதேவன்காண், அருந்தவத்தாள் ஆயிழையாள் உமையாள் பாகம் அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அர்ச்சித்தேத்த, இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 5

ஆய்ந்தவன்காண் அருமறையோ டங்கம் ஆறும் அணிந்தவன்காண் ஆடரவோ டென்புமாமை காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமன்ஆகங் கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப், பாய்ந்தவன்காண் பண்டுபல சருகால் பந்தர் பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம், ஈந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 6

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண் உகந்தொலிநீர்க் கங்கை சடை யொழுக்கினான்காண், இமயவட கயிலைச் செல்வன் தான்காண் இல்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந்தான்காண், சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண் தத்துவன்காண் உத்தமன்காண் தானேயாய, இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத்தானே. 7

தொண்டுபடு தொண்டர்துயர் தீர்ப்பான் தான்காண் தாமலர்ச்சே வடியிணையெம் சோதி யான்காண், உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண் ஒலிகடலில் அமுதமரார்க்குதவி னான்காண், வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண் வாண்மதியாய் நாண்மீனு மாயி னான்காண், எண்டிசையும் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 8

முந்தைகாண் மூவரினு முதலா னான்காண் மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத், தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத் தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச், சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச் சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும், எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 9

பொன்னிசையும் புரிசடையெம் புனிதன் தான்காண் பூதகணநாதன்காண் புலித்தோ லாடை, தன்னிசைய வைத்த எழி லரவினான்காண் சங்கவெண் குழைக்காதிற் சதுரன் தான்காண், மின்னிசையும் வெள்ளெயிற்றோன் வெருண்டு வெற்பை யெடுக்கஅடி யடர்ப்பமீண் டவன்றன் வாயில், இன்னிசைகேட் டிலங்கொளிவாளீந்தோன் கச்சி ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 10

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

### 12. பண்-தக்கேசி (7 தி.)

திருச்சிற்றம்பலம்.

ஆலந் தானுகந்(து)அமுதுசெய் தானை ஆதி யையம ரர்தொழு தேத்துஞ், சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாவர் சிந்தையு ளானை, ஏல வார்குழ லாளுமை நங்கை யென்றும் ஏத்தி வழி படப் பெற்ற, கால காலனைக் கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 1

உற்றவர்க்குத வும்பெரு மானை ஊர்வ தொன்றுடை யானும்பர் கோனைப், பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப் பார்மனம் பாவிக்கொண்டானை, அற்ற மில்புக ழாளுமை நங்கையாத ரித்து வழிபடப் பெற்ற, கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 2

திரியு முப்புரந் தீப்பிழம் பாகச் செங்கண் மால்விடை மேல் திகழ் வானைக், கரியி னீருரி போர்த்துகந் தானைக் காமனைக்கன லாவிழித் தானை, வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை மருவி யேத்தி வழிபடப் பெற்ற, பெரிய கம்பனை யெங்கள்பி ரானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 3

குண்டலந்திகழ் காதுடை யானைக் கூற்று தைத்த கொடுந் தொழி லானை, வண்டலம் புமலர்க் கொன்றையி னானைவாள ராமதி சேர்சடை யானைக், கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற, கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை வேலைநஞ் சுண்ட வித்தகன் தன்னை, அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை அருமறை யவை அங்கம்வல் லானை, எல்லை யில்புக ழாளுமை நங்கை யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற, நல்ல கம்பனை யெங்கள் பிரானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 5

திங்கள்தங்கிய சடையுடை யானைத்தேவ தேவனைச் செழுங் கடல் வளரும், சங்க வெண்குழைக் காதுடை யானைச் சாம வேதம் பெரிதுகப் பானை மங்கை நங்கை மலைமகள் கண்டு மருவி யேத்தி வழிபடப் பெற்ற, கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 6

விண்ணவர் தொழு தேத்தநின்றானை வேதந் தான்விரித் தோத வல்லானை, நண்ணினார்க்கென்றும் நல்லவன் றன்னை நாளும் நாமுகக் கின்றபி ரானை எண்ணில் தொல்புக ழாளுமை நங்கை யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற, கண்ணு மூன்றுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள் சிந்தையில்திக ழுஞ்சிவன் றன்னைப், பந்தித்தவினைப் பற்றறுப் பானைப் பாலோடுஆனைஞ்சும் ஆட்டுகந்தானை அந்த மில்புக ழாளுமை நங்கை ஆத ரித்துவ ழிபடப் பெற்ற கந்த வார்சடைக் கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம் வாலி யபுர மூன்றெரித் தானை, நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்பரந்த தொல்புக ழாளுமை நங்கை பரவி யேத்தி வழிபடப் பெற்ற, கரங்க ளெட்டுடைக் கம்பனெம் மானைக்காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 9

எள்க லின்றி யிமையவர் கோனை ஈசனை வழிபாடு செய்வாள் போல், உள்ளத் துள்கி உகந்துமை நங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவியோ டித்தழுவ வெளிப் பட்ட, கள்ளக் கம்பனை யெங்கள்பி ரானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப் பெரிய எம்பெரு மானென் றெப் போதும், கற்றவர்பரவப்படு வானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற தென்று, கொற்றவன்கம்பன் கூத்தனெம் மானைக் குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன், நற்ற மிழிவை ஈரைந்தும் வல் லார் நன்னெ றியுல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

அன்பே (கடவுள்) சிவம்

---

சுவாமி—ஏகாம்பரநாதர்.

அம்பாள்—காமாட்சியம்மை.

## திருநாவுக்கரசு நாயனார்.

**திருமேற்றளி.** **13.** திரு நேரிசை (4 தி.)

திருச்சிற்றம்பலம்.

மறையது பாடிப் பிச்சைக் கென்றகந் திரிந்துவாழ்வார்
பிறையது சடைமுடிமேற் பெய்வளை யாள்தன்னோடுங்
கறையது கண்டங்கொண்டார் காஞ்சிமா நகர்தன்னுள்ளால்
இறையவர் பாடலாடல் இலங்குமேற் றளியனாரே. 1

மாலன மாயன்தன்னை மகிழ்ந்தனர் விருத்தராகும்
பாலனார் பசுபதியார் பால்வெள்ளை நீறுபூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர் தன்னுள்ளால்
ஏலநற் கடம்பன்தாதை இலங்குமேற் றளியனாரே. 2

விண்ணிடை விண்ணவர்கள் விரும்பிவந் திறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க கின்னரம் பாடல் கேட்பார்
கண்ணிடை மணியி னொப்பார் காஞ்சிமா நகர் தன்னுள்ளால்
எண்ணிடை யெழுத்துமானா ரிலங்குமேற் றளியனாரே. 3

சோமனை யரவினோடு சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வானவர்கள் வலங்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார் காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
ஏமநின்றாடுமெந்தை இலங்குமேற் றளியனாரே. 4

ஊனவ னுயிரினோடு முலகங்க ளூழியாகித்
தானவர் தனமுமாகித் தனஞ்சய னோடெதிர்ந்த
கானவர் காளகண்டர் காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
ஏனமக் கோடுபூண்டா ரிலங்குமேற் றளியனாரே. 5

மாயனாய் மாலனாகி மலரவ னாகிமண்ணாய்த்
தேயமாய்த் திசையெட்டாகித் தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்க் காயத்துள்ளார் காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
ஏயமென் றோளிபாக ரிலங்குமேற் றளியனாரே. 6

மண்ணினை யுண்டமாயன் தன்னையோர் பாகங்கொண்டார்
பண்ணினைப் பாடியாடும் பத்தர்கள் சித்தங்கொண்டார்
கண்ணினை மூன்றுங் கொண்டார் காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
எண்ணினை யெண்ண வைத்தா ரிலங்குமேற் றளியனாரே. 7

செல்வியைப் பாகங் கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர் தன்னுள்ளால்
எல்லியை விளங்கநின்றா ரிலங்குமேற் றளியனாரே. 8

வேறிணை யின்றியென்றும் விளங்கொளி மருங்கினாளைக்
கூறியல்பாகம் வைத்தார் கோளரா மதியம் வைத்தார்
ஆறினைச் சடையுள்வைத்தா ரணிபொழிற் கச்சிதன்னுள்
ஏறினை யேறு மெந்தை யிலங்குமேற் றளியனாரே. 9

தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலா லூன்ற மணிமுடி நெரிய வாயால்
கன்னலின் கீதம்பாடக் கேட்டவர் காஞ்சிதன்னுள்
இன்னவற் கருளிச் செய்தா ரிலங்குமேற் றளியனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

திருமேற்றளி. **14** பண்-நட்டராகம். (7 தி.)

திருச்சிற்றம்பலம்.

நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமேபு குந்துநின்ற
சிந்தா யெந்தைபிரான் திருமேற் றளியுறையும்
எந்தா யுன்னையல்லா லினியேத்த மாட்டேனே. 1

ஆள்தான் பட்டமையா லடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற் றளியுறையும்
மாட்டே யுன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 2

மோறாந் (து)ஓரொருகால் நினையாதி ருந்தாலும்
வேறா வந்தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே
சேறார் தண்கழனித் திருமேற் றளியுறையும்
ஏறே யுன்னையல்லா லினியேத்த மாட்டேனே. 3

உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன்னடைந்தேன்
எற்றா லென்குறை(வு) என் இடரைத் துறந்தொழிந்தேன்
செற்றாய் மும்மதிலுந் திருமேற் றளியுறையும்
பற்றே நுன்னையல்லாற் பணிந்தேத்த மாட்டேனே. 4

எம்மா னெம்அ(ன்) மனையென் றவரிட்டு இறந்தொழிந்தார்
மெய்ம்மா லாயினதீர்த் தருள்செய்யு மெய்ப்பொருளே
கைம்மா ஈருரியாய் கனமேற் றளியுறையும்
பெம்மா னுன்னையல்லாற் பெரிதேத்த மாட்டேனே. 5

நானே னுன்னடியே நினைந்தே நினைதலுமே
ஊனே ரிவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே
தேனே யின்னமுதே திருமேற் றளியுறையும்
கோனே யுன்னையல்லாற் குளிர்ந்தேத்த மாட்டேனே. 6

கையார் வெஞ்சிலைநா ணதன்மேற் சரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரியுண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற்ற ளியுறையும்
ஐயா வுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 7

விரையார் கொன்றையினாய் விமலா இனி யுன்னையல்லால்
உரையேன் நாவதனா லுடலில்லுயி ருள்ளளவும்
திரையார் தண்கழனித் திருமேற் றளியுறையும்
அரையா வுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 8

நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின்னினையப் பணித்தாய் சலமொழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ் திருமேற்ற ளியுறையம்
மலையே யுன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 9

பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூ ரும்புறவிற் றிருமேற் றளிச்சிவனை
ஆரூ ரன்னடியா னடித்தொண்டனா ரூரன்சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

இறைவன்—திருமேற்றளி நாயகர்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

**திருஓணகாந்தன்தளி.** **15.** பண்-இந்தளம் (7 தி.)

திருச்சிற்றம்பலம்

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டு நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றுங் காணமில்லைக் கழலடிதொழு துய்யினல்லால்
ஐவர்கொண்டிங் காட்டவாடி ஆழ்குழிப்பட் டழுந்துவேனுக்(கு)
உய்யுமாறொன் றருளிச்செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே. 1

திங்கள்தங்கு சடையின்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார்கோற் றட்டியாளால்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே. 2

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும் பேணிஉம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர்பற்றில ரென்றிரங்கி மதியுடையவர் செய்கைசெய்யீர்
அற்றபோழ்தும் அலர்ந்தபோழ்தும் ஆபற்காலத் தடிகேளும்மை
ஒற்றிவைத்திங் குண்ணலாமோ ஓணகாந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாஞ் சொல்லிஉம்மை வாழ்த்தினாலும் வாய்திறந்தொன்(று)
இல்லையென்னீர் உண்டுமென்னீ ரெம்மையாள்வா னிருப்பதென்னீர்
பல்லையுக்க படுதலையிற் பகலெலாம்போய்ப் பலிதிரிந்திங்
கொல்லைவாழ்க்கை யொழியமாட்டீர் ஓணகாந்தன் தளியுளீரே. 4

கூடிக்கூடித் தொண்டர்தங்கள் கொண்டபாணி குறைபடாமே
ஆடிப்பாடி அழுதுநெக்கங் கன்புடையவர்க் கின்பமோரீர்
தேடித்தேடித் திரிந்தெய்த்தாலுஞ் சித்தமென்பால் வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர் பற்றுந்தாரீர் ஓணகாந்தன் தளியுளீரே. 5

வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்மது விம்முகொன்றைத்
தாரிருந்தட(ம்) மார்புநீங்காத் தையலாள்உல குய்யவைத்த
காரிரும்பொழிற் கச்சிமூதூர்க் காமக்கோட்டம்உண் டாகநீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே. 6

பொய்ம்மையாலே போதுபோக்கிப் புறத்துமில்லை அகத்துமில்லை
மெய்ம்மைசொல்லி ஆளமாட்டீர் மேலைநாளொன் றிடவுங்கில்லீர்
எம்மைப்பெற்றா லேதும்வேண்டீர் ஏதுந்தாரீர் ஏதும்ஓதீர்
உம்மையன்றே எம்பெருமான் ஓணகாந்தன் தளியுளீரே. 7

வலையம்வைத்த கூற்றம்(ம்)மீவான் வந்துநின்ற வார்த்தைகேட்டுச்
சிலையமைத்த சிந்தையாலே திருவடிதொழு(து) உய்யினல்லால்
கலையமைத்த காமச்செற்றக் குரோதலோபம் மதவருடை
உலையமைத்திங் கொன்றமாட்டேன் ஓணகாந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகேள் உந்தம்
ஊரும்காடு உடையுந்தோலே ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணமேல் எருதொன்றேறும் ஓணகாந்தன் றளியுளார்தாம்
ஆவணஞ்செய் தாளுங்கொண்டு அரைதுகிலொடு பட்டுவீக்கிக்
கோவணமேற் கொண்டவேடங் கோவையாக ஆரூரன் சொன்ன
பாவணத்தமிழ் பத்தும்வல்லார்பறையும் தாஞ்செய்தபாவந்தானே. 10

திருச்சிற்றம்பலம்.

இறைவன்—ஓணகாந்தீசுவரர்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

திரு அனேகதங்காவதம். 16. பண்-இந்தளம் (7 தி.)

திருச்சிற்றம்பலம்.

தேன்நெய்புரிந்துழல் செஞ்சடை எம்பெரு மான(து)இடம்திகழைங்கணையக், கோனைஎரித்தெரி யாடியிடம்குல வானதிடம்குறையாமறையாம், மானையிடத்ததொர் கையனிடம்மத மாறுபடப்பொழியும்மலைபோல், யானை யுரித்தபி ரான திடங்கலிக் கச்சியனேகதங் காவதமே. 1

கூறுநடைக்குழி கட்பகுவாயன பேயுகந்தாடநின் றோரியிட, வேறுபடக்குட கத்தி(ல்)லையம்பல வாணநின் றாடல் விரும்புமிடம், ஏறுவிடைக்கொடி எம்பெருமான்இமை யோர்பெருமான்உமை யாள்கணவன், ஆறுசடைக்குடை யப்பனிடங்கலிக் கச்சியனே கதங்கா வதமே. 2

கொடிகளிடைக்குயில் கூவுமிடம்மயி லாலும்மிடம்மழு வாளுடைய, கடிகொள் புனற்சடை கொண்டநுதற்கறைக் கண்டனிடம்பிறைத் துண்டமுடிச், செடிகொள் வினைப்பகை தீருமிடம்திரு வாகுமிடந்திரு மார்பகலத்(து), அடிகளிடம்அழல் வண்ணனிடங்கலிக் கச்சியனேகதங் காவதமே. 3

கொங்குநுழைத்தன வண்டறைகொன்றையுங் கங்கையுந்திங் களுஞ் சூடுசடை, மங்குல்நுழைமலை மங்கையை நங்கையைப் பங்கி னிற்றங்க உவந்தருள்செய், சங்குகுழைச்செவி கொண்டருவித்திரள் பாயவியாத்தழல் போலுடைத்தம், அங்கைமழுத்திகழ் கையனிடங் கலிக் கச்சியனே கதங்காவதமே. 4

பைத்தபடைத்தலை ஆடரவம்பயில் கின்றவிடம்பயி லப்புகுவார், சித்தமொருநெறி வைத்தவிடம்திகழ் கின்றவிடம்திரு வானடிக்கே, வைத்தமனத்தவர் பத்தர்மனங்கொள வைத்தவிடம்மழு வாளுடைய, அத்தனிடம்அழல் வண்ணனிடங்கலிக் கச்சியனேகதங் காவதமே. 5

தண்டமுடைத்தரு மன்றமரென்றம, ரைச்செயும் வன்துயர் தீர்க் குமிடம், பிண்டமுடைப்பிற வித்தலைநின்று நினைப்பவராக்கையை நீக்குமிடம், கண்டமுடைக்கரு நஞ்சை நுகர்ந்தபி ரானதிடங்கட லேழுகடந்(து), அண்டமுடைப்பெரு மானதிடம்கலிக் கச்சியனேக தங் காவதமே. 5

கட்டுமயக்கம் அறுத்தவர்கைதொழு-தேத்துமிடம்கதி ரோனொ ளியால், விட்டவிடம்விடை யூர்தியிடங்குயிற் பேடைதன்சேவலொ டாடுமிடம், மட்டுமயங்கி அவிழ்ந்தமலரொரு மாதவியோடு மணம் புணரும், அட்டபுயங்க பிரானதிடம்கலிக் கச்சியனேகதங் காவதமே. 7

புல்லியிடந்தொழு துய்துமெ(ன்)றாதவர் தம்புரம் மூன்றும் பொடிப்படுத்த, வில்லியிடம்விர வாதுயிருண்ணும்வெங் காலனைக் கால்கொடு வீந்(து)அவியக், கொல்லியிடங்குளிர் மாதவிமவ்வல் குராவ குளங்குருக் கத்திபுன்னை, அல்லியிடைப்பெடை வண்டுறங்குங்கலிக் கச்சியனேகதங் காவதமே. 8

சங்கையவர்புணர் தற்கரியான்றளை வேனகையாள்த விராமிகுசீர், மங்கையவள்மகி ழச்சுடுகாட்டிடை நட்ட(ம்)நின்றாடிய சங்கரனெம், அங்கையினல்லன லேந்துமவன்கனல் சேரொளியன்னதோர் பேரகலத், தங்கையவன்னுறை கின்றவிடங்கலிக் கச்சியனேகதங் காவதமே. 9

வீடுபெறப்பல ஊழிகள்நின்று நினைக்குமிடம்வினை தீருமிடம், பீடுபெறப்பெரி யோரதிடங் கலிக் கச்சி யனேகதங் காப்பனிடம், பாடுமிடத்தடி யான்புகழூர னுரைத்தவிம்மாலைகள் பத்தும்வல்லார், கூடுமிடம்சிவ லோகனிடம்கலிக் கச்சியனேகதங் காவதமே. 10

திருச்சிற்றம்பலம்.

இறைவன்-காவதநாதர்.

# திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

**திருநெறிக்காரைக்காடு.** **17. பண்-பஞ்சமம் (3 தி.)**

திருச்சிற்றம்பலம்.

வாரணவு முலைமங்கை பங்கினரா யங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 1

காருரு மணிமிடற்றார் கரிகாட ருடைதலைகொண்
டூரூரன் பலிக்குழல்வா ருழைமானி னுரியதளார்
தேருரு நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீருரு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 2

கூறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமே லிளமதியோ
டாறணிந்தா ராடரவம் பூண்டுகந்தா ரான்வெள்ளை
ஏறணிந்தார் கொடியதன்மே லென்பணிந்தார் வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 3

பிறைநவின்ற செஞ்சடைகள் பின் தாழப் பூதங்கள்
மறைநவின்ற பாடலோ டாடலராய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 4

அன்றாலின் கிழிருந்தங் கறம்புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற் கோளரவ நாண்கொளுவி
ஒன்றாதார் புரமூன்று மோங்கெரியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 5

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்று மொருநொடியில்
வின்மலையின் நாண்கொளுவி வெங்கணையா லெய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 6

புற்றிடைவா ளரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொழியா அலைபுனலோ டிளமதிய மேந்துசடைப்
பெற்றுடையா ரொருபாகம் பெண்ணுடையார் கண்ணமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 7

ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை யெழில்வரைவாய்த்
தாழ்விரலா லூன்றியதோர் தன்மையினார் நன்மையினார்
ஆழ்கிடங்குஞ் சூழ்வயலு மதில்புல்கி யழகமரும்
சீர்மறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 8

ஊண்டானு மொலிகடனஞ் சடைதலையிற் பலிகொள்வர்
மாண்டார்தம் மெலும்பணிவர் வரியரவோ டெழிலாமை
பூண்டாரு மோரிருவ ரறியாமைப் பொங்கெரியாய்
நீண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 9

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து
மிண்டாடித் திரிதருவா ருரைப்பனகள் மெய்யல்ல
வண்டாருங் குழலாளை வரையாகத் தொருபாகங்
கண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 10

கண்ணாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாருந் திருமேனிப் பெருமான தடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழிற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணாருந் தமிழ்வல்லார் பரலோகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமி—காரைத் திருநாதர்

தலமார் கச்சி நிலவேகம்பம்
குலவா ஏத்தக் கலவா வினையே.
ஏகம்பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி.

* * * * *

தென்னாடுடைய சிவனேபோற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

அன்பே (கடவுள்) சிவம்.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை.

### 6. திருக்குரங்கணின் முட்டம். பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழு வாட்படை யண்ணல் விளங்குங்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயுங்
கொழுநீர்வயல் சூழ்ந்த குரங்கணின் முட்டந்
தொழுநீர்மையர் தீதுறு துன்ப மிலரே. 1

விடைசேர்கொடி யண்ணல் விளங்குயர் மாடக்
கடைசேர்கரு மென்குளத் தோங்கிய காட்டிற்
குடையார்புனல் மல்குகு ரங்கணின் முட்டம்
உடையானெனை யாளுடை யெந்தை பிரானே. 2

சூலப்படை யான்விடை யான்சுடு நீற்றான்
காலன்றனை யாருயிர் வவ்விய காலன்
கோலப்பொழில் சூழ்ந்த குரங்கணின் முட்டத்
தேலங்கமழ் புன்சடை யெந்தை பிரானே. 3

வாடாவிரி கொன்றை வலத்தொரு காதிற்
றோடார் குழையானல பாலனை நோக்கி
கூடாதன செய்த குரங்கணின் முட்ட
மாடாவரு வாரவ ரன்புடை யாரே. 4

இறையார்வளை யாளையொர் பாகத் தடக்கிக்
கறையார்மிடற் றான்கரி கீறியகை யான்
குறையார்மதி சூடிகு ரங்கணின் முட்டத்
துறைவானெமை யாளுடை யொன்சுட ரானே. 5

பலவும்பய னுள்ளன பற்று மொழிந்தோங்
கலவம்மயில் காமுறு பேடையொ டாடிக்
குலவும்பொழில் சூழ்ந்த குரங்கணின் முட்டந்
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே. 6

மாடார்மலர்க் கொன்றை வளர்சடை வைத்துத்
தோடார்குழை தானொரு காதி லங்கக்
கூடார்மதி லெய்துகு ரங்கணின் முட்டத்
தாடாரர வம்மரை யார்த்தமர் வானே. 7

மையார்கிற மேனி யரக்கர்தங் கோனை
யுய்யாவகை யாலடர்த் தின்னருள் செய்த
கொய்யார்மலர் சூடிகு ரங்கணின் முட்டங்
கையாற்றொழு வார்வினை நிற்ககிலாவே. 9

கழுவார்துவ ராடைகலந் துமெய் போர்க்கும்
வழுவார்சமண் சாக்கியர் வாக்கவை கொள்ளேல்
குழுமின்சடை யண்ணல் குரங்கணின் முட்டந்
தொழில்வெண்பிறை யானடி சேர்வ தியல்பே. 10

கல்லார்மதிட் காழியன் ஞானசம்பந்தன்
கொல்லார்மழு வேந்தி குரங்கணின் முட்டஞ்
சொல்லார்தமிழ் மாலைசெ விக்கினி தாக
வல்லார்க்கெளி தாம்பிற வாவகை வீடே. 11

திருச்சிற்றம்பலம

**சுவாமி-வாலீசுவரர், தேவி-இறையார் வளையம்மை**

இது கிஷ்கிந்தா நகரத்தை யரசாண்டுவந்த வானராதிபதியாகிய வாலியும், அணிலும், காக்கையும் பூசித்து பேறுபெற்ற தலமாம். காஞ்சியிலிருந்து தெற்கில் ஐந்து மைல் இருக்கிறது.

---

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## மூன்றாம் திருமுறை.

**7. திருமாகறல்.** திருவிராகம்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவ, மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி நீடுபொழின் மாகறலுளான், கொங்குவிரிகொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினன்,செங்கண்விடை யண்ணலடி சேர்பவர் கடிவினை கடிருமுடனே. 1

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவி
னெய்தியழகார், மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசு
மொலி மாகறலுளான், இலையின்மலி வேனுனைச் சூலம்வல
னேந்தியெரி புன்சடையினுள், அலைகொள்புன லேந்து
பெருமானடியை யேத்தவினை யகலுமிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்யாழ்முழவு காம
ருவுசீர், மாலைவழி பாடுசெய்து மாதவர்க ளேத்திமகிழ்
மாகறலுளான், தோலையுடை பேணியதன் மேலோர்சுடர்
நாகமசையா யழகிதாப், பாலையன நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே 3

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிக ளுந்தியெழின்
மெய்யுளுடனே, மங்கையரு மைந்தர்களு மன்னுபுனலாடி
மகிழ் மாகறலுளான், கொங்குவளர் கொன்றைகுளிர் திங்
களணி செஞ்சடையி னானடியையே, நுங்கள்வினை தீரமிக
வேத்திவழி பாடுநுகரா வெழுமினே. 4

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி தோன்றுமது வார்
கழனிவாய், மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கணட மாடமலி
மாகறலுளான்,வஞ்சமத யானையுரிபோர்த்துமகிழ்வானோர்
மழு வாளன் வளரும், நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
யாரைநலியா வினைகளே. 5

மன்னுமறை யோர்களொடு பல்படிமமா தவர்கள் கூடி
யுடனா, யின்னவகை யாலினி திறைஞ்சியிமை யோரிலெழு
மாகறலுளான். மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே, உன்னுமவர் தொல்வினைக
ளொல்கவுயர் வானுலக மேறலெளிதே. 6

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு மேல்வினைகள்
வீட்டலுறுவீர், மைகொள்விரி கானல் மதுவார்கழனி
மாகறலுளா னெழிலதார், கையகரி கால்வரையின் மேல
துரி தோலுடைய மேனியழகா, ரையனடி சேர்பவரை
யஞ்சியடை யாவினைக ளகலுமிகவே. 7

தூசு துகினீள்கொடிகள் மேகமொடு தோய்வன
பொன் மாடமிசையே, மாசுபடு செய்கைமிக மாதவர்க
ளோதிமலி மாகறலுளான், பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார், பூசுபொடி யீசனென வேத்த
வினை நிற்றலில போகுமுடனே. 8

தூயவிரி தாமரைக ணெய்தல் கழுநீர்குவளை தோன்ற மருவுவுண், பாயவரி வண்டுபல பண்முரலு மோசைபயின் மாகறலுளான், சாயவிர லூன்றியவி ராவணன் தன்மை கெட நின்றபெருமான், ஆயபுக ழேத்துமடி யார்கள் வினை யாயினவு மகல்வ தெளிதே. 9

காவினல பைங்கழல்க ணீண்முடியின் மேலுணர்வு காமுறவி னுன், மாலுமல ரானுமறி யாமையெரி யாகியுயர் மாகறலுளான், நாலுமெரி தோலுமுரி மாமணிய நாக மொடு கூடியுடனாய், ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி யாரையடை யாவினைகளே. 10

கடைகணெடு மாடமிக வோங்குகமழ் வீதிமலி காழி யவர்கோன், அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடு சம்பந்தனுரையால், மடைகொள்புன லோடுவயல் கூடு பொழின் மாகறலு ளானடியையே, உடையதமிழ் பத்து முணர் வாரவர்க டொல்வினைக ளொல்குமுடனே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-அடைக்கலங்காத்தவர், தேவி-புவனநாயகி.

கொடியோனாகிய கடகனென்னும் அசுரன் போருக் குடைந்து அவனை வெல்லும் ஆற்றலிலாத இந்திரன் வந்து பூசிக்க, அன்பர் குறைக்கிரங்கும் சிவபெருமான் ஞண்டு வளையினின்றும் பிரசன்னராகி, கடகாசுரனை வென்று தேவர் கோமானாகிய இந்திரனுக்கு அனுக்கிர கஞ் செய்த தலம். காஞ்சிக்கு தெற்கில் 10 மைல்

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை.

**8. திருவோத்தூர்** பண்-பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தா தாரில்லை யெண்ணுங்கா
லோத்தூர் மேய வொளிமழு வாளங்கை
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி யுடையீ
ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயுமதாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறங்
கொள்வி ரல்குலோர் கோவண மொள்வா
ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. 3

தோட்ட ரேதுத்தி யைந்தலை நாகத்தை
யாட்ட ரேயடியார் வினை யோட்ட
ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்ட ரே யரு ணல்குமே. 4

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
யுழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவா
ரழையா மேயரு ணல்குமே 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீரே யரு ணல்குமே. 6

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந் தோதா
தாருள ரோதிரு வோத்தூ
ராதீ ரேயரு ணல்குமே 7

என்றா னிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினா
லொன்றார் மும்மதி லெய்தவ னோத்தூ
ரென்றார் மேல்வினை யேகுமே 8

நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந்தி சையெலா மொன்றா
யொள்ளொளி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. 9

காரமண் கலிங்கத் துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மி னோரம்
பாலெயி றெய்தவ னோத்தூரச்
சீர வன்கழல் சேர்மினே. 10

குரும்பை யாண்பனை யின்குலை யோத்தூ
ரரும்பு கொன்றை யடிகளைப் பெரும்
புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: **வேதநாயகர்**—தேவி: **இளமுலைநாயகி.**

முனிவர்களும் தேவர்களும் வேதப்பொருளையுணராது மயங்குங்காலத்தில், சிவபெருமான் ஆசாரியமூர்த்தியாய் எழுந்தருளி அதன் பொருளை விரித்தருளியதும், சூரியன் பூசித்து ஒற்றையாழித் தேரைப் பெற்றதும், குமாரக் கடவுள் விஷ்ணு முதலிய தேவர்கள் பூசித்ததும், கல்லியாண மகாமுனி சாபத்தால் இலட்சுமிக்கு நேர்ந்த மான் உருவத்தைப் போக்கியதுமான தலம். சிவனடியார் ஒருவர் வைத்துவந்த பனைகள் யாவும் ஆண் பனையாய் இருக்கக்கண்ட சமணர்கள் அவ்வடியவரை இழிவுகூற அதைத்தரியாத அவ்வடியவர், அங்கெழுந்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகளிடம் முறையிட, அவருடைய திருப்பதிகத்தால் அவை பெண் பனைகளாகக் கண்ட சமணர்கள் அதிசயித்து சைவசமயத்திற் சேர்ந்து பேறு பெற்ற தலமாம். காஞ்சிக்கு தென்மேற்கில் 18 மைலில் உள்ளது.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### 7-ம் திருமுறை.

**9. திருவன்பார்த்தான் பனங்காட்டூர்.** பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
யடையிலன் புடையானை யாவர்க்கு மறியொண்ணா
மடையில்வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார்சார் வென்னே[ச

அறையும்பைங் கழலார்ப்ப வரவாட வனலேந்திப்
பிறையுங்கங் கையுஞ்சூடிப் பெயர்ந்தாடும் பெருமானார்
பறையுஞ்சங் கொலியோவாப் படிறன்றன் பனங்காட்டூ
ருறையுமெங்கள் பிரானை யுணராதா ருணர்வென்னே. 2

தண்ணார்மா மதிசூடித் தழல்போலுந் திருமேனிக்
கெண்ணார்நாண் மலர்கொண்டங் கிசைந்தேத்து மடியார் [கள்
பண்ணார்பா டலறாத படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெண்ணாணாய பிரானைப் பேசாதார் பேச்சென்னே. 3

நெற்றிக்கண் ணுடையானை நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றே றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே. 4

உரமென்னும் பொருளானை யுருகிலுள் ளுறைவானைச்
சிரமென்னுங் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரமுன்ன மருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூ
பரமனெங்கள் பிரானைப் பரவாதார் பரவென்னே. [ர்ப்

எயிலார்பொக்க மெரித்த வெண்டோண்முக்க ணிறைவன்
வெயிலாய்க்காற் றெனவீசி மின்னாய்த்தீ யெனநின்றான்
மயிலார்சோலை கள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்
பயில்வானுக் கடிமைக்கட் பயிலாதார் பயில்வென்னே 6

மெய்யவெண் பொடிபூசும் விகிர்தன் வேதமுதல்வன்
கையின்மான் மழுவேந்திக் காலன்கால் மறுத்தான்
பைகொள்பாம் பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூ
ரையனெங்கள் பிரானையறியாதா ரறிவென்னே. 7

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிற்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங்கள் பிரானை நினையாதார் நினைவென்னே 8

மழையானுந் திகழ்கின்ற மலரோனென் றிருவர்தா
முழையாநின் றவருள்க வுயர்வானத் துயர்வானைப்
பழையானைப் பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற
குழைகாதற் கடிமைக்கட் குழையாதார் குழைவென்னே.

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
வாரூரன் னடித் தொண்டன் னடியன்சொல் லடிநாய்சொ
லூரூர னுரைசெய்வா ருயர்வானத் துயர்வாரே. 10 [ல்

சுவாமி: பனங்காட்டுநாதர்-தேவி: அமிர்தவல்லி.

தவசிரேஷ்டராகிய கண்ணுவமகாரிஷியானவர் சிவபெருமானுக்கு நிவேதிக்க வேறுபொருள் கிடையாது தமதுகையிற்கிடைத்த பனம்பழத்தை நிவேதனஞ்செய்ய எம்பெருமான் அனுக்கிரகஞ்செய்த தலம். இக்காலத்தும் பனங்கனி நிவேதிக்கப்பட்டு வருகின்றது. சந்நிதியில் இரண்டு பனைவிருக்ஷங்களிருக்கின்றன. மூவர் தீர்த்தங்களிருக்கின்றன. காஞ்சியிலிருந்து தென்மேற் இல் 8 மைல்.

---

**10. திருவல்லம்.** பண்-வியாழக்குறிஞ்சி.

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

எரித்தவன் முப்புர மெரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே. 1

தாயவ னுலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் தூமதி சூடியெல்லா
ஆயவ னமரர்க்கு முனிவர்கட்குஞ்
சேயவ னுறைவிடந் திருவல்லமே. 2

பார்த்தவன் காமனைப் பண்பழியப்
போர்த்தவன் போதகத் தினுரிவை
யார்த்தவ னான்முகன் றலையையன்று
சேர்த்தவ னுறைவிடந் திருவல்லமே. 3

கொய்தவ மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை யுலகமுய்யச்
செய்தவ னுறைவிடந் திருவல்லமே. 4

சார்ந்தவர்க் கின்பங்க டழைக்கும் வண்ண
நேர்ந்தவ னேரிழை யோடுங்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. 5

பதைத்தெழு காலனைப் பாதமொன்று
லுதைத்தெழு மாமுனிக் குண்மைநின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவ னுறைவிடந் திருவல்லமே. 6-7

இகழ்ந்தரு வரையினை யெடுக்கலுற்றுங்
ககழ்ந்தவல் லரக்கனை யடர்த்தபாத
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. 8

பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
வரியவ னருமறை யங்கமானான்
கரியவ னான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் வளநகர் திருவல்லமே. 9

அன்றிய வமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய வறவுரை கூறுவண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்கவெங்குஞ்
சென்றவ னுறைவிடந் திருவல்லமே. 10

கற்றவர் திருவல்லங் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவ ரீசன்பொற் பாதங்களே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி:-**வல்லநாதர்**, தேவி:-**வல்லாம்பிகை**.

இது வல்லாளராஜனும் நவக்கிரகங்களும் பூசித்து பேறுபெற்ற தலம். மிதுலாபுரிக்கு அரசனான ஜனக

ராஜன் இங்குள்ள கௌரிதீர்த்தத்தில் மூழ்கிக் கரை ஏறுங்காலத்தில், பயங்கரரூபத்துடன் பட்சிக்க வந்த கந்தரனென்னும் அரக்கனைச்சிவபெருமான் நந்திதேவரால் சங்காரஞ் செய்வித்து, ஷை மகாராஜனுக்குக் காக்ஷி கொடுத்தருளிய தலம். திருவலம். ரயிலடியின் கிழக்கு 2½ மைல்.

---

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### முதல் திருமுறை.

**11. திருமாற்பேறு.** பண்-பழந்தக்கராகம்.

**திருச்சிற்றம்பலம்.**

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயற் றென்றிரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே. 1

தொடையார் மாமலர் கொண்டிரு போதுமை
யடைவா ராமடி கள்ளென
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுள்கியே. 2

பையா ருமர வங்கொடு வாட்டிய
கையா னென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற்றி ருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே. 3

சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே. 4

மாறி லாமணி யேயென்று வானவ
ரேற வேமிக வேத்துவர்
கூற னேகுல வுந்திரு மாற்பேற்றி
னீற னேயென்று நின்னையே. 5

உரையா தாரில்லை யொன்று நின்றன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் றென்கரை மாற்பேற்
றரையா னேயரு ணல்கிடே. 6

அரச ளிக்கும் மரக்க னவன்றனை
யுரைகெ டுத்தவ னொல்கிட
வரமி குத்தவெம் மாற்பேற் றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே. 7

இருவர் தேவருந் தேடித்தி ரிந்தினி
யொருவ ராலறி வொண்ணிலன்
மருவு நீள்கழன் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே. 8

தூசு போர்த்துழல் வார்கையிற் றுற்றுணு
நீசர் தம்முரை கொள்ளலுந்
தேச மல்கிய தென்றிரு மாற்பேற்
றீச னென்றெடுத் தேத்துமே. 9

மன்னி மாலொடு சோமன் பணிசெயு
மன்னு மாற்பேற்ற டிகளை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்சொற்
பன்ன வேவினை பாறுமே. 10

திருச்சிற்றம்பலம்.

பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவ னாணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. 1

பாறணி வெண்டலை கையிலேந்தி
வேறணி பலிகொளும் வேட்கையனாய்
நீறணிந் துமையொரு பாகம்வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே. 2

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY

கருவுடை யாருல கங்கள் வேவச்
செருவிடை யேறியுஞ் சென்றுநின்
றுருவுடை யாளுமை யாளுந்தானும்
மருவிய வளநகர் மாற்பேறே. 3

தலையவன் றலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகந்தான்
கலைநவின் றான்கயி லாயமென்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே. 4

துறையவன் றொழிலவன் றொல்லுயிர்க்கும்
பிறையணிச் சடைமுடிப் பெண்ணோர்பாகன்
கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே. 5

பெண்ணினல் லாளையோர் பாகம்வைத்துக்
கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே 6-7

நீதிலா மலையெடுத் தவ்வரக்க
னீதியால் வேதகீ தங்கள்பாட
வாதியா னாகிய வண்ணலெங்கண்
மாதிதன் வளநகர் மாற்பேறே. 8

செய்யதண் டாமரைக் கண்ணனொடுங்
கொய்யணி நறுமலர் மேலயனு
மையனன் சேவடி யதனையுள்க
மையல்செய் வளநகர் மாற்பேறே. 9

குளித்துணா வமணர்குண் டாக்கரென்றுங்
களித்துநன் கழலடி காணலுற்றார்
முளைத்தவெண் மதியினோ டரவஞ்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே. 10

அந்தமில் ஞானசம் பந்தனல்ல
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தமின் றமிழ்கள்கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடி யெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள்.

## 4-ம் திருமுறை திரு விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன போத்துமஃதே
மாணிக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே. 1

கருடத் தனிப்பாகன் காண்டற் கரியன காதல்செய்யின்
குருடர்க்கு முனமே குடிகொண் டிருப்பன கோலமல்கும்
செருடக் கடிமலர்ச் செல்வி தன் செங்கமலக்கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான் மலரடியே. 2

திருச்சிற்றம்பலம்.

## 5-ம் திருமுறை. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொருமாற் றிண்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்டகு
திருமாற் பேறு தொழவினை தேயுமே. 1

ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுறை செய்தவன் குற்றமின்
மாலுக் காரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத் தான்றொழு வார்க்கிட ரில்லையே. 2

துணிவண் ணச்சுட ராழிகொள் வானெண்ணி
அணிவண் ணத்தலர் கொண்டடி யர்ச்சித்த
மணிவண் ணற்கருள் செய்தவன் மாற்பேறு
பணிவண் ணத்தவர்க் கில்லையாம் பாவமே. 3

தீதவை செய்து தீவினை வீழாதே
காதல் செய்து கருத்தினி னின்றவன்
மாத வர்பயில் மாற்பேறு கைதொழ
போது மின்வினை யாயின போகுமே. 4

வார்கொள் மென்முலை மங்கையோர் பங்கினன்
வார்கொ ணன்முர சம்மறை யவ்வறை
வார்கொள் பைம்பொழின் மாற்பேறு கைதொழு
வார்கள் மன்னுவர் பொன்னுல கத்திலே. 5

பண்டை வல்வினை பற்றறுக் கும்வகை
உண்டு சொல்லுவன் கேண்மி னொளிகிளர்
வண்டு சேர்பொழில் சூழ்திரு மாற்பேறு
கண்டு கைதொழத் தீருங் கவலையே. 6

மழுவ லான்றிரு நாம மகிழ்ந்துரைத்
தழுவ லார்களுக் கன்புசெய் தின்பொடும்
வழுவி லாவருள் செய்தவன் மாற்பேறு
தொழுவ லார்தமக் கில்லை துயரமே 7

முன்ன வனுல குக்கு முழுமணிப்
பொன்ன வன்றிகழ் முத்தொடு போகமா
மன்ன வன்றிரு மாற்பேறு கைதொழும்
அன்ன வரெமை யாளுடை யார்களே. 8

வேட னாய்விச யன்னொடு மெய்துவெங்
காடு நீடுகந் தாடிய கண்ணுதல்
மாட நீடுய ருந்திரு மாற்பேறு
பாடு வார்பெறு வார்பர லோகமே. 9

கருத்த னாய்க்கயி லாய மலைதனைத்
தருக்கி னாலெடுத் தானைத் தகரவே
வருத்தி யாயருள் செய்தவன் மாற்பேறு
அருத்தி யாற்றொழு வார்க்கில்லை யல்லலே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் துமுணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர் மாற்பேறரே. 1

அச்ச மில்லை நெஞ்சே யர னாமங்கள்
நிச்ச லுந்நினை யாய்வினை போயறக்
கச்ச மாவிட முண்டகண் டாவென
வைச்ச மாநிதி யாவர் மாற்பேறரே 2

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங் கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேன்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே. 3

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னு மாற்பேறரே. 4

சாற்றிச் சொல்லுவன் கேண்மின் றரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழ லேத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொ னாவா மாற்பேறரே. 5

ஈட்டு மாநிதி சால விழக்கினும்
வீட்டுங் காலன் விரைய வழைக்கினுங்
காட்டின் மாநட மாடுவாய் காவெனின்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மா ற்பேறரோ. 6

ஐயனே யானே யென் றரற்றினால்
உய்ய லாமுல கத்தவர் பேணுவர்
செய்ய பாத மிரண்டு நினையவே
வைய மாளவும் வைப்பர் மாற்பேறரே. 7-8-9

உந்திச் சென்று மலையை யெடுத்தவன்
சந்து தோளொடு தாளிற வூன்றினான்
மந்தி பாய்பொழில் சூழுமாற் பேறென
அந்த மில்லதோ ரின்ப மணுகுமே. 10

**திருச்சிற்றம்பலம்.**

**6-ம் திருமுறை திருத்தாண்டகம்.**

**திருச்சிற்றம்பலம்.**

பாரானைப், பாரினது பயனா னானைப் படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னை, ஆராத வின்னமுதை

யடியார் தங்கட் கனைத்துலகு மானானை யமரர்கோனைக், காரானைக் கண்டனைக் கயிலை வேந்தைக் கருதுவார் மனத்தானைக் காலற்செற்ற, சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தேனானே

விளைக்கின்ற நீராகி வித்து மாகி விண்ணோடு மண்ணாகி விளங்கு செம்பொன், றுளைக்கின்ற துளையாகிச் சோதியாகித் தூண்டரிய சுடராகித் துளக்கில் வான்மேல் முளைக்கின்ற கதிர்மதியு மரவு மொன்றி முழங்கொலிநீர்க் கங்கையொடு மூவாதென்றுந், திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென் றடைந்தேனானே.

மலைமகடங் கோனவனை மாநீர் முத்தை மரகதத்தை மாமணியை மல்கு செல்வக், கலைநிலவு கையானைக் கம்பன் றன்னைக் காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை விலைபெரிய வெண்ணீற்று மேனி யானைமெய்யடியார் வேண்டியதே வேண்டுவானைச் சிலைநிலவு கரத்தானைத் திருமாற்பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென் றடைந்தேனானே.

உற்றானை யுடற்றனக்கோ ருயிரானானை யோங்காரத் தொருவனையங் குமையோர்பாகம், பெற்றானைப் பிஞ்ஞக னைப் பிறவாதானைப் பெரியனவு மரியனவு மெல்லா முன்னே, கற்றானைக் கற்பனவுந் தானே யாய கச்சியே கம்பனைக் காலன்வீழச், செற்றானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேனானே.

நீறாகி நீறுமிழு நெருப்பு மாகி நினைவாகி நினைவினிய மலையான் மங்கை, கூறாகிக் கூற்றாகிக் கோளு மாகிக் குண மாகிக் குறையாத வுவகைக் கண்ணீ, ராறாத வானந்தத் தடியார் செய்த வனாசாரம் பொறுத்தருளி யவர்மே லென் றுஞ், சீறாத பெருமானைத் திருமாற் பேற்றெஞ் செம்பவ ளக் குன்றினைச்சென் றடைந்தேனானே.

மருவினிய மறைப்பொருளை மறைக்காட்டானை மறப் பிலியை மதியேந்து சடையான் றன்னை, யுருநிலவு மொண் சுடரை யும்பரானை யுரைப்பினிய தவத்தானை யுலகில்

வித்தைக், கருநிலவு கண்டனைக் காளத்தியைக் கருதுவார் மனத்தானைக் கல்வி தன்னைச், செருநிலவு படையானைத் திருமாற்பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேனே. 6

பிறப்பானைப் பிறவாத பெருமையானைப் பெரியானை யரியானைப் பெண்ணாணாய, நிறத்தானை நின்மலனை நினையாதாரை நினையானை நினைவோரை நினைவோன் றன்னை, அறத்தானை யறவோனை யையன் றன்னை யண்ண றனை நண்ணரிய வமரரேத்துந், திறத்தானைத் திக ழொளியைத் திருமாற்பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென் றடைந்தேனே. 7

வானகத்தில் வளர் முகிலை மதியந் தன்னை வணங்கு வார் மனத்தானை வடிவார் பொன்னை, யூனகத்தி லுறு துணையை யுலவா தானை யொற்றியூ ருத்தமனை யூழிக் கன்றைக், கானகத்துக் கருங்களிற்றைக் காளத்தியைக் கருதுவார் கருத்தானைக் கருவைமூலத், தேனகத்தி லின் சுவையைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென் றடைந்தே னேனே. 8

முற்றாத முழுமுதலை முளையை மொட்டை முழுமலரின் மூர்த்தியை முனியா தென்றும், பற்றாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் றன்னைப் பராபரனைப் பரஞ்சுடரைப் பரிவோர் நெஞ்சி, லுற்றானை யுயர்கருப்புச் சிலையோ னீரு மொள் ளழல்வாய் வேவவரு நோக்கத் தானைச், செற்றானைத் திரிபுரங்க டிருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென் றடைந்தே னேனே. 9

விரித்தானை நான்மறையோ டங்கமாறும் வெற் பெடுத்த விராவணனை விரலா லூன்றி, நெரித்தானை நின் மலனை யம்மான் றன்னை நிலாநிலவு செஞ்சடைமே னிறை நீர்க் கங்கை, தரித்தானைச் சங்கரனைச் சம்பு தன்னைத் தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய் வேவச், சிரித்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றி னைச்சென் றடைந்தே னேனே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-மால்வணங்குநாதர், தேவி-கருணை நாயகி.

இங்கு திருமால், தும்பன் என்னும் அரசன் பொருட்டுத் ததீசி முனிவரோடு போர்செய்து தன் கையிலுள்ள சக்கராயுதத்தை இழந்ததனால், வேறு சக்கரம் பெறுமாறு சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற தலம். அரக்கோணம் கிளைப் பாதையில் இப்பெயர்கொண்ட புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### முதல் திருமுறை.

**12 திருவூரல். (தக்கோலம்.)** பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மாறில வுணரரணம் மவைமாயவோர்வெங்கணையாலன்று
நீறெழ வெய்தவெங்க ளிமல னிடம்வினவிற்
றேறலிரும்பொழிலுந் திகழ்செங்கயல் பாய்வயலுஞ்சூழ்ந்த
வூறல மர்ந்தபிரா னொலியார்கழ லுள்குதுமே. 1

மத்த மதக்கரியை மலையான்மக ளஞ்சவன்று கையால்
மெத்த வுரித்தவெங்கள் விமலன் விரும்புமிடம்
தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேர்ந்தொளிநீலநாளுநய
மொத்தலருங்கழனித் திருவூரலை யுள்குதுமே. 2 [ன

ஏன மருப்பினொடு மெழிலாமையும் பூண்டழகார் நன்றுங்
கானமர் மான்மறிக்கைக் கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள் சூழ்ந்தழகார் நம்மை
யூன மறுத்தபிரான் றிருவூறலை யுள்குதுமே. 3

நெய்யணி மூவிலைவே னிறைவெண்மழு வும்மனலு மன்று
கையணி கொள்கையினான் கடவுள் இடம்வினவில்
மையணி கண்மடவார் பலர்வந் திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான் றிருவூரலை யுள்குதுமே. 4

எண்டிசையோர்மகிழவெழின்மாலையும் போனகமும்பண்டு
தண்டி தொழவளித்தா னவன்றாழு மிடம்வினவிற்
கொண்டல்கடங்குபொழிற்குளிர்பொய்கைகள்சூழ்ந்துநஞ்
யுண்டபி ரானமருந் திருவூறலை யுள்குதுமே. 5, 6, 7 [சை

கறுத்த மனத்தினொடுங்கடுங்காலன்வந்தெய்துதலுங் கல
மறுக்குறு மாணிக்கருள மகிழ்ந்தா னிடம் வினவிற் [ங்கி
செறுத்தெழுவாளரக்கன்சிரந்தோளுமெய்யு நெரியவன்று
ஒறுத்தருள் செய்தபிரான் றிருவூறலை யுள்குதுமே. 8

நீரின் மிசைத்துயின்றோ னிறைநான்முகனு மறியாதன்று
தேரும் வகைநிமிர்ந்தா னவன் சேரு மிடம்வினவிற்
பாரின் மிசையடியார் பலர்வந் திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊரு மரவசைத்தான் றிருவூறலை யுள்குதுமே. 9

பொன்னியல் சீவரத்தார் புனித்தட்டையர் மோட்டமணர்
குண்ட ரென்னு மிவர்க்கருளா வீசனிடம் வினவிற்
றென்னென வண்டினங்கள்செறியார்பொழில்சூழ்ந்தழகார்
புன்னவினை கெடுப்பான் றிருவூறலை யுள்குதுமே. [தன்னை

கோடலிரும்புறவிற் கொடிமாடக் கொச்சயரமன் மெச்ச
வோடு புனல்சடைமேற் கரந்தான் றிருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம்பந்தன் சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-உமாபதி, தேவி-உமையம்மை.

உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து அனுக்ரகம் பெற்ற தலம். திருநந்தி தேவரது வாயினின்றும் எக்காலத்தும் மாறாமல் நீர் சுரந்துக்கொண்டிருக்கும் மகிமையால் இத்திருப்பெயரெய்தியது தக்கோலம் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல் வடக்கில் உள்ளது.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை.

### 13. திரு இலம்பையங்கோட்டூர். பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு மாசிலாச்
சீர்மறைக் காடுநெய்த்தானம், நிலையினானெனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறிய நிமலன், கலையினார்

மடப்பிணை துணையொடுந் துயிலக் கானலம்பெடை புல்கிக்
கணமயிலாலு, மிலையினார் பைம்பொழி லிலம்பையங்
கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ
தியல்பே. 1

திருமலர்க்கொன்றையா னின்றியூர் மேயானா றேவர்
கடலைமகன் றிருக்கழிப்பாலை, நிருமமனென துரை தனது
ரையாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன், கருமலர்க்கமழ்
சுனை நீண்மலர்க்குவளை கதிர்முலையிளையவர் மதிமுகத்
துலவு, மிருமலர்த் தண் பொய்கை யிலம்பையங்கோட்
டூரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வதியல்பே. 2

பாலனும் விருத்தனும் பசுபதிதானும் பண்டுவெங்கூற்
றுதைத் தடியவர்க்கருளும், காலனைமென துரை தனதுரை
யாகக் கனலெரியங்கையி லேந்திய கடவுள், நீலமாமலர்ச்
சுனை வண்டுபண்செய்ய நீர்மலர்க்குவளைக டாதுவிண்
டோங்கு, தேலனறும்பொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்
குகையாப் பேணியன் னெழில்கொள்வ தியல்பே, 3

உளங்கொள்வா ருச்சியார் கச்சியே கம்ப னொற்றியூ
ருறையுமண் ணுமலை யண்ணல், விளம்புவா னெனதுரை
தனதுரையாக வெள்ளநீர்விரிசடைச் தாங்கிய விமலன்,
குளம்புறக் கலைதுள மலைகளுஞ்சிலம்பக் கொழுங்கொடி
யெழுந்தெங்குங் கூவிளங்கொள்ள, விளம்பிறை தவழ்
பொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென்
னெழில்கொள்வ தியல்பே. 4

தேனுமா யமுதுமாய்த் தெய்வமுந் தானாய்த் தீயொடு
நீருடன் வாயுவாந்தெரியில், வானுமா மெனதுரை தனது
ரையாக வரியராவரைக்கசைத் துழிதருமைந்தன், கான
மான் வெருவுறக் கருவிர லூகங் கடுவனோ டுகளுமூர்
கற்கடுஞ்சார, லேனமா னுழிதரு மிலம்பையங் கோட்டூ
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே. 5

மனமுலா மடியவர்க் கருள்புரிகின்ற வகையலால் பலி
திரிந் துண்பிலான் மற்றோர், தனமிலா னெனதுரை தன
துரை யாகத் தாழ்சடை யிளமதி தாங்கிய தலைவன், புன

மெலாமருவிக ளிருவிசேர் முத்தம் பொன்னொடு மணிகொழித் தீண்டிவந்தெங்கு, மினமெலா மடைகரை யிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே. 6

நீருளான் றீயுளா னந்தரத்துள்ளா னினைப்பவர் மனத்துளா னித்தமா வேத்து, மூருளா னெனதுரை தனதுரையாக வொற்றைவெள்ளேறுகந் தேறிய வொருவன், பாருளார் பாடலோ டாடலறாத பண்முரன் றஞ்சிறை வண்டினம்பாடு, மேருளாம் பைம்பொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில் கொள்வ தியல்பே 7

வேருலா மாழ்கடல் வருதிரை யிலங்கை வேந்தனை தடக்கைக ளடர்த்தவ னுலகி, லாருலா மெனதுரை தனதுரையாக வாகமோரரவணிந் துழிதருமண்ணல், வாருலா நல்லன மாக்களுஞ்சார வாரண முழிதரு மல்லலங்கான, வேருலாம்பொழிலணி யிலம்பையங்கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே. 8

கிளர்மழை தாங்கினா னான்முகமுடையோன் கீழடி மேன்முடி தேர்ந்தளக்கில்லா, வுளமழையெனதுரை தனதுரையாக வொள்ளழ லங்கையி லேந்திய வொருவன் வளமழை யெனக்கழை வளர்துளி சோர மாசுண முழிதரு மணியணி மாலை, இளமழை தவழ்மொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில் கொள்வ தியல்பே. 9

உரிஞ்சன கூறைக ளுடம்பினராகி யுழிதருஞ் சமணருஞ் சாக்கியப் பேய்கள், பெருஞ்செல்வ னெனதுரை தனதுரையாகப் பெய்பலிக் கென்றுழல் பெரியவர் பெருமான், கருஞ்சுனை முல்லைநன் பொன்னடை வேங்கை களிமுக வண்டொடு தேனினமுரலு, மிருஞ்சுனை மல்கிய விலம்பையங்கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே. 10

கந்தனை மலிகனை கடலொலியோதங் கானலங்கழிவளர் கழுமலமென்னு நந்தியாருறைபதி நான்மறைநாவ னற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்த, னெந்தையார்வளநக ரிலம்

பையங்கோட்டு ரிசையோடுகூடியபத்தும் வல்லார்போய் வெந்துயர்கெடுகிட விண்ணவரோடும் வீடுபேறின்மை யின் விடெளிதாமே.

சுவாமி-சந்திரசேகரர், தேவி-கோடேந்துமுலையம்மை.

இது அமுத கலாநிதியாகிய சந்திரன் பூசித்துப் பேறு பெற்ற தலம். தக்கோலத்திலிருந்து தென் கிழக்கில் ஏழு மைல்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### மூன்றாம் திருமுறை.

**14. திருவிற்கோலம். கூவம்.** பண்-காந்தார பஞ்சமம்

திருச்சிற்றப்பலம்.

உருவினா ருமையொடு மொன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினா னுறைவிடந் திருவிற் கோலமே. 1

சிற்றிடை யுமையொரு பங்க னங்கையி
லுற்றதோ ரெரியின னொருசரத் தினால்
வெற்றிகொ ளவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவ னுறைவிடந் திருவிற் கோலமே. 2

ஐயனல் லதிசய னயன்விண் ணோர்தொழு
மையணி கண்டனார் வண்ணம் வண்ணவான்
பையர வல்குலாள் பாக மாகமுஞ்
செய்யவ னுறைவிடந் திருவிற் கோலமே. 3

விதைத்தவன் முனிவருக் கறமுன் காலனை
யுதைத்தவ னுயிரிழந் துருண்டு வீழ்தரப்
புதைத்தவ னெடுநகர்ப் புரங்கண் மூன்றையுஞ்
சிதைத்தவ னுறைவிடந் திருவிற் கோலமே. 4

முந்தினான் மூவருண் முதல்வ னாயினான்
கொந்துலா மலர்ப்பொழிற் கூக மேவினா
னந்திவான் பிறையினா னடியர் மேல்வினை
சிந்துவா னுறைவிடந் திருவிற் கோலமே. 5

தொகுத்தவ னருமறை யங்க மாகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவ னுறைவிடந் திருவிற் கோலமே 6

விரித்தவ னருமறை விரிசடை வெள்ளந்
தரித்தவன் றரியலர் புரங்க ளாசற
வெரித்தவ னிலங்கையர் கோனி டர்ப்படச்
சிரித்தவ னுறைவிடந் திருவிற் கோலமே. 7-8

திரிதரு புரமெரி செய்த சேவகன்
வரியர வொடுமதி சடையில் வைத்தவ
னரியொடு பிரமன தாற்றலா லுருத்
தெரியல னுறைவிடந் திருவிற் கோலமே. 9

சீர்மையில் சமணொடு சீவரக்கையர்
நீர்மையி லுரைகள் கொள் ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடுஞ்
சீர்மையி னனிடந் திருவிற் கோலமே. 10

கோடல்வெண் பிறையனைக் கூக மேவிய
சேடனை செழுமதிற் றிருவிற் கோலத்தை
நாடவல் லஃதமிழ் ஞான சம்பந்தன்
பாடல்வல் லார்களுக் கில்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: **திரிபுராந்தகர்**-தேவி: **திரிபுராந்தகி.**

இது திரிபுரதகனஞ் செய்யும்பொருட்டுத் தேவர்கள் யாவரும் ஒருங்குகூடிச் சிவபெருமானைப் பூசித்ததும், உமாதேவியார் பூசை செய்ததும் ஆகிய மகிமைவாய்ந்த தலம். கோட்டூரிலிருந்து வடகிழக்கில் இரண்டு மைல் உள்ளது.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை.

### 15. திருவாலங்காடு. பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 1

கேடும்பிறவியு மாக்கினாருங் கேடிலா
விடுமாநெறி விளம்பினாரெம் விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண் டல்லிக் கணப்பேயோ
டாடும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 2

கந்தங்கமழ்கொன்றைக் கண்ணிசூடி கனலாடி
வெந்தபொடிநீற்றை விளங்கப்பூசும் விகிர்தனார்
கொந்தண்பொழிற்சோலை யரவிற்றோன்றிக் கோடல்பூத்
தந்தண்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 3

பாலவெண்மதிசென்னி படரச்சூடிப் பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய கருத்தனார்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி மடமஞ்ஞை
யாலும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 4

ஈர்க்கும்புனல்சூடி யிளவெண்டிங்கள் முதிரவே
பார்க்குமரவம்பூண் டாடிவேடம் பயின்றாருங்
கார்க்கொள்கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 5

பறையுஞ்சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையு மைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர் சடையினாரும் பேடைவண்
டறையும்பழையனூ ராலங்கெட்டெம் மடிகளே. 6

நுணங்குமறைபாடி யாடிவேடம் பயின்றாரு
மிணங்குமலைமகளோ டிருகூறொன்றா யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்துங்
டணங்கும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. [கேட் 7

கணையும்வரிசிலையு மெரியுங்கூடிக் கவர்ந்துண்ண
விணையிலெயில்மூன்று மெரித்திட்டாரெம் மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங் கலையுமெல்லாங் கங்குல்சேர்ந்
தணையும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 8

கவிழமலைதளரக் கடகக்கையா லெடுத்தான்றோள்
பவழநுனைவிரலாற் பையவூன்றிப் பரிந்தாருந்
தவழுங்கொடிமுல்லை புறவஞ்சேர நறவம்பூத்
தவிழும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 9

பகலுமிரவுஞ்சேர் பண்பினாரு நண்போரா
திகலுமிருவர்க்கு மெரியாய்த்தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடு வல்லார்க்கென்றுந் தீயபோ
யகலும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 10

போழம்பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம்வருமளவும் வெயிலேதுற்றித் திரிவாரும்
கேழல்வினைபோகக் கேட்பிப்பாருங் கேடிலா
வாழ்வர்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 11

சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞான சம்பந்த
னாந்தண்பழையனூ ராலங்காட்டெம் மடிகளை
வேந்தனருளாலே விரித்தபாட லிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந் தீர்த்தமாகச் சேர்வாரே. 12

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### 4-ம் திருமுறை. திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளநீர்ச் சடையர்போலும் விரும்புவார்க் கெளியர்போ
முள்ளநேள யுருகி நின்றங் குகப்பவர்க் கன்பர் போலுங் [லு
கள்ளமே வினைகளெல்லாங் கரிசறுத் திடுவர் போலு
மள்ளலம் பழனை மேய வாலங்காட் டடிகளாரே. 1

செந்தழ லுருவர் போலுஞ் சினவிடை யுடையர் போலும்
வெந்தவெண் ணீறுகொண்டு மெய்க்கணிந் திடுவர் போலு
மந்தமாம் பொழிற்ப ழனை மல்கிய வள்ளல் போலு
மந்தமி லடிகள் போலு மாலங்காட் டடிகளாரே. 2

கண்ணினாற் காம வேளைக் கனலெழ விழிப்பர் போலு
மெண்ணிலார் புரங்கண் மூன்று மெரியுணச் சிரிப்பர் போ
பண்ணினார் முழவ மோவாப் பைம்பொழிற் பழனைமேய [லு
வண்ணலா ரெம்மை யாளு மாலங்காட் டடிகளாரே. 3

காறிடு விடத்தை யுண்ட கண்டரெண் டோளர் போலுந்
தூறிடு சுடலை தன்னிற் சுண்ணவெண் ணீற்றர் போலுங்
கூறிடு முருவர் போலுங் குளிர்பொழிற் பழனை மேய
வாறிடு சடையர் போலு மாலங்காட் டடிகளாரே. 4

பார்த்தனோ டமர் பொருது பத்திமை காண்பர் போலுங்
கூர்த்தவா யம்பு கோத்துக் குணங்களை யறிவர் போலும்
பேர்த்துமோ ராவ நாழி யம்பொடு கொடுப்பர் போலுந்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே. 5

வீட்டினார் சுடுவெண் ணீறு மெய்க்கணிந் திடுவர் போலுங்
காட்டினின் றாடல் பேணுங் கருத்தினை யுடையர் போலும்
பாட்டினார் முழவ மோவாப் பைம்பொழிற் பழனை மேயார்
ஆட்டினா ரரவக் தன்னை யாலங்காட் டடிக ளாரே. 6

தாளுடைச் செங்க மலத் தடங்கொள் சேவடியர் போலு
நாளுடைக் காலன் வீழ வுதைசெய்த நம்பர் போலுங்
கோளுடைப் பிறவி தீர்ப்பார் குளிர்பொழிற் பழனை மேய
வாளுடை யண்ணல் போலு மாலங்காட் டடிகளாரே. 7

கூடினா ருமைதன் னோடே குறிப்புடை வேடங் கொண்டு
சூடினார் கங்கை யாளைக் கவறிடு சடையர் போலும்
பாடினார் சாம வேதம் பைம்பொழிற் பழனைமேயார்
ஆடினார் காளி காண வாலங்காட் டடிகளாரே. 8

வெற்றரைச் சமண ரோடும் விலையுடைக் கூறை போர்க்கும்
மொற்றரைச் சொற்கள் கொள்ளார் குணங்களை யுகப்பர் போலும்
பெற்றமே யுகந்தங் கேறும் பெருமையையுடையர்போலும்
அற்றங்க ளறிவர் போலு மாலங்காட் டடிகளாரே. 9

மத்தனைய மலை யெடுத்த வரக்கனைக் கரத்தோ டொல்க
வொத்தினார் திரு விரலா லூன்றி யிட் டருள்வர் போலும்
பத்தர்தம் பாவந் தீர்க்கும் பைம்பொழிற் பழனை மேய
அத்தனார் நம்மை யாள்வா ராலங்காட் டடிகளாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## 6-ம் திருமுறை. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே யூழிதோ றூழி யுயர்ந்தார் தாமே, நின்றாகி யெங்கு நிமிர்ந்தார் தாமே நீர் வளிதீ யாகாச மானார் தாமே, கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே கோலப் பழனை யுடையார் தாமே, சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 1

மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே வானோர் வணங்கப் படுவார் தாமே, சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே: பலபலவும் வேடங்க ளானார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, சிலைமலையா மூவெயிலு மட்டார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 2

ஆவுற்ற வைந்து முகந்தார் தாமே யளவில் பெருமை யுடையார் தாமே, பூவுற்ற நாற்றமாய் நின்றார் தாமே புனிதப் பொருளாகி நின்றார் தாமே, பாவுற்ற பாட லுகப்பார் தாமே, பழனை பதியா வுடையார் தாமே, தேவுற் றடிபரவ நின்றார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 3

நாறுபூங் கொன்றை முடியார் தாமே நான்மறையோ டாறங்கஞ் சொன்னார் தாமே, மாறிலா மேனி யுடையார் தாமே மாமதியஞ் செஞ்சடைமேல் வைத்தார் தாமே, பாறினார் வெண்டலையி லுண்டார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, தேறினார் சித்தத்திருந்தார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 4

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே யந்தியுஞ் சந்தியு மானார் தாமே, சொல்லும் பொருளெலா மானார் தாமே

தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே, பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே திருவாலங் காடுறை யுஞ் செல்வர் தாமே. 5

தொண்டாய்ப் பணிவார்க் கணியார் தாமே தூநீ றணி யுஞ் சுவண்டர் தாமே, தண்டா மறையானு மாலுந் தேடத் தழலுருவா யோங்கி நிமிர்ந்தார் தாமே, பண்டா னிசை பாட நின்றார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, திண்டோள்களெட்டு முடையார் தாமே திருவாலங் காடு றையுஞ் செல்வர் தாமே. 6

மையாருங் கண்ட மிடற்றார் தாமே மயானத்தி லாடல் மகிழ்ந்தார் தாமே ஐயாறு மாரூரு மானைக்காவு மம்பலமுங் கோயிலாக் கொண்டார் தாமே, பையா டரவ மசைத்தார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, செய்யாள் வழிபட நின்றார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே 7

விண்முழுது மண்முழுது மானார் தாமே மிக்கோர்க ளேத்துங் குலத்தார் தாமே, கண்விழியாற் காமனையுங் காய்ந்தார் தாமே, காலங்க ளூழி கடந்தார் தாமே, பண் ணியலும் பாட லுகப்பார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, திண்மழுவா ளேந்து கரத்தார் தாமே, திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 8

காரார் கடனஞ்சை யுண்டார் தாமே கயிலை மலையை யுடையார் தாமே யூராவேகம்ப முகந்தார் தாமே யொற்றி யூர் பற்றி யிருந்தார் தாமே, பாரார் புகழப் படுவார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, தீராத வல்வினை நோய் தீர்ப்பார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 9

மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே வண்கயிலை மாமலையை வந்தி யாத, நிலக் கடல் சூழிலங்கைக் கோனை நெரிய விரலா லடர்த்தார் தாமே, பாலொத்த மேனி நிறத்தார் தாமே பழனை பதியா வுடையார் தாமே, சீலத்தா ரேத்துந் திறத்தார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 7-ம் திருமுறை. பண்-பழம்பஞ்சுரம்.

### திருச்சிற்றம்பலம்.

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 1

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யேவந்திங் கெனையாண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவ மரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய
ஐயா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 2

தூண்டா விளக்கி னற்சோதி தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டா யெலும்பைப் புரமூன்றும் பொடியாச்செற்ற புண்ணியனே
பாண்டாழ்வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
ஆண்டா வாலங்காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 3

மறிநே ரொண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி
அறிவே யழிந்தே னையாநான் மையார்கண்ட முடையானே
பறியா வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அறிவே யாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 4

வேலங்காடு தடங்கண்ணார் வலையுட் பட்டுன் னெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே
பாலங்காடி நெய்யாடி படர்புன் சடையாய் பழையனூர்
ஆலங் காடா வுன்னுடைய வடியார்க் கடியே னாவேனே. 5

எண்ணார் தங்களெயிலெய்த வெந்தா யெந்தை பெருமானே
கண்ணா யுலகங் காக்கின்ற கருத்தா திருத்த லாகாதாய்
பண்ணா ரிசைக ளதுகொண்டு பலருமேத்தும் பழையனூர்
அண்ணா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 6

வண்டார் குழலி யுமைநங்கை பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்க ளெரிசெய்த விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அண்டா வாலங் காடா வுன்னடியார்க் கடியே னாவேனே. 7

பேழ்வா யரவி னணையானும் பெரியமலர்மே லுறைவானுந்
தாழா துன்றன் சரண்பணியத் தழலாய்நின்ற தத்துவனே
பாழாம் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்தன்னை
ஆள்வா யாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 8

எம்மா னெந்தை மூத்தப்ப னேழேழ் படிகா லெமையாண்ட
பெம்மா னீமப் புறங்காட்டிற் பேயோ டாடல் புரிவானே
பன்மா மலர்க ளவைகொண்டு பலருமேத்தும் பழையனூர்
அம்மா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. 9

பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்த னாலங் காடன்ற னடிமைத் திறமே யன்பாகிச்
சித்தர் சித்தம்வைத்தபுகழ்ச் சிறுவ னூர னொண்டமிழ்கள்
பத்தும் பாடி யாடுவார் பரம னடியே பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: ஊர்த்ததாண்டவர்—தேவி: வண்டார்குழலியம்மை.

இது கற்பககாட்டிறைவனாகிய தேவேந்திரன், ஆதிசேடன், சுனந்தர் முதலியோர்களும் பூசித்துப் பேறுபெற்ற தலம். சிவபெருமான் நிருத்தவாதஞ் செய்யவந்த காளியை ஊர்த்ததாண்டவத்தால் இத்தலத்தில் வென்றருளினர். இவ்விடத்தில் காரைக்காலம்மையார் பேய்க்கோலத்துடன் திருக்கைலைக்குச் சென்று சிவபெருமானுடைய நடனத்தைத் தரிசித்துக்கொண்டு எஞ்ஞான்றும் பிரியாதிருக்க வரம் வேண்டியபோது, பெருமான் திருவாலங்காட்டிற்குச் செல்லும்படி கட்டளையிட்டருள, அங்ஙனமே சென்று எம்பெருமானைப் பிரியாமல் என்றும் திருநடன தரிசனஞ் செய்துவருகின்றனர். பூர்வம் பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வேளாளர்கள் ஒரு செட்டியின் பழிக்காகச் சத்தியத்தை நிலைநிறுத்தும்பொருட்டு எழுபதுபெயர் தீக்குழி பாய்ந்து அழியாப் பெரும்புகழை உலகில் நாட்டிய தலம். ரயில் நிலயத்திலிருந்து வடகிழக்கில் 3 மைல்.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

**16. திருப்பாசூர்.** பண்-காந்தாரம்.

2-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தை யிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாள ரென்ன மகிழ்வா ரூர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே. 1

பேரும் பொழுதும் பெயரும் பொழுதும் பெம்மானென்
றாருந் தனையு மடியா ரேத்த வருள்செய்வார்
ஊரு மரவ முடையார் வாழு மூர்போலும்
பாரின் மிசையார் பாட லோவாப் பாசூரே. 2

கையாற் றொழுது தலைசாய்த் துள்ளங் கசிவார்கண்
மெய்யார் குறையுந் துயருந் தீர்க்கும் விமலனார்
நெய்யாடு தலஞ் சுடையார் நிலாவு மூர்போலும்
பைவாய நாகங் கோட லீனும் பாசூரே. 3

பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற் பொலிவெய்தக்
கொங்கார் கொன்றை சூடியெ னுள்ளங் குளிர்வித்தார்
தங்கா தலியுந் தாமும் வாழு மூர்போலும்
பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாசூரே. 4

ஆடற் புரியு மைவா யரவொன் றரைச்சாத்துஞ்
சேடச் செல்வர் சிந்தையு ளென்றும் பிரியாதார்
வாடற் றலையிற் பலிதேர் கையா ரூர்போலும்
பாடக் குயில்கள் பயில்பூஞ் சோலைப் பாசூரே. 5

கானின் றதிரக் கனல்வாய் நாகங் கச்சாகத்
தோலொன் றுடையார் விடையார் தம்மைத் தொழுவார்
மால்கொண் டோட மைய றீர்ப்பா ரூர்போலும் [கண்
பால்வெண் மதிதோய் மாடஞ் சூழ்ந்த பாசூரே. 6

கண்ணி னயலே கண்ணொன் றுடையார் கழலுன்னி
யெண்ணுந் தனைய மடியா ரேத்த வருள்செய்வா
ருண்ணின் றுருக வுவகைத் தருவா ரூர்போலும்
பண்ணின் மொழியார் பாட லோவாப் பாசூரே. 7

தேசு குன்றாத் தெண்ணீ ரிலங்கைக் கோமானைக்
கூச வடர்த்துக் கூர்வாள் கொடுப்பார் தம்மையே
பேசிப் பிதற்றப் பெருமை தருவாரூர் போலும்
பாசித் தடமும் வயலுஞ் சூழ்ந்த பாசூரே. 8

நகுவாய் மலர்மே லயனு நாகத் தணையானும்
புகுவா யறியார் புறநின் றோரார் போற்றோவார்
செகுவா யுகுபற் றலைசேர் கையா ரூர்போலும்
பகுவாய் நாரை யாரல் வாரும் பாசூரே. 9

தூய வெயினின் றுழல்வார் துவர்தோ யாடையார்
நாவில் வெய்ய சொல்லித் திரிவார் நயமில்லார்
காவல் வேவக் கணை யொன் றெய்தா ரூர்போலும்
பாவைக் குரவம் பயில்பூஞ் சோலைப் பாசூரே. 10

ஞான முணர்வான் காழி ஞானசம்பந்தன்
றேனும் வண்டு மின்னிசை பாடுந் திருப்பாசூர்க்
கானம் முறைவார் கழல்சேர் பாட லிவைவல்லா
ரூன மிலரா யும்பர் வானத் துறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### 5-ம் திருமுறை. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்தி மூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக் கோன்றனக் கேயருள் செய்தவர்
பந்திந் செஞ்சடைப் பாசூ ரடிகளே. 1

மடந்தை பாக மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்த வல்வினை போக்கிடுஞ் சோதியார்
கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் பாசூ ரடிகளே. 2

நாறு கொன்றைய நாகமுந் திங்களும்
ஆறுஞ் செஞ்சடை வைத்த வழகனார்
காறு கண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறி னேட்டினர் பாசூ ரடிகளே. 3

வெற்றி யூருறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுக் தேறு மொருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளரவந்தனைப்
பற்றி யாட்டுவர் பாசூ ரடிகளே. 4

மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கை யராகி யிருப்பவர்
துட்ட ரேலறியே னிவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. 5

பல்லி லோடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறி யேன்சொலீர்
பல்கு நீற்றினர் பாசூ ரடிகளே. 6

கட்டி விட்ட சடையர் கபாலியார்
எட்டி நோக்கிவந்தில் புகுந் தவ்வவர்
இட்ட மாவறி யேனிவர் செய்வன
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. 7

வேத மோதிவந்தில் புகுந் தாரவர்
காதில் வெண்குழை வைத்த கபாலியர்
நீதி யொன்றறி யார்நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாசூ ரடிகளே. 8

சாம்பற் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன் மூவெருத் தேறு மொருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பு மாட்டுவர் பாசூ ரடிகளே. 9

மாலி னொடு மறையவன் றானுமாய்
மேலுங் கீழு மளப்பரி தாயவர்
ஆலி னீழ லறமுரைத் தார்மிகப்
பால்வெண் ணீற்றினர் பாத மடிகளே. 10

திரியு மூவெயில் செங்கணை யொன்றினால்
எரிய வெய்தன ரேனு மிலங்கைக்கோன்
நெரிய வூன்றியிட் டார்விர லொன்றினால்
பரியர் நுண்ணியர் பாத மடிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

6-ம் திருமுறை. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ் ஞாலத்
தார் விரும்புகின்ற, எண்ணாகி யெழுத்தாகி யியல்புமாகி
யெழுலகந் தொழுதேத்திக் காண நின்ற, கண்ணாகி மணி
யாகிக் காட்சியாகிக் காதலித்தங் கடியார்கள் பரவநின்ற,
பண்ணாகி யின்னமுதாம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்
டடியே னுய்ந்த வாறே. 1

வேதமோர் நான்கா யாறங்க மாகி விரிக்கின்ற
பொருட்கெல்லாம் வித்து யாகிக், கூதலாய்ப் பொழிகின்ற
மாரி யாகிக் குவலையங்கண் முழுதுமாய்க் கொண்டலாகிக்,
காதலால் வானவர்கள் போற்றி யென்றுங் கடிமலர்க
ளவை தூவி யேத்துகின்ற, பாதியோர் மாதினனைப் பாசூர்
மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 2

தடவரைக ளேழுமாய்க் காற்றாய்த் தீயாய்த் தண்
விசும்பாய்த் தண்விசும்பி னுச்சி யாகிக், கடல்வலையஞ்
சூழ்ந்ததொரு ஞாலமாகிக் காண்கின்ற கதிரவனு மதியு
மாகிக், குடமுழவச் சரிவழியே யனல் கையேந்திக் கூத்
தாட வல்ல குழக னாகிப், படவரவொன் றதுவாட்டிப்
பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 3

நீராருஞ் செஞ்சடைமே லரவங் கொன்றை நிறைமதிய முடன்சூடி நீதியாலே, சீராரு மறையோதி யுலகமுய்யச் செழுங்கடலைக் கடைந்தகட னஞ்ச முண்ட, காராருங் கண்டனைக் கச்சிமேய கண்ணுதலைக் கடலொற்றி கருதி னானைப், பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப் பரஞ் சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 4

வேடனாய் விசயன்றன் வியப்பைக் காண்பான் விற் பிடித்துக் கொம்புடைய வேனத் தின்பின், கூடினா ருமைய வளுங் கோலங் கொள்ளக் கொலைப்பகழி யுடன்கோத்துக் கோரப்பூசல், ஆடினார் பெருங்கூத் துக் காளிகாண வரு மறையோ டாறங்க மாய்ந்து கொண்டு, பாடினார் நால் வேதம் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 5

புத்தியிற்றச் சிலந்தியுந்தன் வாயி னூலாற் பொதுப் பந்த லதுவிழைத்துச் சருகான்மேய்ந்த, சித்தியினா லர சாண்டு சிறப்புச் செய்யச் சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான்மிக்க, வித்தகத்தால் வெள்ளானை விள்ளா வன்பு விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப், பத்தர்களுக் கின் னமுதாம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 6

இணையொருவர் தாமல்லா லியாருமில்லா ரிடை மருதோ டேகம்பத் தென்றுநீங்கா ரணைவரிய ரியாவர்க்கு மாதி தேவ ருருமந்த நன்மையெலா மடியார்க் கீவர், தணைன்முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித் தத்துவனைச் சாந்தகிலி னளறு தோய்ந்த, பணைமுலையாள் பாகனை யெம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 7

அண்டவர்கள் கடல்கடைய வதனுட்டோன்றி யதிர்ந் தெழுந் தவாலாலம் வேலை ஞாலம், எண்டிசையுஞ் சுடு கின்ற வாற்றைக் கண்டு மிமைப்பளவி லுண்டிருண்ட கண்டர் தொண்டர், வண்டுபடு மதுமலர்க டூவி நின்று வானவர்க டானவர்கள் வணங்கி யேத்தும், பண்டரங்க வேடனையெம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 8

ஞாலத்தை யுண்ட திருமாலு மற்றை நான்முகனு மறியாத நெறியான் கையிற், சூலத்தா லந்தகனைச் சுருளக் கோத்துத் தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக், காலத்தா லுதைசெய்து காதல் செய்த வந்தணனைக் கைக்கொண்ட செவ்வான் வண்ணர், பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 9

வேந்தனெடு முடியுடைய வரக்கர் கோமான் மெல்லியலா ளுமைவெருவ விரைந்திட் டோடிச், சாந்தமென நீறணிந்தான் கயிலை வெற்பைத் தடக்கைகளா லெடுத்திடலுந் தாளா லூன்றி, யேந்துதிர டிண்டோளுந் தலைகள் பத்து மிறுத்தவன்ற னிசைக்கேட்டு விரக்கங்கொண்ட, பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: **பாசூர்நாதர்**—தேவி: **பசுபதிநாயகி.**

வியாசபகவானும், சந்திரனும், அங்காரகனும் பூசித்துப் பேறுபெற்றதும், சிவபெருமான் தன்னை மெய்யன்புடன் வழிபாடு செய்த சோழராஜன்பொருட்டு பாம்பாட்டி சொரூபமாக வந்து தரிசனந் தந்தருளியதுமாகிய தலம். திருவள்ளூரிலிருந்து மேற்கே 4 மைல்.

---

**17. திருவெண்பாக்கம்.** பண்-சீகாமரம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

7-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்
பழியதனைப்பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்[காற்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
வுழையுடையா னுள்ளிருந்து ளோம்போகீ ரென்றானே. 1

இடையறியேன் தலையறியே னெம்பெருமான் சரணமென்
னடையுடைய னம்மடியா னென்றவற்றைப் பாராதே [பே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்றோ
லுடையுடையா னெனையுடையா னுளோம்போகீ ரென்றானே. 2

செய்வினையொன் றறியாதேன் றிருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டா
பையரவா விங்கிருந்தா யோவென்னப் பரிந்தென்னை [வோ
யுய்யவருள் செய்யவல்லா னுளோம்போகீ ரென்றானே. 3

கம்பமருங் கரியுரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனாகி
நம்பியிங்கே யிருந்தீரே யென்றுநான் கேட்டலுமே
யும்பர்தனித் துணையெனக்கு ளோம்போகீ ரென்றானே. 4

பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடைமேற் பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமா வெருதேறித்
துன்னியிரு பாலடியார் தொழுதேத்த வடியேனு
முன்னதமாய்க் கேட்டலுமே யுளோம்போகீ ரென்றானே. 5

கண்ணுதலாற் காமனையுங் காய்ந்ததிறர் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேற் றிமலர்ந்த கொன்றையினன்
கண்மணியை மறைப்பித்தா யிங்கிருந்தாயோவென்ன
ஒண்ணுதலி பெருமானா ருளோம்போகீ ரென்றானே. 6

பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீ ரிங்கிருந்தீ ரேயென்ன
ஊரரவ மரைக்கசைத்தா னுளோம்போகீ ரென்றானே. 7

வாரிடங்கொள் வனமுலையா டன்னோடு மயானத்துப்
பாரிடங்கள் பலசூழப் பயின்றாடும் பரமேட்டி
காரிடங்கொள் கண்டத்தள் கருதுமிடந் திருவொற்றி
யூரிடங்கொண் டிருந்தபிரா னுளோம்போகீ ரென்றானே. 8

பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீ ழிரு
சொன்னவெனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே [வென்று
யென்னவல்ல பெருமானே யிங்கிருந்தா யோவென்ன
வொன்னலரைக் கண்டாற்போ லுளோம்போகீ ரென்றானே

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாந்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்கவுலகமெல்லா
மீன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
வூன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே. 10

ஏராரும் பொழினிலவு வெண்பாக்க மிடங்கொண்ட
காராரு மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடுஞ்
சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
வாரூரன் றமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்.

**சுவாமி: வெண்பாக்கநாதர்—தேவி: கனிவாய்மொழியம்மை.**

இது சதாநந்தரிஷி பூசித்துப் பேறுபெற்றதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூருக்குப் பரவைநாச்சியாரிடம் போவதில்லையென்று திருவொற்றியூரின்கண் சங்கிலிநாச்சியாருக்களித்த சத்திய வாக்கை மீறினமையால் நேத்ராபாவமடைந்து வருந்தித் திருப்பதிகம் பாடச் சிவபெருமான் சிறிது திருவுள்ளமிரங்கி ஊன்றுகோல் ஒன்று கொடுத்தருளியதுமாகிய தலம். திருப்பாசூருக்கு வடக்கில் மூன்று மைல்.

---

**18. திருக்கள்ளில்.** பண்-வியாழக்குறிஞ்சி.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

**முதல் திருமுறை.**

திருச்சிற்றம்பலம்.

முள்ளின்மேன் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூகைக் கொடி விளைந்த
கள்ளின்மேய வண்ணல் கழல்க ணாளு
முள்ளுமே லுயிர்வைத்த லொரு தலையே. 1

ஆடலான் பாடலா னரவங்கள் பூண்டா
னோடலாற் கலனில்லா னுறைபதியால்
காடலாற் கருதாத கள்ளின் மேயான்
பாடலாம் பெரியார்கள் பரசு வாரே. 2

எண்ணார்மும் மதிலெய்த விமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளின் மேயான்
பெண்ணாணும் பெருமானெம் பிஞ்ஞகனே. 3

பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலுந்
நறைபெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளின் மேயா
னிறைபெற்ற வடியார்கள் நெஞ்சு ளானே. 4

விரையாலு மலராலும் விழுமை குன்றா
வுரையாலு மெதிர்கொள்ள வூரா ரம்மாக்
கரையார் பொன் புனல்வேலிக் கள்ளின் மேயா
னரையார்வெண் கோவணத்த வண்ண றானே. 5

நலனாய பலிகொள்கை நம்பா னல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் கள்ளின் மேயான்
மலனாய தீர்த்தெய்து மாதவத் தோர்க்கே. 6

பொடியார்மெய் பூசினும் புறவி னறவங்
குடியாவூர் திரியினுங் கூப்பி டினுங்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளின் மேயா
னடியார்பண் புகழ்வார்க ளாதர்களே. 7

திருநீல மலரொண்கண் டேவி பாகம்
புரிநூலுந் திருநீறும் புல்கு மார்பிற்
கருநீல மலர்விம்மு கள்ளி லென்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே. 8

வரியாய மலரானும் வையந் தன்னை
யுரிதாய வளந்தானு முள்ளா தற்கங்
கரியானு மறியாத கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. 9

ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயன் மல்கு கள்ளி
நீர்ச்செய்த சடையண்ண றிருந் தடியே. 10

திகைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்த னல்ல
முகைமேவு முதிர்சடையான் கள்ளிலேத்த
புகழோடும் பேரின்பம் புகுதுமன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

**சுவாமி: சிவானந்தர்—தேவி: ஆனந்தவல்லி.**

இது பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து சாபாநுக்கிரக வல்லமையும், திரிகால ஞானமும் பெற்ற தபோநிதியாகிய பிருகுமகாரிஷியானவர் மெய்யன்புடன் பூசிக்க, சிவபெருமான் மிக்க கருணைத் திருவுள்ளத்துடன் ஞானாசாரிய திருவுருவமாகிய தக்ஷிணாமூர்த்தி திருக்கோலமா யெழுந்தருளி வந்து தரிசனந் தந்தருளிய தலம். கூவத்திற்கு வடமேற்கில் 12 மைல்.

---

## 19. திருக்காளத்தி.

பண்-கொல்லி.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

**3-ம் திருமுறை.**

திருச்சிற்றம்பலம்.

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மர
முந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
யெந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே. 1

ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனஞ்
சாலமா பீலியுஞ் சண்பக முந்தியே
காலமார் முகலிவந் தணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே. 2

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினி
லோங்குமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே. 3

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளு
மரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
யொருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுல காள்வரே. 4

வரைதரு மகிலொடு மாமுத்த முந்திய
திரைதரு முகலியின் கரையினிற் றேமலர்
விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவ
னிரைதரு கழலிணை நித்தலு நினைமினே. 5-6-7

முத்துமா மணிகளு முழுமலர்த் திரள்களு
மெத்துமா முகலியின் கரையினி லெழில்பெறக்
கத்திட வரக்கனைக் கால்விர லூன்றிய
வத்தன்றன் காளத்தி யணைவது கருமமே. 8

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினி னன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
வண்ணலார் காளத்தி யாங்கணைந் துய்மினே. 9

வீங்கிய வுடலினர் விரிதரு துவருடைப்
பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமி
னோங்குவன் காளத்தி யுள்ளமோ டுணர்தர
வாங்கிடு வினைகளை வானவர்க் கொருவனே. 10

அட்டமா சித்திக ளணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொ
லிட்டமாய்ப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்க டானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடந் தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னைவினவி, லேனமின மானினொடு கிள்ளைதினை கொள்ளவெழி லார்கவணினாற், கானவர்த மாமகளிர் கனகமணிவிலகுகா ளத்திமலையே. 1

முதுசினவி லவுணர்புர மூன்றுமொரு நொடிவரை
யின் மூளவெரிசெய், சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்
விரும்புமலை தன்னைவினவி, லெதிரெதிர வெதிர்பிணைய
வெழுபொறிகள் சிதறவெழி லேனமுழுதக், கதிர்மணியின்
வளரொளிகொ ளிருளகல நிலவுகா ளத்திமலையே. 2

வல்லைவரு காளியைவ குத்துவலி யாகுமிகு தாருகனை
நீ, கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை கூறி
வினவிற். பல்பல விருங்கனி பருங்கிமிக வுண்டவை
நெருங்கியினமாய்க், கல்லதிர நின்றுகரு மந்திவிளை யாடுகா
ளத்திமலையே. 3

வேயனைய தோளுமையோர் பாகமது வாகவிடை யேறி
சடைமேற், றூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னை
வினவில், வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகு
நயனங், காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்தி
மலையே. 4

மலையின்மிசை தனின்முகில்போல் வருவதொரு மத
கரியை மழைபொல்லறக், கொலைசெய்துமை யஞ்சவுரி
போர்த்தசிவன் மேவுமலை கூறிவினவி, லலைகொள்புன
லருவிபல சுனைகள்வழி யிழியவய னிலவுமுது வேய், கலக
லென வொளிகொள்கதிர் முத்தமவை சிந்துகா ளத்தி
மலையே. 5

பாரதம் விளங்கிய பகீரத னருந்தவ முயன்றபணிகண்
டாருள் புரிந்தலைகொள் கங்கைசடை யேற்றவரன்
மலையைவினவில், வாரத ரிருங்குறவர் சேவலின் மடுத்தவ
ரெரித்தவிறகிற், காரகி லிரும்புகை விசும்புகமழ்கின்ற
காளத்தி மலையே. 6

ஆருமெதி ராதவலியாகியச லந்தரனை யாழியதறு,
வீரும்வகை செய்தருள் புரிந்தவனி ருந்தமலை தன்னை
வினவி, ஊருமர வம்மொளிகொண் மாமணியு மிழ்ந்த
வையு லாவிவரலாற், காரிருள்கடிந்துகன கம்மெனவி
ளங்குகா ளத்திமலையே. 7

எரியனைய சுரிமயி ரிராவணனை யீடழிய வெழில்கொள் விரலாற், பெரியவரை யூன்றியருள் செய்தசிவன் மேவுமலை பெற்றிவினவில், வரியசிலை வேடுவர்க ளாடவர்க ளீடுவரை யூடுவரலாற், கரியினொடு வரியுழுவை யரியினமும் வெருவுகா ளத்திமலையே. 8

இனதளவி லிவனதடி யிணையுமுடி யறிதுமென விகலுமிருவர், தனதுருவு மறிவரிய சகலசிவன் மேவுமலை தன்னைவினவிற், புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தருமணம்புணருநாட், கனகமென மலர்களணி வேங்கைகணி லாவுகா ளத்திமலையே. 9

நின்றுகவ ளம்பலகொள் கையரொடு மெய்யிலிடு போர்வையவரு நன்றியறி யாதவகை நின்றசிவன் மேவுமலை நாடிவினவிற், குன்றின்மலி துன்றுமொழி னின்றுகுளிர் சந்தின்முறி தின்றுகுலவிக் கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடுகா ளத்திமலையே. 10

காடதிட மாகநட மாடுசிவன் மேவுகா ளத்திமலையை, மாடமொடு மாளிகைக ணீடுவளர் கொச்சைவய மன்னுதலைவன், நாடுபல நீடுபுகழ்ஞானசம் பந்தனுரை நல்லதமிழின், பாடலொடு பாடுமிசை வல்லவர்க ணல்லர் பரலோக மெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

**6-ம் திருமுறை.** திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண் வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சையல்லால், மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண் மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப், பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண் பொய்யாத பொழிலேழுந் தாங்கி நின்ற, கற்றூண்காண் காளத்தி காணப்பட்ட கணநாதன் காணவனென் கண்ணு ளானே. 1

இடிப்பான்கா ணென்வினையே யேகப்பன்கா ணெலும்
பாபரணன்கா ணெல்லாமுன்னே, முடிப்பான்காண்,
மூவுலகு மாயி னான்காண் முறைமையா லைம்பொறியும்
வழுவா வண்ணம், படித்தான் றலையறுத்த பாசு பதன்
காண் பராய்த்துறையான் பழனம்பைஞ்ஞீலி யான்காண்,
கடித்தார்கமழ்கொன்றைக் கண்ணி யான்காண் காளத்தி
யானவனென் கண்ணு ளானே. 2

நாரணன்கா ணான்முகன்கா ணால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவா யன்ன, பூரணன்காண்
புண்ணியன்காண் புராணன் றான்காண் புரிசடைமேற்
புனலேற்ற புனிதன் றான்காண், சாரணன்கண் சந்திரன்
காண் கதிரோன் றான்காண் தன்மைக்கண்டானே காண்
டக்கோர்க்கெல்லாம், காரணன்காண் காளத்தி காணப்
பட்ட கணநாதன் காணவனென் கண்ணு ளானே. 3

செற்றான்கா ணென்வினையைத் தீயாடிகாண் திரு
வொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க். குற்றான்கா
ணேகம்பமேவி னான்கா ணுமையாளற் கொழுநன்கா
ணிமையோரேத்தும், சொற்றான்காண் சோற்றுத்துறை
யுளான்காண் சுறவேந்த னேவலத்தை நீறா நோக்கக்,
கற்றான்காண் காளத்தி காணப்பட்ட கணநாதன் காணவ
னென் கண்ணு ளானே. 4

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர், இனத்தகத்தா
னிமையவர்தஞ் சிரத்தின் மேலானேழண்டத் தப்பாலா
னிப்பாற் செம்பொன், புனத்தகத்தா னறுங்கொன்றைப்
போதி னுள்ளான் பொருப்பிடையா னெருப்பிடையான்
காற்றி னுள்ளான், கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்
ளான் காளத்தியா னவனென் கண்ணுளானே. 5

எல்லாமுன் றோன்றுமே தோன்றி னான்கா ணேகம்ப
மேயான்கா ணிமையோ ரேத்தப். பொல்லாப் புலனைந்தும்
போக்கி னான்காண் புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தான்
காண், நல்லவிடை மேற்கொண்டு நாகம் பூண்டு நளிசிர
மொன் றேந்தியோர் நாணயற்ற, கல்லாடைமேற்கொண்ட
காபாலிகாண் காளத்தி யானவனென் கண்ணுளானே. 6

கரியுருவ கண்டத்தெங் கண்ணு ளான்காண் கண்டன் காண் வண்டுண்ட கொன்றை யான்காண், எரிபவள வண்ணன்கா ணேகம்பன்கா ணெண்டிசையுந் தானாய குணத்தினான்காண், திரிபுரங்க ளெயிட்ட தீயாடிகாண் டீவினைக ளீர்த்திடுமென் சிந்தை யான்காண், கரியுருவை போர்த்துகந்த காபாலிகாண் காளத்தி யானவனென் கண்ணுளானே. 7

இல்லாடிச் சில்பலிச்சென் றேற்கின்றான்கா ணிமைய வர்க டொழுதிறைஞ்ச விருக்கின்றான்காண், வில்லாடி வேடனா யோடினான்காண் வெண்ணூலுஞ் சேர்ந்தவகலத் தான்காண், மல்லாடு திரடோண்மேன் மழுவா ளன்காண் மலைமகடன் மணாளன்காண் மகிழ்ந்துமுன்னாள், கல்லா லின் கீழிருந்த காபா லிகாண் காளத்தி யானவனென் கண்ணுளானே. 8

தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண் டிருவே கம் பத்தான்காண் டேனார்ந் துக்க, ஞானப்பூங் கோதை யாள் பாகத் தான்கா ணம்பன்காண் ஞானத் தொளியா னன்காண், வானப்பே ரூருமறிய வோடிமட்டித்து நின்றான் காண் வண்டார்சோலைக், கானப்பே ரூரான் காண் கறைக் கண் டன்காண் காளத்தி யானவனென் கண்ணுளானே. 9

இறையவன்கா ணேழுலகு மாயி னான்கா ணேழ்கட லுஞ் சூழ்மலையு மாயி னான்காண். குறையுடையார் குற் றேவல் கொள்வான் றான்காண் குடமூக்கிற் கீழ்க்கோட்ட மேவினான்காண், மறையுடைய வானோர் பெருமான் றான் காண் மறைக்காட் டுறையு மணிகண் டன்காண், கறை யுடைய கண்டத்தெங் காபாலி காண் காளத்தி யானவ னென் கண்ணுளானே. 10

உண்ணா வருநஞ்ச முண்டான் றான்கா னூழித்தீ யன்னான்கா னுகப்பார் காணப், பண்ணாரப் பல்லிலயம் பாடினான்காண் பயின்றநால் வேதத்தின் பண்பி னான் காண், அண்ணா மலையான்கா ணடியா ரீட்ட மடியிணைக டொழுதேத்த வருளுவான்காண், கண்ணாரக் காண்பார்க் கோர் காட்சியான் காண் காளத்தியா னவனென் கண்ணு ளானே. 11

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

7-ம் திருமுறை. பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலா ளுமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியாய்
அண்டா வுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 1

இமையோர் நாயகனே யிறைவாவென் னிடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையா யுருவேதிருக் காளத்தியுள்
அமைவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 2

படையார் வெண்மழுவா பகலோன்பல் லுகுத்தவனே
விடையார் வேதியனே விளங்குங் குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதனெங் காளத்தியாய்
உடையா யுன்னையல்லா லுகந்தேத்த மாட்டேனே. 3

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே யென்னுடைய குருவேயுன் குற்றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 4

செஞ்சே லன்னகண்ணார் திறத்தேகிடந்து உற்றலறி
நஞ்சே னடியேனை நலமொன் றறி யாமையினாற்
துஞ்சே னொருகாற் றொழுதேன் றிருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 5

பொய்யவ னாயடியேன் புகவேநெறி யொன்றறியேன்
செய்யவ னாகிவந்திங் கிடரானவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங்குந்திருக் காளத்தியென்
ஐயநுன் றன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 6

கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதவென்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை யெங்குழகா
முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியா
அடியே னுன்னையல்லா லறியேன்மற் றொருவரையே. 7

நீறூர் மேனியனே நிமலாநினை யன்றிமற்றுக்
கூறே னாவதனாற் கொழுந்தேயென் குணக்கடலே
பாறூர் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே யுன்னையல்லா லினிதேத்த மாட்டேனே. 8

தளிர்போல் மெல்லடியாள் தனையாகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்னுள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
ஒளியே யுன்னையல்லா லினியொன்று முணரேனே. 9

காரா ரும்பொழில்சூழ் கணநாதனெங் காளத்தியுள்
ஆரா வின்னமுதை யணிநாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

**சுவாமி: காளத்திநாதர்—தேவி: ஞானப்பூங்கோதை.**

பஞ்சபூத ஸ்தலங்களில் வாயு க்ஷேத்திரம். சிலந்தி, பாம்பு, யானை இம்மூன்றும் பூசித்துப் பேறு பெற்றது. இந்திரன் முதலிய பல தேவர்களும், அகஸ்தியர் முதலிய பல ரிஷிகளும் சிவார்ச்சனை புரிந்து இஷ்டசித்தி யடைந்தனர். கண்ணப்ப நாயனார் மிக்க பேரன்பினால் தமது திருவிழியை இடந்து எம்பெருமானுடைய திருக்கண்ணி லப்பி பக்தி செய்து ஆறு நாளில் முத்தியடைந்த பெரும் புகழ் வாய்ந்த தலம். ரயிலடிக்குக் கிழக்கே ¾ மைல்.

---

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

**20.** திருவொற்றியூர். பண்-பஞ்சமம்.

3-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன்
வெண்மழுவாட் படையவன் பாய்புலித்தோ லுடை
கோவணம் பல்கரந்தைச், சடையவன் சாமவேதன் சசி
தங்கிய சங்கவெண்டோ, டுடையவன் னூனமில்லி யுறை
யும்மிட மொற்றியூரே. 1

பாரிடம் பாணிசெய்யப் பறைக் கட்செறு பல்கணப் பேய் சீரொடும் பாடலாட லிலயஞ்சிதை யாதகொள்கைத், தாரிடும் போர்விடையன் றலை வன்றலை யேகலனு, ஊரிடும் பிச்வசகொள்வா னுறை யும்மிட மொற்றியூரே. 2

விளிதரு நீருமண்ணும் விசும் போடனல் காலுமாகி, அளிதரு பேரருளா னாகிய ஆதிமூர்த்தி, களிதரு வண்டுபண்செய் கமழ் கொன்றையி னேடணிந்த, ஒளிதரு வெண்பிறையா னுறை யும்மிட மொற்றியூரே. 3

அரவமே கச்சதாக அசைத் தானல கொன்றையந் தார், விரவிவெண் ணூலகிடந்த விரை யார்வரை மார்ப னெந்தை, பரவுவார் பாவமெல்லாம் பறைத் துப்படர் புன்சடைமேல், உரவுநீ ரேற்றபெம்மா னுறை யும்மிட மொற்றியூரே. 4

விலகினர் வெய்யபாவம் விதி யாலருள் செய்துநல்ல, பலகினர் மொந்தைதாளந் தகு ணிச்சமும் பாணியாலே, அலகினல் வீசிநீர்கொண் டடி மேலல ரிட்டுமுட்டா, துலகினு ரேத்தநின்ரு னுறை யும்மிட மொற்றியூரே. 5

கமையொடு நின்றசீரான் கழ லுஞ்சிலம் புமொலிப்பச் சுமையொடு மேலும்வைத்தான் விரி கொன்றையுஞ் சோமனையும், அமையொடு நீண்டதிண்டோ ளழ காய பொற்றோடிலங்க, உமையொடுங் கூடிநின்ரு னுறை யும்மிட மொற்றியூரே. 6

நன்றியால் வாழ்வதுள்ளம் முல குக்கொரு நன்மை யாலே, கன்றினர் மும்மதிலுங் கரு மால்வரை யேசிலையாப், பொன்றினற் வார்சுடலைப் பொடி நீறணிந் தாரழலம், பொன்றினு லெய்தபெம்மா னுறை யும்மிட மொற்றியூரே. 7

பெற்றியாற் பித்தனைப்பான பெரு மான்கரு மானுரி தோல், சுற்றியான் சுத்திசூலஞ் சுடர்க் கண்ணுதல் மேல் விளங்கத், தெற்றியாற் செற்றரக்கன் னுடலைச்செழு மால்வரைக்கீழ், ஒற்றியான் முற்றுமாள்வா னுறை யும்மிட மொற்றியூரே. 8

திருவினர் போதினனுந் திரு மாலுமோர் தெய்வ முன்னித், தெரிவினற் காணமாட்டார் திகழ் சேவடி சிந்தைசெய்து, பரவினர் பாவமெல்லாம் பறை யப்படர் பேரொளியோ, டொருவனய் நின்றபெம்மா னுறை யும்மிட மொற்றியூரே. 9

தோகையம் பீலிகொள்வார் துவர் கூறைகள் போர்த் துழல்வார், ஆகம செல்வனரை யலர் தூற்றுதல் காரண மாக், கூகையம் மாக்கள் சொல்லைக் குறிக் கொள்ளன்மி னேழுலகும், ஓகைதந் தாளவல்லா னுறை யும்மிட மொற்றியூரே. 10

ஒண்பிறை மல்குசென்னி யிறை வன்னுறை யொற்றி யூரைச், சண்பையர் தந்தலைவன் றமிழ் ஞானசம் பந்தன் சொன்ன, பண்புனை பாடல்பத்தும் பர விப்பணிந் தேத்த வல்லார், விண்புனை மேலுலகம் விருப் பெய்துவர் வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### 4-ம் திருமுறை. திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீ தன்றன் பாதம்
மெள்ளத்தா னடைய வேண்டின் மெய்தரு ஞானத் தீயாற்
கள்ளத்தைக் கழிய நின்றார்க் காயத்துக் கலந்து நின்று
உள்ளத்து ளொளியு மாகும் ஒற்றியூ ருடைய கோவே. 1

வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா வானவ ரிறைவனின்று
புசிப்பதோர் பொள்ள லாக்கை யதனொடும் புணர்வு வேண் [டில்
அசிர்ப்பெனு மருந்த வத்தா லான்மாவி னிடமதாகி
உசிர்ப்பெனு முணர்வு முள்ளார் ஒற்றியூ ருடைய கோவே.

தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே யழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டில் வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை யேற்றி நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை யொழிப்பர் போலும் ஒற்றியூ ருடைய கோவே. 3

காமத்து எழுந்து நின்று கண்டரா லொருப்புண்ணுதே
சாமத்து வேத மாகி நின்றதோர் சுயம்பு தன்னை
ஏமத்து இடை யிராவும் ஏகாந்தம் இயம்பு வார்க்கு
ஓமத்துள் ஒளிய தாகும் ஒற்றியூ ருடைய கோவே. 4

கமையமே லாறு மாகித் தாமொரு சயம்பு வாகி
இமையவர் பரவி ஏத்த இனிதி னங் கிருந்த ஈசன்
கமையிணை யுடைய ராகிக் கழலடி பரவு வார்க்கு
உமையொரு பாகர் போலும் ஒற்றியூ ருடைய கோவே. 5

ஒருத்திதன் றலைச்சென் றானைக் கரந்திட்டா னுலக மேத்த
ஒருத்திக்கு நல்ல னாகி மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தா னுணர்வினை யமுண்ணி
ஒருத்திக்கு நல்லன அல்லன ஒற்றியூ ருடைய கோவே. 6

பிணமுடை யுடலுக் காகப் பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம் வேண்டா போக்கலாம் பொய்யை நீங்க
நிணமுடை நெஞ்சி னுள்ளா னினைக்குமா நினைக்கின் றார்க்கு
உணர்வினோ டிருப்பர் போலும் ஒற்றியூ ருடைய கோவே. 7

பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதை மார்கள்
துன்னுவார் நரகந் தன்னுள் தொல்வினை தீர வேண்டில்
மன்னுவான் மறைக ளோதி மனத்தினுள் விளக்கொன் றேற்றி
உன்னுவா ருள்ளத் துள்ளார் ஒற்றியூ ருடைய கோவே. 8

முள்குவார் போகம் வேண்டில் முயற்றியால் இடர்கள் வந்
எள்குவார் எள்கி நின்றங் கிதுவொரு மாயமென்பார்[ தால்
பள்குவார் பத்த ராகிப் பாடியும் ஆடி நின்றும்
உள்குவார் உள்ளத் துள்ளார் ஒற்றியூ ருடைய கோவே. 9

வெறுத்துகப் புலன்களைந்தும் வேண்டிற்று வேண்டு நெஞ்சே
மறுத்துக ஆர்வச் செற்றக் குரோதங்க ளான மாயப்
பொறுத்துகப் புட்பு கத்தே றுடையானை யடர வூன்றி
யொறுத்துகந் தருள்கள் செய்தார் ஒற்றியூ ருடைய கோவே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன் கூட்டை வாளா வுள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ யுய்யக் கொள்ளாய் ஒற்றியூ ருடைய கோவே. 1

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணாது
உனையுனு முணர்வை நல்கா ஒற்றியூ ருடைய கோவே. 2

திருச்சிற்றம்பலம்.

## திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றுக் களிற்றுரி கொள்கின்ற ஞான்று செறுவெண்கொம்பன்
றிற்றுக் கிடந்தது போலு மிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி போலச் சுடரிமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு மாலொற்றி யூரனுக்கே. 1

சொல்லக் கருதிய தொன்றுண்டு கேட்கிற் றொண் டாயடைந்தார்
அல்லற் படக்கண்டு பின்னென் கொடுத்தி யலைகொண்முந்நீர்
மல்லற் றிரைச்சங்க நித்திலங் கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றி யூருறையுத்தமனே.

பரவை வருதிரை நீர்க்கங்கை பாய்ந்துக்க பல்சடைமேல்
அரவ மணிதரு கொன்றை யிளந்திங்கள் சூடியதோர்
குரவ நறுமலர் கோங்க மணிந்துகு லாயசென்னி
உரவு திரைகொணர்ந் தெற்றொற்றி யூருறை யுத்தமனே. 3

தானகங் காடரங் காக வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறு முடைதலை யிற்பலி கொள்வதுந்தான்
தேனக நாறுந் திருவொற்றி யூருறை வாரவர்தாம்
தானக மேவந்து போனகம் வேண்டி யுழிதர்வரே. 4

வேலைக் கடனஞ்ச முண்டுவெள் ளேற்றொடும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிட மாவது வாரிகுன்றா
ஆலைக் கரும்பொடு செந்நெற் கழனி யருகணைந்த
சோலைத் திருவொற்றி யூரையெப் போதுந் தொழுமின்களே. 5

புற்றினில் வாழு மரவுக்குந் திங்கட்குங் கங்கையென்னுஞ்
சிற்றிடை யாட்குஞ் செறிதரு கண்ணிக்குஞ் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெ றும் பேச்சுடை யான்பிரி யாதெனையாள்
விற்றுடை யானொற்றி யூருடை யான்றன் விரிசடையே. 6

இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை யிமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பார்வைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டா ரொற்றியூருறை யுத்தமனே.

சுற்றிவண் டியாழ்செயுஞ் சோலையுங் காவுந் துதைந்திலங்கு
பெற்றிகண் டான்மற்றி யாவருங் கொள்வர் பிறரிடைநீ
ஒற்றிகொண் டாயொற்றி யூரையுங் கைவிட்டு றுமென்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுவொப்ப தில்லிடம் வேதியனே. 3

சுற்றிக் கிடந்தொற்றி யூரனென் சிந்தை பிரிவறியான்
ஒற்றித் திரிதந்து நீயென்ன செய்தி யுலகமெல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு நாமென்று கண்குழித்துக்
கெற்றித் திருப்பதல் லாலென்ல செய்யுமித் தீவினையே. 9

அங்கட் கடுக்கைக்கு முல்லைப்புறவ முறுவல் செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரிப் பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி யூரர் திருமுடியே. 10

தருக்கின வாளரக் கன்முடி பத்திறப் பாதந்தன்னால்
ஒருக்கின வாறடி யேனைப் பிறப்பறுத் தாளவல்லான்
நெருக்கின வானவர் தானவர் கூடிக் கடைந்த நஞ்சைப்
பருக்கின வாறென்செய் கேனொற்றி யூருறை பண்டங்கனே

திருச்சிற்றம்பலம்.

## 5-ம் திருமுறை. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பு மதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே. 1

வாட்ட மென்றுரைக் கும்மலை யான்மகள்
ஈட்ட வேயிரு ளாடி யிடுபிணக்
காட்டி லோரி கடிக்க வெடுத்ததோர்
ஓட்டை வெண்கடலைக் கையொற்றி யூரரே. 2

கூற்றுத் தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மின்
ஆற்றுத் தண்டத் தடக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்நினை வார்க்கெல்லாம்
ஊற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே. 3

சுற்றும் பேய்சுழ லச்சுடு காட்டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல் லரம்பலி தேர்ந்துபோய்
ஒற்றி யூர்புக் குறைய மொருவரே. 4

புற்றில் வாளர வாட்டி உமையொடு
பெற்ற மேறுகந் தேறும் பெருமையான்
மற்றை யாரொடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வாேனார் கபாலியே. 5

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையுநம் பாவமே. 6

பலவு மன்னங்கள் பன்மலர் மேற்றுஞ்சும்
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே. 7

ஒன்று போலு முகந்தவ ரேறிற்று
ஒன்று போலு முதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தாரொற்றி யூரரே. 8

படைகொள் பூதத்தர் வேதத்தர் கீதத்தர்
சடைகொள் வெள்ளத்தார் சாந்தவெண் ணீற்றினர்
உடையுந் தோலுகந் தாருறை யொற்றியூர்
அடையு முள்ளத் தவர்வினை அல்குமே. 9

வரையி னாருயர் தோளுடை மன்னனை
தரையி னல்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னார்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னாற்பொலிந் தாருயர்ந் தார்களே. 10

திருச்சிற்றம்பலம்.

**6-ம் திருமுறை.** திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்கு செங்கமலக் கழுநீர்மல்கு மதமத்தஞ் செஞ்சடைமேன் மதியஞ்சூடித், திண்டோள்க ளாயிரமும்

வீசிநின்று திசைசேர நடமாடிச் சிவலோகனூர், உண்டார் நஞ் சுலகுக்கோ ருறுதிவேண்டி யொற்றியூர் மேய வொளி வண்ணனூர், கண்டேனன் கனவகத்திற் கண்டேற் கென் றன் கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே. 1

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளேறேறி யணி கங்கை செஞ்சடைமே லார்க்கச்சூடிப், பாகத்தோர் பெண் ணுடையா ராஞ்மாவர் பசுவேறி யுழிதருமெம் பரமயோகி, காமத்தா லங்கணையான் றன்னை வீழக் கனலா லெரி விழித்த கண்மூன்றினூர், ஓமத்தா ஞன்மறைக ளோத லோவா வொளிதிகழு மொற்றியூ ருறைகின்றாரே. 2

வெள்ளத்தை செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர் வெண்மதியும் பாம்புமுடனே வைத்தீர், கள்ளத்தை மனத் தகத்தே கரந்து வைத்தீர் கண்டார்க்குப் பொல்லாது கண்டீரல்லே, கொள்ளத்தா னிசைபாடிப் பலியுங்கொள் ளீர் கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங்காட்டி, உள்ளத்தை நிர்கொண்டீ ரோத லோவா வொளிதிகழு மொற்றியூ ருடையகோவே. 3

நரையார்ந்த விடையேறி நீறு பூசி நாகங்கச் சரைக் காத்தோர் தலைகையேந்தி, உரையாவந் தில்புகுந்து பலி தான் வேண்ட வெம்மடிகளும் மூர்தா னேதோ வென்ன, விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய் விடுங்கலங்க ணெடுங்கடலு ணின்று தோன்றுந், திரைமோதக் கரை யேறிச் சங்கமூருந் திருவொற்றி யூரென்றார் தீய வாறே. 4

மத்தமா களியானை யுரிவை போர்த்து வானகத்தார் தானகத்தா ராகிநின்று, பித்தர்தாம் போலங்கோர் பெருமைபேசிப் பேதையரை யச்சுறுத்திப் பெயரக்கண்டு, பத்தர்கடாம் பலருடனே கூடிப் பாடிப் பயின்றிருக்கு மூரேதோ பணியீரென்ன, ஒத்தமைந்த வுத்திரநா ளீர்த்த மாக வொளிதிகழு மொற்றியூ ரென்கின்றாரே. 5

கடிய விடையேறிக் காளகண்டர் கலையோடு மழுவா ளோர் கையிலேந்தி, இடிய பலிகொள்ளார் போவா ரல்ல

ரெல்லாந்தா னிவ்வடிகள் யாரென்பாரே, வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம் வருவாரை யெதிர்கண்டோ மயிலாப்புள்ளே, செடிபடுவெண் டலை யொன் றேந்தி வந்து திருவொற்றி யூர்புக்கார் தீயவாறே. 6

வல்லராய் வானவர்க ளெல்லாங் கூடி வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார், எல்லையெம் பெருமானைக் காணோ மென்ன வெவ்வாற்றா லெவ்வகையாற் காண மாட்டார், நல்லார்க ணன்மறையோர் கூடி நேடி நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன, ஒல்லைத்தான் றிரையேறி யோதமீளு மொளிதிகழு மொற்றியூ ரென்கின்றாரே. 7

நிலைப்பாடே நான்கண்ட தேடி கேளாய் நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக் கலந்து பலியிடுவே னெங்குங் காணேன், சலப்பாடே யினியொருநாட் காண்பே னாகிற் றன்னாகத் தென்னாக மொடுங்கும் வண்ண முலைப்பாடே படத்தழு விப் போக லொட்டே னொற்றியூ ருறைந்திங்கே திரிவா னையே. 8

மண்ணல்லை விண்ணல்லை வலைய மல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை, எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லைபிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே, உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை யுணர்வரிய வொற்றியூருடைய கோவே. 9

மருவுற்ற மலர்க்குழலி மடவா ளஞ்ச மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச், செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத் திருவடியின் விரலொன்றா லலற வூன்றி, உருவொற்றி யங்கிருவ ரோடிக் காண வோங்கின வவ் வொள்ளழலா ரிங்கேவந்து, திருவொற்றி யூர்நம்மே ரென்றுபோனார் செறிவளைக ளொன்றொன்றாச் சென்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 7-ம் திருமுறை. பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே னதுவு நான்படப் பாலதொன் ருறற், பிழுக்கை வாரியும் பால் கொள்வ ரடிகேள் பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழை யேனை, வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால் மற்றுநா னறியேன் மறுமாற்றம், ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையா யொற்றி யூரெனு மூருறை வானே. 1

கட்ட னேன் பிறந்தேனுனக் காளாய்க் காதற்சங்கிலி காரணமாக, எட்டி னாற் றிக மூந்திரு மூர்த்தி யென்செய் வானடி யேனெடுத் துரைக்கேன். பெட்ட னாகிலுந் திரு வடிப் பிழையேன் பிழைப்ப னாகிலுந் திருவடிக்கடிமை, யொட்டினேனென்னை நீசெய்வ தெல்லா மொற்றி யூரெனு மூருறை வானே. 2

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே கட்டியே பலர்க் குங்கனி கண்ணே, யங்கை நெல்லியின் பழத்திடை யமுதே யத்தா வென்னிட ரார்க்கெடுத் துரைக்கேன், சங்கு மிப்பி யுஞ் சலஞ்சல முரல வயிர முத்தொடு பொன்மணி வான்றி யொங்கு மாகட லோதம்வந் துலவு மொற்றி யூரெனு மூருறை வானே. 3

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்று லியாவ ராகிலென் னன்புடையார்கள், தோன்ற நின்றருள் செய் தளித் திட்டாற் சொல்லு வரரையல் லாதன சொல்லாய், மூன்று கண்ணுடை யாயடி யேன்கண் கொள்வ தேகணக் குவழக் காகில், ஊன்று கோலெனக் காவதொன் றருளா யொற்றி யூரெனு மூருறை வானே. 4

வழித்த லைப்படு வான்முயல் கின்றே னுன்னைப்போ லென்னைப் பாவிக்க மாட்டேன், சுழித்தலைப் பட்ட நீரது போலச் சுழல்கின் றேன் சுழல் கின்றதென் னுள்ளங்,

கழித்தலைப்பட்ட நாயது போல வொருவன் கோல் பற்றிக் கறகற விழுக்கை, யொழித்து நீயருள னாயின செய்யா யொற்றி யூரெனு மூருறை வானே. 5

மானை நோக்கியர் கண்வலைப் பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித், தேனை யாடிய கொன்றையினாயுன் சீலமுங் குணமுஞ் சிந்தியாதே, நானு மித்தனை வேண்டுவ தடியே னுயிரொடு நரகத் தழுந்தாமை, யூன முள்ளன தீர்த்தருள் செய்யா யொற்றி யூரெனு மூருறை வானே. 6

மற்றுத் தேவரை நினைந்துனை மறவே னெஞ்சி னாரொடு வாழவு மாட்டேன், பெற்றி ருந்து பெறாதொழி கின்ற பேதை யேன்பிழைத் திட்டதை யறியேன், முற்று நீயெனை முனிந்திட வடியேன் கடவ தென்னுனை நான்மற வேனேல், உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளா யொற்றி யூரெனு மூருறை வானே. 7

கூடி னாய மலை மங்கையை நினையாய் கங்கை யாயிர முகமுடையாளைச், சூடி னாயென்று சொல்லிய புக்காற் றொழும்ப னேனுக்குஞ் சொல்லலு மாமே, வாடி நீயிருந் தென்செய்தி மனனே வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி, யூடி னாலினி யாவதொன் றுண்டே யொற்றி யூரெனு மூருறை வானே. 8

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய் மைந்தனே மணியே மணவாளா, அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னா லழையேற் போகுருடா வெனத் தரியேன், முகத் திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்கணாமுறையோ மறையோதீ, யுகைக்குந் தண்கட லோதம்வந் துலவு மொற்றி யூரெனு மூருறை வானே. 9

ஓதம் வந்துல வுங்கரை தன்மே லொற்றி யூருறை செல்வனை நாளு. ஞாலந் தான்பர வப்படு கின்ற நான் மறை யங்க மோதிய நாவன், சீலந் தான்பெரி தும்மிக வல்லசிறுவன் வன்றொண்ட னாரனுரைத்த, பாடல் பத் திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ண நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும் பாடிப் பரவித் திரிவா
ரீட்டும் வினைக டீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
யோட்டுந் திரைவா யொற்றி யூரே. 1

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ண
ரெந்தம் மடிக ளிறைவர்க் கிடம்போ
லுந்துந் திரைவா யொற்றி யூரே. 2

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றி னுரிவை போர்த்தான்
றவழு மதிசேர் சடையாற் கிடம்போ
லுகளுந் திரைவா யொற்றி யூரே. 3

என்ன தெழிலு நிறையுங் கவர்வான்
புன்னை மலரும் புறவிற் றிகழுந்
தன்னை முன்ன நினைக்கத் தருவா
னுன்னப் படுவா னொற்றி யூரே. 4

பணங்கொ ளரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபால மேந்தி
வணங்கு மிடைமென் மடவா ரிட்ட
வுணங்கல் கவர்வா னொற்றி யூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
அடைவார் வினைக ளறுப்பா னென்னை
விடையார் கொடியன் வேத நாவ
னுடையா னுறையு மொற்றி யூரே. 6

சென்ற புரங்க டீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் னரையே
லொன்றை யுடையா னொற்றி யூரே. 7

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியா
னுலகி னுள்ளார் வினைக டீர்ப்பா
னுலவுந் திரைவா யொற்றி யூரே. 8

பற்றி வரையை யெடுத்த வரக்க
னிற்று முரிய விரலா லடர்த்தா
ரெற்றும் வினைக டீர்ப்பா ரோத
மொற்றுந் திரைவா யொற்றி யூரே. 9

ஒற்றி யூரு மரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையார்
ஒற்றி யூர்மே லூர னுரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: **மாணிக்கத்தியாகர்**—தேவி: **வடிவுடைநாயகி.**

நாகராஜனாகிய ஆதிசேடனும், பிரமனும், கங்கையும், பார்வதியும் பூசித்து சிவபெருமானுடைய நடன தரிசனம் பெற்ற தலம். அகஸ்தியர், பரமசிவன் இமாசலத்தில் பார்வதி தேவியாரை மணந்த திருமணக்கோலத்தை இத்தலத்தில் தவங்கிடந்து மாசிமகத்தில் தரிசித்துப் பெரும்பேறு பெற்றனர். சுந்தரர் சங்கிலிநாச்சியாரை சிவபெருமானுடைய கட்டளையின்படி திருவாரூருக்குப் போவதில்லையென்று சத்தியஞ் செய்து தந்து இவ்விடத்தில் மணஞ்செய்துகொண்டு வாழ்ந்தனர். செக்கார் மரபில் அவதரித்த **கலியநாயனார்** திருவிளக்குத் தொண்டுசெய்து இத்தலத்தில் முத்தியெய்தினர். சிவாநுபூதிச் செல்வராகிய **பட்டினத்தடிகள்** சிவபெருமானுடைய அநுஜ்ஞையின்படி பேய்க்கரும்பு இத்தலத்தில் தித்திக்கக் கண்டு இதுவே தனக்கு முத்திஸ்தானமென்று தெரிந்து சிவலிங்க வடிவமாய் விளங்கிநின்றனர். ரயிலுக்கு கிழக்கில் 1 பர்லாங்கில் உள்ளது.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை

**21. திருவலிதாயம்.** பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே. 1

படையிலங்குகர மெட்டுடையான்படி றாகக்கனலேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங் கள்வனுறைகோயில்
மடையிலங்குபொழி லின்னிழல்வாய்மது வீசும்வலிதாய
மடையநின்றவடி யார்க்கடையாவினை யல்லற்றுயர்தானே

ஐயனொய்யனணி யன்பிணியில்லவ ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்றிரு மாதோடுறைகோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர் கின்றவலிதாயம்
உய்யும்வண்ணநினை மின்னினைந்தால்வினை தீருந்நலமாமே

ஒற்றையேறதுடை யானடமாடியோர் பூதப்படைசூழப்
புற்றினாகமரை யார்த்துழல்கின்றவெம் பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட வுள்கும்வலியதாயம்
பற்றிவாழுமது வேசரணாவது பாடும்மடியார்க்கே. 4

புந்தியொன்றிநினை வார்வினையாயின தீரப்பொருளாய
வந்தியன்னதொரு பேரொளியானமர் கோயிலயலெங்கு
மந்திவந்துகடு வன்னொடுகூடி வணங்கும்வலியதாயஞ்
சிந்தியாதவவர் தம்மடும்வெந்துயர் தீர்தலெளிதன்றே. 5

ஊனியன்றதலை யிற்பலிகொண்டுல கத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல் கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறை வைத்தவெம்மாதி மகிழும்வலிதாயம்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின் றேத்தத்தெளிவாமே. 6

கண்ணிறைந்தவிழி யின்னழலால்வரு காமனுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொரு பால்மகிழ்வெய்திய பெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ் கொண்டடியார்கள் வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான் கழலேத்தநம் முண்மைக்கதியாமே. 7

கடலினஞ்சமமு துண்டிமையோர்தொழு தேத்தநடமாடி
யடலிலங்கையரை யன்வலிசெற்றரு ளம்மானமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது விம்மும்வலிதாய
முடலிலங்குமுயி ருள்ளளவுந்தொழ வுள்ளத்துயர்போமே.

பெரியமேருவரை யேசிலையாமலை வுற்றுரெயில்மூன்று
மெரியவெய்தவொரு வன்னிருவர்க்கறி வொண்ணுவடிவா
மெரியதாகியுற வோங்கியவன்வலி தாயந்தொழுதேத்த [கு
வுரியராகவுடை யார்பெரியாரென வுள்கும்முலகோரே. 9

ஆசியார்மொழி யாரமண் சாக்கிய ரல்லாதவர்கூடி
யேசியீரமில ராய்மொழிசெய்தவர் சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடி யார்க்கருள்செய்து வளர்ந்தான் வலிதாயம்
பேசுமார்வமுடை யாரடியாரெனப் பேணும்பெரியோரே.

வண்டுவைகும்மண மல்கியசோலை வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலரு மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுள்ஞானசம் பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர் வானத்துயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி: **வலிதாயநாதர்—தேவி: தாயம்மை.**

பிரமனும், விஷ்ணுவும், தேவகுருவாகிய பிரகஸ்பதி யும், பாரத்துவாஜரிஷியும், அஞ்சனாதேவி குமாரராகிய ஆஞ்சனேயரும் பூசித்துப் பேறுபெற்ற தலம். இத்தலம் இக்காலத்தில் பாடியென வழங்குகின்றது. பலிதாயநாதர் பூசையை உரிமையாகக்கொண்டவர்; பலி-பூசை; தாயம்-உரிமை. பலிதாயமென்பது தமிழில் வலிதாயமென்றாயிற்று. கொரட்டூர் ரயிலடியிலிருந்து தெற்கில் 1½மைல்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 7-ம் திருமுறை.

**22.** வடதிருமுல்லைவாயில். பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென்றெண்ணி, யொருவரை மதியா துறுமைகள் செய்து மூடியு முறைப்பனாய்த் திரிவேன்,

முருகமர்சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் வாயினு லுன்னைப், பரவிடு மடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 1

கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள் காண, வாடிய வழகா வருமறைப் பொருளே யங்கணா வெங்குற் றாயென்று, தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால், பாடிய வடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 2

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழமொன் றுரித்தாய், செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் மரசே, தண்பொழி லொற்றி மாநக ருடையாய் சங்கிலிக் காவென் கண்கொண்ட பண்ப- நின் னடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே.

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட, அந்நலங் கமலத் தவிசின்மே லுறங்கு மலவன்வந் துலவிட வள்ளற், செந்நெலங் கழனி சூழ்திரு முல்லைவாயிலாய் திருப்புகழ் விருப்பால். பன்னலந் தமி- ழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ் சுடரே. 4

சந்தன வேருங் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின், றந்தமுந் தரளக் குவைகளும் பவளக்கொடிகளுஞ் சுமந்துகொண், டுந்திவந் திழி பாலி வடகரை முல்லை வாயி- லாய் மாசிலா மணியே, பந்தனை கெடுத்தேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 5

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினுங் குணமெனக் கொள்- ளுங் கொள்கையான் மிகைபல செய்தேன், செற்றுமீ தோடுந் திரிபுரமெரித்த திருமுல்லை வாயிலா யடியேன், பற்றிலே னுற்ற படுதுயர் களையாய் பாசுபதாபரஞ்சுடரே.

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய வார்குழன் மாமயிற் சாய, லணிகெழு கொங்கை யங்கயற் கண்ணா ரருநட மாட லறாத, திணிபொழி றழுவு திருமுல்லைவாயிற் செல்வனே யெல்லியும் பகலும், பணியது செய்வேன் படு- துயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே யன்று வெண்ணெய்நல் லூரி லாயினேன் றன்னையாட் கொண்ட, சம்புவே யும்ப ரார்தொழு தேத்-துந் தடங்கட னஞ்சுண்ட கண்டா, செம்பொன்மா ளிகை-சூழ் திருமுல்லை வாயிற் றேடியான் றிரிதர்வேன் கண்ட, பைம்பொனே யடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 8

மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கு மாணிதன் மேன்மதியாதே, கட்டுவான் வந்தகாலனை மாளக் காலினா லாருயிர் செகுத்த, சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே செழுமறைபகர்ந்த, பட்டனே யடியேன் படு-துயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 9

சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடிமுல்லையாற் கட்டிட், டெல்லையி லின்ப மவன்-பெறவெளிப்பட்ட ருளிய விறைவனே யென்றும், நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி லுதனை நரைவிடை யேறீ, பல்கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 10

விரைதரு மலர்மே லயனொடு மாலும் வெருவிட நீண்ட வெம்மானைத், திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவ லாரூர, னுரைதரு மாலை யோரைஞ்சி னோடைஞ்சு முள்குளிர்ந் தேத்தவல்லார்க ணரைதிரை மூப்புநடலையுமின்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே. 11

திருச்சிற்றம்பலம்.

சு: பாசுபதேஸ்வரர், மாசிலாமணியீஸ்வரர்—தே: கொடியிடைநாயகி.

தொண்டைமான் சக்கரவர்த்தியானவர் தானேறிச்-சென்ற யானையின் காலில் சுற்றிய முல்லைக்கொடியைக் கோபித்து வெட்டும்போது சிவபெருமான் திருமேனி வடுப்பட்டவராய் வெளிவந்து சக்கரவர்த்திக்கு வரமருளி நந்தியெம்பெருமானைச் சக்கரவர்த்தியின்பின் அனுப்பி யருளிய தலம். இக்காரணத்தால் இத்தலத்தில் திருநந்தி-தேவர் இன்றும் புறங்காட்டி வீற்றிருக்கின்றனர். அம்பத்தூர் ரயிலடியிலிருந்து வடமேற்கில் 2½-மைல்.

---

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## முதல் திருமுறை.

**23. திருவேற்காடு.** பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி, வெள்ளி
யானுறை வேற்கா, டுள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினிற்,
றெள்ளி யாரவர் தேவரே. 1

ஆடல் நாக மசைத்தள வில்லதோர், வேடங் கொண்-
டவன் வேற்காடு, பாடி யும்பணிந் தாரிவ் வுலகினிற்,
சேட ராகிய செல்வரே. 2

பூதம் பாடப் புறங்காட் டிடையாடி, வேத வித்தகன்
வேற்காடு, போதுஞ சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்,
கேத மெய்து த லில்லையே. 3

ஆழ்க டலெனக் கங்கை கரந்தவன், வீழ்ச டையினன்
வேற்காடு, தாழ்வு டைமனத் தாற்பணிந் தேத்திடப்,
பாழ்ப டும்மவர் பாவமே. 4

காட்டி னாலு மயர்த்திடக் காலனை, வீட்டி னானுறை
வேற்காடு, பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவ, ரோட்டி
னார்வினை யொல்லையே. 5

தோலி னாலுடை மேவவல் லான்சுடர், வேலி னானுறை
வேற்காடு, நூலி னாற்பணிந் தேத்திட வல்லவர், மாலி
னார்வினை மாயுமே. 6

மல்லன் மும்மதின் மாய்தர வெய்ததோர், வில்லி
னானுறை வேற்காடு, சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்,
செல்ல வல்லவர் திக்கமே. 7

மூரல் வெண்மதி சூடு முடியுடை, வீரன்மேற் மேவிய
வேற்காடு, வார மாய்வழி பாடுநி னைந்தவர், சேர்வர்
செய்கழ றிண்ணமே. 8

பரக்கி னார்படு வெண்டலை யிற்பலி, விரக்கி னானுறை
வேற்காட்டூர், அரக்க னன்மை யடரப்பட் டானிறை,
நெருக்கி னானை நினைமினே. 9

மாறி லாமல ராரெடு மாலவன், வேற லானுறை வேற்கா, டீறி லாமொழி யேமொழி யாவெழில், கூறி ஞர்க் கில்லை குற்றமே. 10

விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு, கண்டு நம்பன் கழல்பேணிச், சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ், கொண்டு பாடக் குணமாமே. 11

திருச்சிற்றம்பலம்.

**சுவாமி: வேற்காட்டுநாதர்—தேவி: வேற்கண்ணியம்மை.**

பரமேஸ்வரன் பார்வதிதேவியாரோடும், விநாயகரோடும் திருமணக்கோலமாய் எழுந்தருளி அகஸ்தியருக்குக் காக்ஷிகொடுத்தருளிய தலம். அசுரகுருவாகிய சுக்கிரனும், பரசுராமரும், வேதங்களும், இந்திரன் முதலிய திக்குப்பாலகர்களும் பூசித்து இத்தலத்தில் பேறுபெற்றனர். திருமால் கோணங்கிதாசரி வேஷம் பூண்டாடி இத்தலத்திலிருக்கும் பாஞ்சசன்னிய விநாயகரிடத்தில் சங்கு பெற்றனர். வேளாண் மரபில் அவதரித்த மூர்க்க நாயனர் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்குந் தொண்டு பூண்டு முத்திபெற்ற தலம்.

---

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### 2-ம் திருமுறை.

**24. திருமயிலாப்பூர்.** பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றன் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணுதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு வெண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுங் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். (6)

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திர நாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் (7)

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்க தம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். (8)

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
உற்றுங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். (9)

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். (10)

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
றேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

சுவாமி-கபாலீஸ்வரர், தேவி-கற்பகவல்லித்தாயார்.

இது பிரமதேவனும், வேதங்களும், சுப்பிரமணியக் கடவுளும், இலக்குமியும், விஷ்ணுமூர்த்தியும், இன்னும் பலதேவர்களும் பூசித்துப் பேறுபெற்ற தலம். உமாதேவியார் இத்தலத்தில் மயிலுருக்கொண்டு எம்பெருமானைப் பூசித்து அநுக்கிரகம் பெற்றனர். தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் இவ்விடத்தில் அவதரித்து முத்தி யெய்தினர். திருஞானசம்பந்தசுவாமிகள், சிவநேசச்செட்டியாருடைய திருக்குமாரத்தி இறந்து தகனஞ்செய்யப்பட்ட எலும்பைப் பதிகம்பாடி எழுப்பி பூம்பாவையாராக்கியருளிய தலம். வேளாண்மரபிலவதரித்த வாயிலாநாயனார் தமதுள்ளமாகிய ஆலயத்துள் சிவபெருமானை இருத்தி ஞானபூசை செய்துகொண்டிருந்து இப்பதியில் முத்தி யெய்தினர். சென்னை எழும்பூர் ரயிலடிக்கு தெற்கு 3 மைல்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

### 2-ம் திருமுறை.

**25.** திருவான்மியூர். பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
றிரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூ
ருரைய லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே. 1

சந்து யர்ந்தெழ காரகி றன்புனல் கொண்டுதஞ்
சிந்தை செய்தடி யார்பர வுந்திரு வான்மியூர்ச்
சுந்தரக் கழன் மேற்சிலம் பார்க்கவல் லீர்சொலீ
ரந்தி யின்னொளி யின்னிற மாக்கிய வண்ணமே. 2

கான யங்கிய தண்கழி சூழ்கட லின்புறந்
தேன யங்கிய பைம்பொழில் சூழ்திரு வான்மியூர்த்
தோன யங்கம ராடையி னீரடி கேள்சொலீ
ரானையங் கவ்வுரி போர்த்தன லாடவு கந்ததே. 3

மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்க டாம்பயி லுந்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாடலு கக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததே. 4

மண்ணி னிற்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பொழி
றிண்ணெ னபுரி சைத்தொழி லார்திரு வான்மியூர்த்
துண்ணெ னத்திரி யுஞ்சரி தைத்தொழி லீர்சொலீர்
விண்ணி னிற்பிறை செஞ்சடை வைத்தவி யப்பதே. 5

போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறந்
தீதி லந்தண ரோத்தொழ யாத்திரு வான்மியூர்ச்
சூது லாவிய கொங்கையொர் பங்குடை யீர்சொலீர்
மூதெ யில்லொரு மூன்றெரி யூட்டிய மொய்ம்பதே. 6

வண்டி ரைத்தத டம்பொழி லின்னிழற் கானல்வாய்த்
தெண்டி ரைக்கட லோதமல் குந்திரு வான்மியூர்த்
தொண்டி ரைத்தெழுந் தேத்தி தொல்கழ லீர்சொலீர்
பண்டி ருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்ததே. 7

தக்கில் வந்தத சக்கிரி வன்தலை பத்திறத்
திக்கில் வந்தல றவ்தடர்க் திர்திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந் தீரரு ளென்சொலீர்
பக்க மேபல பாரிடம் பேய்கள்ப யின்றதே. 8

பொருது வார்கட லெண்டிசை யுந்தரு வாரியாற்
றிரித ரும்புகழ் செல்வமல் குந்திரு வான்மியூர்ச்
சுருதி யாரிரு வர்க்கும றிவரி யீர்சொலீர்
எருது மேல்கொடு ழன்றுகந் தில்பலி யேற்றதே. 9

மைத ழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினஞ்
செய்த வத்தொழு லாரிசை சேர்திரு வான்மியூர்
மெய்த வப்பொடி பூசியமேனியி னீர்சொலீர்
**கைதவச்சமண் சாக்கியர்** கட்டுரைக் கின்றதே. 10

மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூ
ராதி யெம்பெரு மானருள் செய்யவி னவுரை
யோதி யன்றெழு காழியுள்ஞானசம் பந்தன்சொன்
னீதி யானினை வார்நெடு வானுல காள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

3-ம் திருமுறை. பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமைநங்கையோர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே. 1

இடியா ரேறுடையா யிமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோ டரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூருறையும்
அடிகேளுன்னையல்லா லடையாதென தாதரவே. 2

கையார் வெண்மழுவா கனல் போறிரு சமனியனே
மையா ரொண்கணல்லா ளுமையாள்வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான்மி யூருறையும்
ஐயா வுன்னையல்லா லடையாதென தாதரவே. 3

பொன்போ லுஞ்சடைமேற் புனறாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே
தென்பால் வையமெலாந் திகழுந்திரு வான்மிதன்னில்
அன்பா வுன்னையல்லா லடையாதென தாதரவே. 4

கண்ணா ருந்நுதலாய் கதிர் சூழொளி மேனியின்மேல்
எண்ணார் வெண்பொடிநீறணிவாயெழில் வார்பொழில்சூழ்
திண்ணார் வம்புரிசைத் திருவான்மி யூருறையும்
அண்ணா வுன்னையல்லா லடையாதென தாதரவே. 5

நீதி நின்னையல்லா னெறியாது நினைந்தறியேன்
ஓதி நான்மறைகள் மறையோன்றலை யொன்றினையுஞ்
சேதீ சேதமில்லாத் திருவான்மி யூருறையும்
ஆதீ யுன்னையல்லா லடையாதென தாதரவே. 6

வானூர் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்
கானா ரானையின் றோ லுரித்தாய்கறை மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மி யூருறையும்
ஆனா யுன்னையல்லா லடையாதென தாதரவே. 7

பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்
நெறியார் நீள்கழன்மேன் முடிகாண்பரி தாயவனே
செறிவா ர்மாமதிசூழ் திருவான்மி யூருறையும்
அறிவே யுன்னையல்லா லடையாதென தாதரவே. 8-9

குண்டா டுஞ்சமணர் கொடுஞ்சாக்கிய ரென்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேசநின்றாய்
திண்டேர் வீதியதார் திருவான்மி யூருறையும்
அண்டா வுன்னையல்லா லடையாதென தாதரவே 10

கன்றா ருங்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில்
நன்றா னபுகழான் மிகுஞானசம்பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மி யூரதன்மேல்
குன்றா தேத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

### 5-ம் திருமுறை. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் றன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே. 1

பொருளுஞ் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளு மாந்தரை மாற்றி மயக்கறுத்து
அருளு மாவல்ல வாதியா யென்றலும்
மருள றுந்திடும் வான்மியூ ரீசனே. 2

மந்த மாகிய சிந்தை மயக்கறுத்து
அந்த மில்குணத் தானை யடைந்துநின்
றெந்தை யீசனென் றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே. 3

உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ சிக்கழி வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை 4
வள்ள லாகிய வான்மியூ ரீசனே.

படங்கொள் பாம்பரைப் பான்மதி சூடியை
வடங்கொண் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை 5
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே,

நெஞ்சி லைவர்நினைக்க நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்று
அஞ்சி நான்மலர்ந் தூவிய யழுதிரேல் 6
வஞ்சந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே

இணங்கு நூலறயன் மாலு மறிகிலாக்
குணங்க டான்மர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூமொழி யாரவர் 7
வணங்க நின்றிடும் வான்மியூ ரீசனே.

ஆதி யும்மர ஞயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென்று
ஓதி யுள்குழைந் தேத்தவல் தார்வர் 8
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

ஒட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயின் 9
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினன்
ஆர்வ மாக வழைத்தவ னேத்தலும் 10
வார மாயினான் வான்மியூ ரீசனே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-பால்வண்ணநாதர், தேவி-சுந்தரநாயகி.

இது ஓர்பசு தனது பாலைச் சிவலிங்கத்தின்மேற் சொரிந்து பூசித்து முத்தியடைந்த தலம். வான்மீக ரிஷி

யானவர் இத்தலத்தில் தவங்கிடந்து சிவபெருமானுடைய திருநடனத்தை தரிசித்து பேறு பெற்றனர். மைலாப்பூரிலிருந்து தெற்கு 5 மைல்.

---

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### 7-ம் திருமுறை.

**26. திருக்கச்சூராலக்கோயில்.** பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரி கதற முதுகாட் டெரிகொண்டாடல் முயல்வானே, மதுவார் கொன்றைப் புதுவீசூடு மலையான் மகடன் மணவாளா, கதுவாய்த் தலையிற் பலிநீகொள்ளக் கண்டாலடியார் கவலாரே, யதுவே யாமா றிதுவோ கச்சூ **ராலக்கோயில ம்மானே.** 1

கச்சேரரவொன் றரையிலசைத்துக் கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென், றுச்சம்போதா வூரூர்த்திரியக் கண்டா வடியா ருருகாரே, யிச்சையறியோ மெங்கள்பெருமா னேழேழ்பிறப்பு மெனையாள்வாய், யச்சமில்லாக் கச்சூர்வடபா லாலக்கோயி லம்மானே. 2

சாலக்கோயி லுளநின்கோயி லவையென் றலைமேற் கொண்டாடி, மாலைத்தீர்ந்தேன் வினையுந் துரந்தேன் வானோ ரறியா நெறியானே, கோலக் கோயில் குறையாக் கோயில்குளிர்பூங்கச்சூர் வடபாலை, யாலக்கோயில் கல்லா னிழற்கீழ றங்கட்டுரைத்த வம்மானே. 3

விடையுங் கொடியுஞ் சடையுமுடையாய் மின்னேருருவத் தொளியானே, கடையும் புடைசூழ் மணிமண்டபமுங் கன்னிமாடங் கலந்தெங்கும், புடையும் பொழிலும் புனலுந்தழுவிப் பூமேற்றிருமா மகள்புல்கி, யடையுங் கழனிப்பழனக்கச்சூ ராலக்கோயி லம்மானே. 4

மேலைவிதியே வினையின் பயனே விரவார் புரமூன்
றெரிசெய்தாய், காலையெழுந்து தொழுவார்தங்கள் கவலை
களைவாய் கறைக்கண்டா, மாலைமதியே மலைமேல் மருந்தே
மறவேனடியேன் வயல்சூழ்ந்த, வாலைக்கழனிப் பழனக்
கச்சூ ராலக்கோயி லம்மானே. 5

பிறவாய் இறவாய் பேணாய்மூவாய் பெற்றமேறிப்பேய்
சூழ்தல் துறவாய் மறவாய் சுடுகாடென்று மிடமாக்
கொண்டு நடமாடி யொறுவாய்த்தலையிற் பலிநீகொள்ளக்
கண்டாலடியா ருருகாரே, யறவேயொழியாய் கச்சூர்வடபா
லாலக் கோயி லம்மானே. 6

பொய்யேயுன்னைப் புகழ்வார் புகழ்ந்தா லதுவும் பொ
ருளாக் கொள்வானே, மெய்யே யெங்கள் பெருமானுன்னை
நினைவாரவரை நினைகண்டாய், மையார் தடங்கண் மடந்
தைபங்கா கங்கார்மதியஞ் சடைவைத்த, ஐயாசெய்யாய்
வெளியாய்க் கச்சூ ராலக்கோயி லம்மானே. 7

ஊனைப் பெருக்கி யுன்னை நினையா தொழிந்தேன்
செடியே னுணர்வில்லேன், கானக்கொன்றை கமழுமலருங்
கடிநாறுடையாய் கச்சூராய், மானைப்புரையு மடமென்
னோக்கி மடவாளஞ்ச மறைத்திட்ட, ஆனைத்தோலாய்
ஞானக்கண்ணா யாலக்கோயிலம்மானே. 8

காதல்செய்து களித்துப் பிதற்றிக் கடிமாமலரிட்
டுனையேத்தி, யாதல் செய்யு மடியாரிருக் கவையங்கொள்வ
தழகிதே, யோதக் கண்டே னுன்னைமறவே னுமையாள்
கணவா வெனையாள்வா, யாதற்பழனக் கழனிக்கச்சூ
ராலக்கோயிலம்மானே. 9

அன்ன மன்னும் வயல்சூழ் கச்சூ ராலக்கோயிலம்
மானை, யுன்னமுன்னு மனத்தாரூர னாரூரன்பேர்
முடிவைத்த, மன்னுபுலவன் வயல்நாவலர்கோன் செஞ்
சொல்நாவன் வன்றொண்டன், பன்னுதமிழ்நூல் மாலை
வல்லா ரவரெந்தலைமேற் பயில்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி—விருந்திட்டநாதர், தேவி—உமையம்மை.

இது வித்தியாதரர்கள் பூசித்துப் பேறுபெற்ற தலம். இத்தலத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகள் பசியால் வருந்திக் களைப்புற்றிருந்தலை எம்பெருமான் திருவுள்ளத்திலுணர்ந்து, தாமே ஓர் மறையவர் திருவேடம்பூண்டு ஓடேந்திச் சென்று இல்லங்கடோறும் அமுது யாசித்து அவருடைய பசியைத் தீர்த்தருளினர். சிங்கப்பெருமாள்கோயில் ரயிலடிக்கு வடமேற்கு ஒரு மைல்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

### முதல் திருமுறை.

**27.** திரு இடைச்சுரம். பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவள ரவிரொளி யரவரை தாழ வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக், கரிவளர்தருகழல் கால் வலனேந்திக் கன லெரியாடுவர் காடரங்காக. விரிவளர்தருபொழி வினமயி லால வெண் ணிறத்தருவிக டிண்ணெனவீழ. மெரிவள ரினமன புனமணிசார லிடைச்சுரமேவிய லிவர்வண மென்னே. 1

ஆற்றையுமேற்றதோ ரவிர்சடையுடைய ரழகினை யருளுவர் குழகல தறியார், கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர் நடுவிருளாடுவர் கொன்றையந்தாரார், சேற்றயல்மிளிர்வனகயலிளவாளை செருச்செயவோர்ப்பன செம்முகமந்தி யேற்றையெடுழிதரு மெழிறிகழ்சார லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 2

கானமுஞ்சுடலையுங் கற்படுநிலனுங் காதலர் தீதிலர் கனைமழையானார்; வானமுநிலமையு மிருமையுமானார் வணங்கவுமிணங்கவும் வாழ்த்தவும்படுவார். நானமும் புகையொளி விரையொடுகமழ நளிர்பொழிலிள மஞ்ஞை மன்னியபாங்க, ரேனமும்பிணையலு மெழிறிகழ்சார லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 3

கடமணிமார்பினர் கடறனி லுறைவார் காதலர்தீ
திலர் கனன்மழுவாளர், விடமணிமிடறினர் மிளிர்வதோரா
ரவர் வேறுமோர் சரிதையர் வேடமுமுடையர், வடமுலைய
யலன கருங்குருந்தேறி வாழையின்றீங்கனி வார்ந்துதேன
ட்டு, மிடமுலையரிவைய ரெழிறிகழ்சார லிடைச்சுரமேவிய
விவர்வணமென்னே. 4

கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக் கண்ணி
யர்வளர்மதி கதிர்விடக்கங்கை, நீர்கொண்ட சடையினர்
விடையுயர்கொடியர் நிழறிகழ்மழுவின ரழறிகழ்நிறத்தர்,
சீர்கொண்ட மென்சிறை வண்டுபண்செய்யுஞ் செழும்
புனலனையன செங்குலைவாழை, யேர்கொண்ட பலவினொ
டெழிறிகழ்சார லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 5

தோடணி குழையினர் சுண்ணவெண்ணீற்றர் சுடலை
யினாடுவர் தோலுடையாகப், பீடுயர்செய்ததோர் பெருமை
யையுடையர் பேயுடனாடுவர் பெரியவர்பெருமான், கோடல்
களொழுகுவ முழுகுவதும்பி குரவமுமரவமு மன்னிய
பாங்க, ரேடவிழ்புதுமலர் கடிகமழ்சார லிடைச்சுரமேவிய
விவர்வணமென்னே. 6

கழன்மல்குகாலினர் வேலினர்நூலர் கவர்தலையா
வொடு கண்டியும்பூண்ப, ரழன்மல்குமெரியொடு மணிமழு
வேந்தி யாடுவர்பாடுவ ராரணங்குடையர், பொழின்மல்கு
கிடைய வரவமுமரவ மன்னியக வட்டிடைப் புனர்குயிலாலு,
மெழின் மல்குசோலையில் வண்டிசைபாடு மிடைச்சுர
மேவிய விவர்வணமென்னே. 7

தேங்கமழ்கொன்றையந் திருமலர்புனைவார் திகழ்தரு
சடைமிசை திங்களுஞ்சூடி, வீந்தவர்சுடலைவெண் ணீறு
மெய்பூசி வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர், சாந்தமு
மகிலொடு முகில்பொதிந்தலம்பித் தவழ்கனமணியொடு
மிகுபளிங்கிடறி, யேந்து வெள்ளருவிக ளெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 8

பலவிலமிடுபலி கையிலொன்றேற்பற்பலபுகழல்லது
பழியிலாதாமுந், தலையிலங்கவி ரொளி நெடுமுடியரக்கன்
றடக்கைகளடர்த்ததோர் தன்மையையுடையர், மலையிலங்

கருவிகள் மண்முழவதிர மழைதவழிளமஞ்ஞை மல்கிய சார, விலையிலவங்கமு மேலமுங்கமழு மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 9

பெருமைகடருக்கியோர் பேதுறுகின்ற பெருங்கடல் வண்ணனும் பிரமனுமோரா, வருமையரடிநிழல் பரவி நின்றேத்து மன்புடையடியவர்க் கணியருமாவர், கருமை கொள்வடிவொடு சுனைவளர்குவளைக் கயலினம்வயலிளை வாளைகளிரிய, வெருமைகள்படிதர விளவனமாலு மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 10

மடைச்சுரமறிவன வாளையங்கயலு மறுவியவயறனில் வருபுனற்காழிச், சடைச்சுரத்துறைவதோர் பிறையுடையண்ணல சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன், புடைச்சுரத்தருவரைப் பூக்கமழ்சாரற் புணர்மடநடையவர் புடையிடையார்ந்த, விடைச்சுர மேத்திய விசையொடுபாட லிவைசொலவல்லவர் பிணியிலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

**சுவாமி-இடைச்சுரநாதர், தேவி-இமயமடக்கொடியம்மை.**

இது கவுதமரிஷியும், சனற்குமார ரிஷியும் பூசித்துப் பேறு பெற்ற தலம். செங்கல்பட்டுக்கு வடகிழக்கில் 5 மைல்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### முதல் திருமுறை.

**28. திருக்கழுக்குன்றம்.** பண்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையபாலொரு காதிற்றூய குழைதாழ
ஏடுடையான் றன்றலைகலனாக இரந்துண்ணு
நாடுடையா னள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 1

கேணவல்லான் கேழல்வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகடன்னை யொருபாகங்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 2

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தன்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார் தொழுதேத்துங்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 3

துணையல்செய்தான் றூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளை யொருபாக [றை
இணையல்செய்யா விலங்கெயின்மூன் றுமெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 4

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 5

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்ட
ருள்ளமெல்லா முள்கிநின்றாங்கே யுடனாடுங்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 6

ஆதல்செய்தா னரக்கர்தங்கோனை யருவரையி
னோதல்செய்தா னொடிவரையின்கண் விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகடன்னோ டொருபாகங்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 7

இடந்தபெம்மா னேனமதாயு மனமாயுந்
தொடர்ந்தபெம்மான் றூமதிசூடி வரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 8

தேயநின்றான் திரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 9

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### 6-ம் திருமுறை. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை முதுபிணக் காடுடையானை முதலா னானை, ஆவணிலைந் துகந்தானை யமரர்கோனை யாலால முண்டுகந்த வையன் றன்னைப், பூவினின்மே னான்முகனு மாலும் போற்றப் புணர் வரிய பெருமானைப் புனிதன் றன்னைக், காவலனைக் கழுக்குன்ற மமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 1

பல்லாடு தலைசடைமே லுடையான் றன்னைப் பாய் புலித்தோ லுடையானைப் பகவன்றன்னைச், சொல்லோடு பொருளனைத்து மானான் றன்னைச் சுடருருவி லென்பறாக் கோலத் தானை, அல்லாத காலனைமுன் னடர்த்தான் றன்னை யாலின்கீ ழிருந்தானை யமுதா னானைக், கல்லாடை புனைந்தருளுங் காபா லியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. (3, 4, 5, 6, 7, 8, 9, 10)—2

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 7-ம் திருமுறை. பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொன்று செய்த கொடுமை யாற் பல சொல்லவே
நின்ற பாவ வினைக ளாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர் பிரானிடங்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிக ணித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே. 2

நீள நின்று தொழுமி னித்தலு நீதியா
லாளு நம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவாளன் முந்தி யுறைவிடம்
பிளிறு தீரப் பெருய்கைப் பெய்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைக டாரத் தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள் சூலப் படைய னெந்தைபி ரானிட
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே. 5

மடமு டைய வடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய வரவன் றான்பயி லும்மிடங்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. 6

ஊனமில்லா வடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடி நவிலும் மிடந்
தேனும் வண்டு மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. 7

அந்தமில்லா வடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்து மலர்க ணித்தலுஞ் சேரவே
கந்த நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. 8

பிழைக டாரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிட
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடங்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை
மல்லின மல்கு திரடோ ளூரன் வனப்பினாற்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-வேதகிரீஸ்வரர், தேவி-பெண்ணினல்லாளம்மை.

சதுர்வேதங்களே மலையுருவா யோங்கி நின்ற தலம். அஷ்டவசுக்களும், திருநந்திதேவரும், இந்திரனும், திருமால்முதலிய தேவர்களும், கோடிருத்திரர்களும் பூசித்துப் பேறுபெற்ற தலம். கிரேதா யுகத்தில் சண்டன் பிரசண்டன் என்னும்கழுகரசர்களுப், திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுவென்னும் கழுகரசர்களும், துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் கழுகரசர்களும் இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துச்சாபவிமோசன மெய்தி முத்தி யடைந்தனர். இக்கலியுகத்திலும் பூடா விருத்தா வென்னும் இரண்டு தவசிகள் சாபவசத்தால் கழுகுருவம் பெற்று முத்தியடையுமாறு வழிபட்டுவருகின்றனர். செங்கல்பட்டுக்கு கிழக்கு ஒன்பது மைல். பஸ் வழி.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### முதல் திருமுறை.

**29.** திரு அச்சிறுபாக்கம். பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்ன புரிசடைப்புரளப் பொருகடற் பவளமொ டழகிறம்புரையக்,குன்றிரண்டன்ன தோளுடையகலங் குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர், மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லியலாளை யோர் பாகமாப்பேணி, யன்றிரண்டுருவ மாயவெம்மடிக ளச்சிறுப்பாக்கம தாட்சிகொண்டாரே. 1

தேனினுமினியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவா, ரூனயந்துருக வுவகைகடருவா ருச்சிமேலுறைபவ ரொன்றலாதாரார், வானகமிறந்துவையகம் வணங்க வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையா, ராளை யரிவை போர்த்தவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே. 2

காரிருளுருவ மால்வரைபுரையக் களிற்றினதுரிவை கொண் டரிவைமேலோடி, நீருருமகளை நிமிர்சடைத் தாங்கி நீறணிந்தேறுகந் தேறியநிமலர், பேரருளாளர் பிற

வியிற்சேரார் பிணியிலர்கேடிலர் பேய்க்கணஞ்சூழ, வாரி
ருண்மாலை யாடுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்
டாரே. 3

மைம்மலர்க்கோதை மார்பினரெனவு மலைமகளவ
ளொடு மருவினரெனவுஞ், செம்மலர்ப்பிறையுஞ் சிறை
யணிபுனலுஞ் சென்னிமேலுடையரெஞ் சென்னிமேலு
றைவார், தம்மலரடியொன் றடியவர்பரவத் தமிழ்ச்சொ
லும்வடசொலுந் தாணிழற்சேர, வம்மலர்க்கொன்றை
யணிந்தவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 4

விண்ணுலாமதியஞ் சூடினரெனவும் விரிசடையுள்ளது
வெள்ளநீரெனவும். பண்ணுலாமறைகள் பாடினரெனவும்
பலபுகழல்லது பழியிலரெனவு, மெண்ணலாகாத விமைய
வர்நாளு மேத்தரவங்களோ டெழில்பெறநின்ற, வண்ண
லானூர்தி யேறுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்
டாரே. 5

நீடிருஞ்சடைமே லிளம்பிறைதுளங்க நிழறிகழ்மழு
வொடு நீறுமெய்பூசித், தோடொருகாதினிற் பெய்துவெய்
தாய சுடலையிலாடுவர் தோலுடையாகக், காடரங்காகக்
கங்குலும்பகலுங் கழுதொடுபாரிடங் கைதொழுதேத்த,
வாடரவாட வாடுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்
டாரே. 6

ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி யிளங்கிளையரிவையோ
டொருங்குடனாகிக், கூறுமொன்றருளிக் கொன்றையந்
தாருங் குளிரிளமதியமுங் கூவிளமலரு, நாறுமல்லிகையு
மெருக்கொடுமுருக்கு மகிழிளவன்னியு மிவைநலம்பகர,
வாறுமோர்சடைமே லணிந்தவெம்மடிக ளச்சிறுபாக்கம
தாட்சிகொண்டாரே. 7

கச்சுமொள்வாளுங் கட்டியவுடையர் கதிர்முடிசுடர்விடக்
கவரியுங்குடையும், பிச்சமும்பிறவும் பெண்ணணங்காய
பிறைநுதலவர்தமைப் பெரியவர்பேணப், பச்சமும்வலி
யுங் கருதியவரக்கன் பருவரையெடுத்ததிண் டோள்களை
யடர்வித், தச்சமுமருளுங்கொடுத்தவெம்மடிக ளச்சிறுபாக்
கம தாட்சிகொண்டாரே. 8

ரோற்றலாரேனும் வேட்டலாரேனு நுகர்புகர்சாந் தமோடேந்தியமாலைக், கூற்றலாரேனு மின்னவாரென்று மெய்தலாகாததோ ரியல்பினையுடையார். தோற்றலார் மாலு நான்முகமுடைய தோன்றலு மடியொடு முடியுறத் தங்க, ளாற்றலாற்காணா ராயவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 9

வாதுசெய்சமணுஞ் சாக்கியப்பேய்க ணல்வினை நீக்கிய வல்வினையாள, ரோதியுங்கேட்டு முணர்வினையிலாதா ருள்கலாகாததோ ரியல்பினையுடையார், வேதமும்வேத நெறிகளுமாகி விமலவேடத்தொடு கமலமாமதிபோ லாதியுமீறு மாயவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 10

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய மதுமலர்ப் பொய்கையிற் புதுமலர்கிழியப், பச்சிறவெறிவயல் வெறிகமழ்காழிப் பதியவரதிபதி கவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன் கழலலாற்பேணாக் கருத்துடைஞானசம்பந்தன தமிழ்கொண், டச்சிறுபாக்கத் தடிகளையேத்து மன்புடையடியவ ரருவினையிலரே. திருச்சிற்றம்பலம். 11

சுவாமி-பார்க்கபுரேஸ்வரர், தேவி-சுந்தரநாயகி.

இது தேவர்கள் பூசித்ததும், திரிபுரங்களை வெல்லும் பொருட்டுச் சென்ற சிவபெருமானுக்குத் திருத்தேராய் அமைந்துவந்த தேவர்கள் தம்முதவியாலன்றிச் சிவபெருமான் எவ்வாறு வெல்லுவரென்று அகங்கரித்தபோது, பரமேஸ்வரன் அத்தேரின்மீது திருவடி வைத்தான்ற அத்தேரின் அச்சுகள் இற்று வீழ்ந்த தலம். ரயிலடிக்கு தென்மேற்கில் அரை மைல்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### 3-ம் திருமுறை.

**30. திருவக்கரை.** பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்
பிறையணிகொன்றையினா னொருபாகமும்பெண்ணமர்ந்தா
மறையவன் றன்றலையிற் பலி கொள்பவன் வக்கரையில்
உறைபவ னெங்கள்பிரா னொலி யார்கழ லுள்குதுமே. 1

பாய்ந்தவன் காலனைமுன் பணைத் தோளியோர் பாகமதா
வேய்ந்தவ னெண்ணிறந்த விமை யோர்க டொழுதிறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்க ளெரி செய்தவன் வக்கரையிற்
றேய்ந்திள வெண்பிறைசேர் சடையானடி செப்புதுமே. 2

சந்திர சேகரனே யரு ளாயென்று தண்விசும்பில்
இந்திர னும்முதலா விமை யோர்க டொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் மன லாய்விழ வோரம்பினால்
மந்தர மேருவில்லா வளைத் தானிடம் வக்கரையே. 3

நெய்யணி சூலமொடு நிறை வெண்மழு வுமரவுங்
கையணி கொள்கையினான் கனன் மேவிய வாடலினான்
மெய்யணி வெண்பொடியான் விரி கோவண வாடையின்
மையணி மாமிடற்று னுறை யும்மிடம் வக்கரையே. [மேன்

ஏனவெண் கொம்பினொடும் மிள வாமையும் பூண்டுகந்து
கூனிள வெண்பிறையுங் குளிர் மத்தமுஞ் சூடிநல்ல
மானன மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
றேனவர் முப்புரங்க ளெரி செய்த தலைமகனே. 5

கார்மலி கொன்றையொடுங் கதிர் மத்தமும் வாளரவு
நீர்மலி யுஞ்சடைமே னிரம்பா மதி சூடிநல்ல
வார்மலி மென்முலையா ளொடும் வக்கரை மேவியவன்
பார்மலி வெண்டலையிற் பலி கொண்டுழ லுத்தமனே. 6

கானண வும்மறிமா னொரு கையதோர் கைமழுவாட்
டேனண வுங்குழலா ளுமை சேர்திரு மேனியினான்
வானண வும்பொழில்சூழ் திரு வக்கரை மேவியவ
னூனண வுந்தலையிற் பலி கொண்டுழ லுத்தமனே. 7

இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்ற இராவணனைக்
கலங்கவொர் கால்விரலாற் கதிர் பொன்முடி பத்தலற
நலங்கெழு சிந்தையனா யருள்பெற்றலு நன்களித்த
வலங்கெழு மூவிலைவே லுடை யானிடம் வக்கரையே. 8

காமனை யீடழித்திட் டவன் காதலி சென்றிரப்பச்
சேமமே யுன்றனக்கென் றருள் செய்தவன் தேவர்பிரான்
சாமவெண் டாமரைமே லய னுந்தர ணியளந்த
வாமன னும்மறியா வகை யானிடம் வக்கரையே. 9

மூடிய சீவரத்தர் முதிர் பிண்டிய ரென்றிவர்கள்
தேடிய தேவர்தம்மா லிறைஞ் சப்படுந் தேவர்பிரான்
பாடிய நான்மறையன் பலிக் கென்றுபல் வீதிதொறும்
வாடிய வெண்டலைகொண் டுழல் வானிடம் வக்கரையே. 10

தண்புன லும்மரவுஞ் சடை மேலுடை யான்பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்தழகா ரிறை வன்னுறை வக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்வல்லா ரவர் தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-சந்திரசேகரர், தேவி-வடிவம்மை.

இது சாபாநுக்கிரக சாமார்த்தியராகிய குண்டல மகாமுனியும், வக்கிராசுரனும், சந்திரனும் பூசித்துப் பேறுபெற்ற தலம். முண்டியம்பாக்கம் ரயிலடியிலிருந்து கிழக்கே 10-மைலில் உள்ளது. புதுச்சேரி வழியும் உண்டு.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

### 2-ம் திருமுறை.

**31.** திரு அரசிலி. பண்-பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிளமாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியந் தோன்மே
லாடன் மாசுண மசைத்த வடிகளுக் கிடமர சிலியே. 1

ஏறு பேணிய தேறி யிளமதக் களிற்றினை யெற்றி
வேறுசெய்ததனுரிவை வெண்புலால்கலக்கமெய்போர்த்த
ஊறு தேனவ னும்பர்க் கொருவனல் லொளிகொளொண் [சுடரா
றாறு சேர்தரு சென்னி யடிகளுக் கிடமர சிலியே.

கங்கை நீர்சடை மேலே கதமிகக் கதிரிள வன்மென்
கொங்கை யாளொரு பாக மருவிய கொல்லைவெள் ளேற்றன்
சங்கை யாய்த்திரி யாமே தன்னடி யார்க்கருள் செய்து
அங்கை யாலன லேந்து மடிகளுக் கிடமர சிலியே. 3

மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை யுண்பது பொன்றிகழ் கொன்றை
தக்க நூறிகழ் மார்பிற் றவளவெண் ணீறணிந் தாமை
யக்கி னாரமும் பூண்ட வடிகளுக் கிடமர சிலியே. 4

மானஞ் சும்மட நோக்கி மலைமகள் பாகமு மருவித்
தானஞ் சாவரண் மூன்றுந் தழலெழச் சரமது துரந்து
வானஞ் சும்பெரு விடத்தை யுண்டவன் மாமறை யோதி
ஆனஞ் சாடிய சென்னி யடிகளுக் கிடமர சிலியே. 5

பரிய மாசுணங் கயிறாப் பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
அரிய வாரமிர் தாக்கு மடிகளுக் கிடமர சிலியே. 6-7

வண்ண மால்வரை தன்னை மறித்திட லுற்றவல் லரக்கன்
கண்ணுந் தோளுநல் வாயு நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கை நரம்பாற் பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாரருள் செய்த வடிகளுக் கிடமர சிலியே. 8

குறிய மாணுரு வாகிக் குவலய மளந்தவ னானும்
வெறிகொ டாமறை மேலே விரும்பிய மெய்த்தவத் தோனுஞ்
செறிவொ ணாவகை யெங்குந் தேடியுந் திருவடிகான
அறிவொ ணாவுரு வத்தெம் மடிகளுக் கிடமர சிலியே. 9

குருளை யெய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துந்
திரளை கையிலுண் பவருந் தேருருஞ் சொல்லிய தேறல்
பாருளைப் பொய்யிலி மெய்யெ நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை யார்தர நல்கு மடிகளுக் கிடமர சிலியே. 10

அல்லி நீள்வயல் சூழ்ந்த வரசிலி யடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்த னற்றமிழ் பத்திவை நாளுஞ்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தமரர் தொழுதேத்த
வல்ல வானுல கெய்தி வைகலு மகிழ்ந்திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-அரசிலிநாதர், தேவி-பெரியநாயகி.

இது ரிஷிசிரேஷ்டராகிய வாமதேவமுனிவர் சகல லோக நாயகனாகிய மஹாதேவனைப் பூசித்துப் பேறுபெற்ற தலம். திருவக்கரைக்கு கிழக்கில் எட்டு மைல்.

# திருஞானசம்பந்த சுவாமிகள்.

## 2-ம் திருமுறை.

### 32. திரு இரும்பைமாகாளம். பண்-செவ்வழி

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரமூன் றெரித்த குழகன்னிட
மெண்டிசையும் புகழ்போய் விளங்கு மிரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சூழ்நின்ற மாகாளமே. 1

வேதவித்தாய் வெள்ளைநீறு பூசி வினையாயின
கோதுவித்தா நீறெழக் கொடிமா மதிலாயின
ஏதவித்தா யினதீர்க் குமிட மிரும்பைதனுள்
மாதவத்தோர் மறையோர் தொழநின்ற மாகாளமே. 2

வெந்தநீறு மெலும்பும் மணிந்த விடையூர்தியா
னெந்தைபெம்மா னிடமெழில் கொள்சோலை யிரும்பைதனு [ள்
கந்தமாய பலவின் கனிகள் கமழும்பொழில்
மந்தியேறிக் கொணர்ந்துண்டுகள்கின்ற மாகாளமே. 3

நஞ்சுகண்டத் தடக்கி நடுங்கும் மலையான்மகள்
அஞ்சவேழ முரித்த பெருமா னமரும்மிட
மெஞ்சவில்லாப் புகழ்போய் விளங்கும் மிரும்பைதனுள்
மஞ்சிலோங்கும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளமே. 4

பூசுமாசில் பொடியான் விடையான் பொருப்பான்மகள்
கூசஆனை யுரித்தபெரு மான்குறை வெண்மதி
யீசனெங்க ளிறைவ னிடம்போ லிரும்பைதனுள்
மாசிலோர்கண் மலர்கொண் டணிகின்ற மாகாளமே. 5

குறைவதாய குளிர்திங்கள் சூடிக் குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்தசடை
இறைவனெங்கள் பெருமா னிடம்போ லிரும்பைதனுள்
மறைகள்வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே. 6

பொங்குசெங்கண் ணரவும் மதியும் புரிபுன்சடைத்
தங்கவைத்த பெருமானென நின்றவர் தாழ்விடம்
எங்குமிச்சை யமர்ந்தா னிடம்போ லிரும்பைதனுள்
மங்குறோயும் பொழில்சூழ்ந்தழகாய மாகாளமே. 7

நட்டத்தோடு நரியாடு கானத்தெரி யாடுவான்
அட்டமூர்த்தி யழல்போலுருவ னழகாகவே
இட்டமாக விருக்கும் மிடம்போ லிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கு மாகாளமே. 8

அட்டகாலன் றனைவவ் வினைவ் வரக்கன்முடி
எட்டுமற்று மிருபத்திரண்டும் மிற வூன்றினான்
இட்டமாக விருப்பா னவன்போ லிரும்பைதனுள்
மட்டுவார்ந்த பொழில்சூழ்ந் தெழிலாரு மாகாளமே. 9

அரவமார்த்தன் றனலங்கை யேந்தி யடியும்முடி
பிரமன்மாலும் மறியாமை நின்ற பெரியோனிடம்
குரவமாரும் பொழிற்குயில்கள் சேரும் மிரும்பைதனுள்
மருவிவானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே .10

எந்தைபெம்மா னிடமெழில் கொள்சோலை மிரும்பைதனுள்
மந்தமாய பொழில்சூழ்ந் தழகாரு மாகாளத்தில்
அந்தமில்லா வனலாடு வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட வல்லார் பழிபோகுமே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-மாகாளநாதர், தேவி-குயின்மொழிநாயகி.

இது ஹரிஹர புத்திரருடைய சேனைத்தலைவராகிய மகாகாளர் பூசித்து இஷ்டசித்தியடைந்த தலம். அரசிலிக்கு கிழக்கில் 3-மைலில் உள்ளது.

தொண்டைநாட்டுத் தேவாரப்பதிகங்கள்.

முற்றுப்பெற்றன.

---

அன்பே சிவம். கடவுள்.

செல்வம் நிலையல்ல. மரணம் நிச்சயம்.

கடவுளை மறவாதீர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# பலி இடாதீர்கள்.

"நோன்பென்பது கொன்று தின்னாமை."

ஜீவன்களின் துன்பத்தை நீக்குவதே ஜீவகாருண்யம். அன்பு உண்டானால் சிவானுபவம் உண்டு. பசியினால் அறிவு முதலிய பத்தும் மறைந்து உயிர் போகும் அடையாளம் காண்கிறது. 32 தர்மங்களில் அன்னதானம் முதன்மை. எவ்வுயிரிடத்தும் அன்பாயிருத்தலே ஜீவகாருண்யம். எல்லாமிருகங்களும் நமக்குத் தொண்டு செய்கின்றன. குழந்தைகளைப்போல் பிராணிகளை வளர்த்து நாம் நோய் வாய்ப்படின் மருந்து சாப்பிடாமல் **பூசாரிகள்** பிழைக்க அம்மன் ஆடு, கோழி புசிப்பதாக எண்ணி பிரார்த்தனை செய்கிறோம். நகரங்களில் ஏமாந்தவர்கள் வீட்டின் இண்ணையில் உள்ள **மாரியம்மன்** சிலைக்கு தை, ஆடி, மாதங்களில் விசேஷபலி பூசை உண்டு, பிரார்த்தனை இருந்தால் உயிருடன் கோயிலில் விட்டு விடுவதே முறை. அம்மன்முன் நிறுத்தி திரை போட்டு வெட்டாமல், அம்மன் தானே உயிரை வாங்கிக்கொள்ளட்டும். சுவாமிக்கு காட்டி நாமே புசிக்கும் பழம், தேங்காய்வகை போதும். பரிசுத்தமே கடவுளின் தன்மை, கோயிலைக் கொலைக்களமாக்காதீர்கள். அன்பே நமது மதம். கொலையால் குடும்பம் நசித்துவிடும். தொழுநோய் உண்டாகும். வேறு எம்மதத்தாரும் கோயிலில் ஜீவவதை செய்வதில்லை. பலியிடுதலை நாம் ஒருங்கே முயற்சிசெய்து நிறுத்தவேண்டும். கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக.

திருச்சிற்றம்பலம்.

**அ. சோமசுந்தரம்,**

92, காமாட்சியம்மன்கோயில் தெரு, காஞ்சிபுரம்.

பத்மா பிரஸ் காஞ்சி.—ஓ. 24. 319/500 (ப. 29—116வரை)

# தொண்டை நாட்டுத் தேவாரம்

## உள்ளுறை


| நெ. | ஸ்தலப் பெயர் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | திருவேகம்பம் | (காஞ்சி) | 2—20 |
| 2 | திருமேற்றளி | ,, | 21 |
| 3 | திருவோணகாந்தன்றளி | ,, | 24 |
| 4 | திருவனேகதங்காவதம் | ,, | 25 |
| 5 | திருநெறிக்காரைக்காடு | ,, | 27 |
| 6 | திருக்குரங்கணின் முட்டம் | | 29 |
| 7 | திருமாகரல் | | 30 |
| 8 | திருவோத்தூர் | | 32 |
| 9 | திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | | 34 |
| 10 | திருவல்லம் | | 36 |
| 11 | திருமாற்பேறு | | 38 |
| 12 | திருவூறல் (தக்கோலம்) | | 46 |
| 13 | திருஇலம்பையங்கோட்டூர் | | 47 |
| 14 | திருவிற்கோலம் (கூவம்) | | 50 |
| 15 | திருவாலங்காடு | | 52 |
| 16 | திருப்பாசூர் | | 59 |
| 17 | திருவெண்பாக்கம் | | 64 |
| 18 | திருக்கள்ளில் (திருக்கள்ளம்) | | 66 |
| 19 | திருக்காளத்தி (காளாஸ்திரி) | | 68 |
| 20 | திருவொற்றியூர் | | 75 |
| 21 | திருவலிதாயம் (பாடி) | | 88 |
| 22 | திருமுல்லைவாயில் (வட) | | 89 |
| 23 | திருவேற்காடு | | 92 |
| 24 | திருமயிலாப்பூர் (சென்னை) | | 93 |
| 25 | திருவான்மியூர் | | 95 |
| 26 | திருக்கச்சூராலக் கோயில் | | 100 |
| 27 | திருவிடைச்சுரம் | | 102 |
| 28 | திருக்கழுக்குன்றம் | | 104 |
| 29 | அச்சிறுபாக்கம் | | 108 |
| 30 | திருவக்கரை | | 110 |
| 31 | திருவரசிலி (ஒழுந்தியாப்பட்டு) | | 112 |
| 32 | இரும்பைமாகாளம் (இரும்பை) | | 114 |

# பிழை திருத்தம்

| பக்கம் நெ. | பாட்டு எண் | வரி எண் | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| 7 | 8 | 4 | கடவகியிடங் | கடவுநீயிடங் |
| 11 | 5 | 4 | மயிர்தக் | மமிர்தர்க் |
| 19 | 1 | 2 | பரவர் | பாரவர் |
| 23 | 5 | 1 | அ(ன்)மனை | அன்னை |
| 30 | 9 | 4 | நிற்கிலர்வே | காண்டலரிதே |
| 32 | 9 | 2 | மருவுவுண் | மருவுண் |
| 33 | 2 | 3 | சேயும்மை | ரேயும்மை |
| | 2 | 4 | ரடையீ | சடையீ |
| 46 | 2 | 4 | மொத்தல் | மொத்தல |
| 48 | 1 | 2 | பைம்மொழி | பைம்பொழி |
| | 2 | 2 | திருமமனென | திருமலனென |
| | 3 | 3 | லேங்ல்ய | லேந்திய |
| 67 | 8 | 2 | புலகு | புல்கு |
| 78 | 5 | 1 | கமையமே | சமையமே |
| 80 | 2 | 4 | வெண்கடலை | வெண்டலை |
| 81 | 10 | 2 | தரையினால் | வரையினால் |
| 92 | 7 | 3 | இக்கமே | தீர்க்கமே |
| 94 | 7 | 2 | காண்டான் | கண்டான் |
| 96 | 5 | 1 | தாம்பாழி | தாம்பயில் |
| 97 | 3 | 1 | சமணியனை | மேணியனை |
| 98 | 7 | 4 | வுன்னையுல்லா | யுன்னையல்லா |
| 99 | 4 | 2 | வசிக்கழி | வழிக்கமு |
| | 7 | 1 | இணங்கு | நுணங்கு |
| 101 | 8 | 4 | ஆனைக் | ஆனைத் |
| 106 | 2 | 1 | பல்லாடு | பல்லாண்டு |
| 111 | 6 | 4 | லுத்தமனை | பாண்மையனை |
| 112 | 1 | 2 | குலவி | குலாவி |
| 113 | 9 | 3 | கான | காண |
| | 10 | 3 | பாருளை | பொருளை |